தமிழ்நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக்கிழமை, 1975 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Selection Grade Posts

* 190 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that the Secretarial Assistants **have** not yet been promoted to Selection Grade from 1st January 1971 on the basis of percentage; and

(*b*) if so, whether the Government will issue **necessary** orders for the same?

தேர்வுத்தர பதவிகள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) அலுவலகவியல் உதவியாளர்களுக்கு 1—1—1971 முதற்கொண்டு சதவீத அடிப்படையில் தேர்வுத்தர பதவி உயர்வு அளிக்கப்படவில்லை என்பது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குத் தேவையான ஆணைகளை அரசு பிறப்பிக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. பி. ஆர். தாமஸ்: சதவிகித அடிப்படையில் தேர்வு நிலை 1—1—1971லிருந்து வழங்கப்படுகிறது. 10 ஆண்டு அடிப்படையில் 1—4—1974லிருந்து வழங்கப்படுகிறது. இந்த அடிப்படையில் அவர்களுக்கு அறிவிக்கப்படும்போது வழங்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல் நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்பு ஆசிரியர்களுக்கும் 10 ஆண்டுக்கால அடிப்படையில் தேர்வு நிலை வழங்க வேண்டுமென்று உத்தரவிட்டிருந்தாலும், சிறப்பு ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும் விளக்கம் கேட்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. என்ஜினியரிங் இன்ஸ்ட்ரக்டர்ஸ், அக்ரிகல்சுரல் இன்ஸ்ட்ரக்டர்ஸ், செக்ரடேரியல் அஸிஸ்டெண்ட்ஸ் என்று இருக்கும்போது, ரூ. 300 சம்பளம் வாங்குகிறவர்களுக்கு இந்த கிரேட் கொடுக்கலாமென்றும், ஆனால் ரூ. 375 வாங்கி ரூ. 650க்கே போகிறவர்களுக்குக் கொடுப்பது சரியாகாது என்றும் நிதித் துறையினர் மறுப்பு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த விளக்கங்கள் பெற்றதற்குப் பிறகு, ரூ. 300 அடிப்படை வாங்குகிறவர்களுக்கும், பி. டி. ஆசிரியர் வாங்குகிற அடிப்படையிலே கிடைத்துவிடும். தற்போது நிதித்துறையைக் கலந்து கொண்டு நாம் முடிவு செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால்தான், காலத் தாழ்வு ஏற்பட்டிருக்கிறது. விரைவிலே அதுபற்றி அறிக்கை விடுவோம்.

* 191 *Q.*—Thiru P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Government granted Selection Grade Scale of Pay to all those who are in the pay scale of Rs. 300–15–420–20–500 and who have completed 10 years of service; and

(*b*) if so, the reason for the denial of Selection Grade to erstwhile Grade-I Language Teachers, Secretarial Assistants, Agricultural Instructors etc., who also draw the same scale of pay ?

திரு. பி. ஆர் தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்); மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ரூ. 300—15—420—20—500 சம்பள வீதத்தில் பணியாற்றி 10 ஆண்டுகள் பணி முடித்த அனைவருக்கும் தேர்வுத்தர சம்பள வீதத்தை அரசு வழங்கியுள்ளது என்பது உண்மையா?

(இ) ஆமெனில், இதே சம்பள வீதத்தைப் பெறுகிற முன்னாள் முதல்நிலை மொழி ஆசிரியர்கள், அலுவலகவியல் உதவியாளர்கள், வேளாண்மைப்பள்ளி ஆசிரியர்கள் போன்றோருக்கு தேர்வுத்தரம் அளிக்க மறுப்பதற்கான காரணம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) அரசாணை எண். 519, கல்வி, நாள் 31—3—1973-ல் பி.டி. ஆசிரியர்களுக்கும், முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும், சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும்,

1975 மார்ச் 27]

பத்தாண்டு காலப் பணி அடிப்படையில் தேர்வு நிலைப்பதவி அளிக்க ஆணையிடப்பட்டது. அதன்படி பி. டி. ஆசிரியர்களுக்கும் முதல்நிலைத் தமிழாசிரியர்களுக்கும் தேர்வுநிலை அளிக்கப்பட்டது. தேர்வு நிலை அளிக்கப்பட வேண்டிய, வினாவில் குறிப்பிட்டுள்ள, சிறப்புப் பிரிவு ஆசிரியர்களுக்கும் தேர்வுநிலை கொடுப்பதை தெளிவாக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது.

Grade-I Ex-Hindi Pandits

* 192 *Q.*—THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S. Ganapathi) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) the number of Grade-I Ex-Hindi Pandits in the Revenue District of Tiruchirappalli, working in 'B' Wing Schools, who have passed the Pulavar Examination of the Madras University and working as Secondary Grade Teachers, without being absorbed as Grade-I Tamil Pandits; and

(*b*) the reason therefor ?

முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்கள்.

திரு. பி. ஆர். தாமஸ் (திரு. கே. எஸ். கணபதி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருச்சிராப்பள்ளி ரெவின்யூ மாவட்டத்தில் உள்ள "பி" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் முன்னாள் முதல்நிலை ஹிந்தி ஆசிரியர்களில் எத்தனை பேர் சென்னைப் பல்கலைக் கழகப் புலவர் தேர்வில் தேறி செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தும் முதல்நிலைத் தமிழ்ப் பண்டிதர்களாக நியமிக்கப்படவில்லை ?

(இ) அதற்கான காரணங்கள் யாவை ? -

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஒருவர் தான்.

(இ) இரு மொழிக் கொள்கையைக் கடைப் பிடித்ததன் காரணமாக முன்னாள் ஹிந்தி மற்றும் இதர மொழிப் பண்டிதர்களும் அன்றைய தினத்தில் அவர் அவர்களது பொதுக் கல்வித்தகுதிகளைப் பொறுத்து ஆசிரியரல்லாத பதவிகளிலோ அல்லது நடுநிலை, இடைநிலை மற்றும் பி. டி. ஆசிரியர்களாகவோ நியமிக்கப்பட்டனர். அவர்கள் எந்தப் பதவியிலிருந்தாலும் அவர்களது ஊதியத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஆசிரியருக்கு மாற்றுப் பதவி அளிக்கும் பொழுது முதனிலை தமிழ்ப் பண்டிதராவதற்கு தகுதி பெற்றிருக்கவில்லை யாதலால் முதனிலை தமிழ்ப் பண்டிதராக எடுத்துக் கொள்ளப்படவில்லை.

Incentive Increments to Physical Training Instructors.

*193 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Education be pleased to state:

(*a*) whether it is a fact that, as per G.O. Ms. No. 42, Education, dated 10-1-1969, two incentive increments are given to those Physical Training Instructors, Grade-I, who have passed Diploma in Physical Education; and

(*b*) if so, whether Instructors who have passed B.P.Ed., will be given the same?

உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு ஊக்கச் சம்பள உயர்வு.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) உடற்பயிற்சிக் கல்வி தகுதிப் பட்டையத் தேர்வில் தேர்ச்சியடைந்த முதல்தர உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கு, கல்வித்துறையைச் சேர்ந்த 10—1—1969ஆம் நாளிட்ட 42ஆம் அரசாணையின்படி இரண்டு ஊக்கச் சம்பள உயர்வு கொடுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், உடற்பயிற்சிப் பட்டப் படிப்பில் தேர்வு பெற்றுள்ள உடற்பயிற்சி ஆசிரியர்களுக்கும் அவ்வாறு சம்பள உயர்வு கொடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இப்பொருள்மீது தமது கருத்துரை அரசுக்கு அனுப்புவதாக பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். அக்கருத்துரு பெறப்பட்டதும் அதன்மீது தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. பி. ஆர். தாமஸ்: தலைவரவர்களே, அரசு ஆணை 42ல் "டிப்ளமா இன் எஜுகேஷன்" பெற்றிருந்தால் இரண்டு ஊக்க ஊதியம் கொடுக்கலாமென்று இருக்கிறது. ஏறத்தாழ அதற்கு ஏற்ற வகையிலே அந்தத் தகுதி உடையதாகத்தான் "பேச்சலர் ஆப் பிசிகல் எஜுகேஷன்" இருப்பதனால், அவர்களுக்கும் இந்த இரண்டு ஊக்க ஊதியம் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பள்ளிக் கல்வி இயக்குநர் அந்த அளவுக்கு அவர்களுடைய பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். அரசின் பரிசீலனையில் இது இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

1975 மார்ச் 27]

Patients who Died of Rabies

* 194 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that some patients died due to Rabies in the Government Erskine Hospital, Madurai, during the month of December 1974, inspite of the full course of preventive injections; and

(*b*) if so, the action proposed to be taken thereon to create confidence in the minds of the people regarding this prevention?

வெறி நாய்க்கடியால் இறந்த நோயாளிகள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வெறி நாய்க்கடி தடுப்பு ஊசிகள் முழு அளவுக்குப் போடப்பட்ட போதிலும், 1974ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் நோயாளிகள் சிலர் வெறி நாய்க்கடி நோயினால் (Rabies) இறந்தது உண்மையா?

(இ) ஆமெனில், இந்நோய்த்தடுப்பு குறித்து மக்கள் மனதில் நம்பிக்கை ஊட்ட எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வெறிநாய்க்கடி தடுப்பு ஊசிகள் முழு எண்ணிக்கையில் போட்ட போதிலும் ஒரே ஒரு நோயாளி மட்டும் இறந்து விட்டார்.

(இ) வெறி நாய்க்கடிக்கு வெறிநாய்க்கடி தடுப்பு சிகிச்சை முறை நூற்றுக்கு நூறு பயன் தருவதில்லை. வெறி நாய் கடித்தவுடன் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டால், அந்நோய் பற்றிக் கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவு. வெறி நாய்க்கடி சிகிச்சை குறித்து பரவலான பிரச்சாரம் செய்வதன் மூலம் மக்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய பிரச்சாரம் மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, கடித்த நாய் வெறிநாயாக இல்லாமல், சாதாரண நாயாக இருந்து ஊசி போட்டால், அந்த ஊசியினுடைய "ரிஆக்ஷன்" மிகவும் ஆபத்தில் கொண்டுபோய் விடுமா, உயிருக்கு ஆபத்தில் கொண்டுபோய் விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 27

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் கேள்விப் பட்டதைத்தான் சொல்ல முடியும். சாதாரண நாய் கடித்திருந்து சந்தேகம் இருந்தால், ஊசி போடலாமென்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் அதுபற்றித் திட்டவட்டமாக நான் சொல்லுவது தவறாகும்.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாதிக்கப்பட்ட குடும்பம் என்ற சொல் எத்தனையோ வகையாக, எத்தனையோ நிலையில் உள்ளவர்களுக்குப் பொருந்தும். பாம்பு கடித்து இறந்து போகிறவர்கள் நிறைய இருப்பார்கள். ஆகவே நாய் கடித்தது, பாம்பு கடித்தது, பூனை கடித்தது என்று இறந்து போகிறவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப் பட்டால், அப்புறம் வேறு மாதிரி யாருமே இறக்க மாட்டார்கள். ஆகவே அப்படி இந்தக்கருத்தை பரவலாகக் கொள்ளலாமா என்பது மிகவும் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இப்போது நகரங்களிலே, கிராமங்களிலே யாராலும் பராமரிக்கப்படாமல் ஊதாரித்தனமாகத் திரியும் "ஸ்ட்ரே டாக்ஸ்"ஐப் பிடிப்பதற்கு நாளுக்கு நாள் கஷ்டம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவைகளைப் பிடிப்பதற்கு நகராட்சியிலே சரியான ஆள் கிடைக்கமாட்டானென்கிறார்கள். இதற்கு முன்னாலே, ஒரு 10 வருஷத்திற்கு முன்னாலே எல்லாம் நாயைப் பிடிப்பது "ஈசியாக" இருந்தது இப்போது அந்தத் தொழிலைக் கைவிட்டிருக்கிறார்கள். இப்போது நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நகரத்திலே அது மாதிரி ஒரு தொழிலைக் கைவிட்டு விடுவதற்குத்தான் நினைக்கிறார்களே தவிர, பிடிப்பதில்லை. சாமர்த்தியமாகப் பிடித்துக்கொண்டு வருவதற்கு ஏதாவது ஒரு திட்டம் தயாரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாகரிகம் வளருவது என்பதே 4 அணவுக்கு நடைபெற்ற காரியம் இப்போது இரண்டு ரூபாய்க்கு நடைபெறுகிறது என்பதுதானே தவிர, அதை விட நாகரிகம் அதிகமாக வளரவில்லை. போதுமான கூலி கிடைத்து ஒரு 5 அல்லது 10 நாய்களைப் பிடிக்கின்றவர்களுக்கு ரூ. 8 அல்லது ரூ. 10 கிடைக்கும் என்றால், நிச்சயம் அதைச் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். சென்னை நகரிலே இந்த நாய்களுடைய எண்ணிக்கை பெருகிவருகிற காரணத்தால், அவற்றைப் பிடிப்பதை ஒரு லாபகரமான தொழிலாக ஆக்கினால், அதைப் பிடிக்கிற தொழில் வெற்றிகரமாக நடைபெறுமென்று மாநகராட்சியினுடைய சிறப்பு அலுவலர் கருதி, இப்படி பிடிக்கப்பட்ட நாய்களுடைய எண்ணிக்கையை அந்த நாய்த் தோலைக் கணக்கிடுவதன் மூலமாக சரிபார்த்து கணக்கிட்டு, நாய்த் தோலையே பாடம் செய்து, பதனிட்டு, அதிக விலைக்கு விற்கக் கூடிய நிலைமையை இன்றைய தினம் உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே, திருச்சி, ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலே உள்ள நாய்களுக்கும் கூட அந்தத் தோலுக்கு விலை கிடைக்கிற முறையிலே பிடிக்கப்பட்ட நாய்த் தோல்களைப் பயன்படுத்த ஆரம்பித்தால், நிச்சயமாக அங்கேயும் பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

1975 மார்ச் 27]

THIRU G. VASANTHA PAI : In view of the statement just now made by the Hon. Minister that there is a profitable business going on in the sale of the skins of the dogs, will the Hon. Minister at least take precaution that good dogs are not just caught and taken away by these Dog Vans? In Sastri Nagar and its neighbouring localities, good dogs like 'Dashens' which just come out to the roadside are being caught, merely because they do not have the tokens given by the Corporation, even though they had the collar. I hope things like this will be avoided in future.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நகரசபையிலே, நாய்களைப் பிடிப்பதைப் பொறுத்த வரையில், லைசென்ஸ் இல்லாத நாய் எதுவாக இருந்தாலும், அதைப் பிடிப்பார்கள். லைசென்ஸ் இல்லாமல் நகரங்களிலே நாய்களை வைத்திருப்பது பல்வேறு விதமான இடையூறு களுக்குக் காரணமாக இருக்கும். ஆகவே, நகரசபை வெறி நாய்களை மட்டும் பிடிப்பது என்ற முறையை மேற்கொள்ள முடியாது. பல நாய்கள் வெறிநாய்களாக ஆகிவிடாமல் இருப்பதற்காக, சுற்றி வருகிற, யாருடைய பொறுப்பிலேயும் இல்லாத லைசென்ஸ் பெற்ற அடையாளம் கட்டியிராத அப்படிப்பட்ட நாய்களைப் பிடிக்கத்தான் நேரிடும். ஜாதி நாய்கள் என்றால், லைசென்ஸும் அதனோடு எப்போதும் இருக்க வேண்டும்.

MR. *CHAIRMAN* : My dog also had the same experience but fortunately it later returned home safely.

THIRU G. VASANTHA PAI : Sir, my neighbour had a very fine dog "Dashen". One fine morning this van came and took it away, because this metal disc which is supplied by the Corporation was not tied in the collar since it was found to be harmful to this dog. I think it would be better if some other disc, in plastic or some such other, is given. Though he had taken the licence for the dog, the metal disc which was harmful to the dog was not tied in the collar. Despite the taking of the licence, the dog was taken away by the van. May I know whether such instances could be avoided?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Such nice dogs, when caught and taken by the van, would not be destroyed but would be kept for at least 24 hours. The public can intimate to the authorities concerned and get the dog released.

MR. CHAIRMAN : The problem of dogs seems to have drawn the attention of the hon. Members very much. Yes. **Thiru A. R. Damodaran.**

THIRU A. R. DAMODARAN : Our complaint is that they do not keep the licence. They keep it in their houses, Sir.

Watch and Ward staff in Jails

*195 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government (i) to reduce and (ii) to revise the work-load of the Watch and Ward Staff in Jails; and

(*b*) if so, the details thereof?

சிறைச்சாலைக் காவலாளர்கள்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) சிறைச்சாலைக் காவலாளர்களின் வேலைப் பளுவை (i) குறைக்க (ii) மாற்றியமைக்க அரசிடம் ஏதும் செயற் குறிப்பு உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-10)

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி அரசாங்கத்திற்கு சிறைக் காவலாளர்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பொதுவாக இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் அதிகமான எண்ணிக்கையில் வார்டர்களைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அத்துறைத் தலைவர் அனுப்பியிருக்கின்றார்கள். ஆண்டு தோறும் பரிசீலிக் கப்படும் ஒன்றாகும் இது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, காவலர்கள் 24 மணி நேரமும் தங்கள் அலுவல்கள் காரணமாக சிறையிலேயே இருக்க வேண்டி இருக்கின்றது. இதைக் குறைப்பதற்காவது, அவர்களுடைய வேலைப் பளுவினைக் குறைப்பதற்காவது அரசாங்கம் இதைப் பற்றி விரைவான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

1975 மார்ச் 27]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, அவ்வப் பொழுது அவர்களுடைய வேலைப்பளுவைப் பரிசீலித்து, வேலைப் பளு அதிகமாக இருக்குமானால் உடனடியாக தேவையான அளவிற்கு வார்டர் களை நியமிப்பது என்று ஒரு முடிவெடுத்திருக்கிறோம். இந்த ஆண்டு பார்ட் இரண்டு ஸ்கீமில் இது போன்று அதிகமான அளவிற்கு வார்டர்கள் தேவை என்று எழுதியிருக்கின்றார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள் 196–ம், 197–ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

Operation of Pump-sets with Alcohol

* 198 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Engineers of Agriculture Department experimented on the operation of pumpsets with alcohol; and

(b) if so, the details thereof ?

சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்தல்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சாராயத்தின் மூலம் விசை ஏற்ற இயந்திரங்களை இயங்கச் செய்ய, விவசாயப் பிரிவு பொறியாளர்கள் முயன்றது உண்மையா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை@ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, அளிக்கப்பட்டுள்ள விவரக் குறிப்பில், இது பரிசீலனை அளவில் இருப்பதாகத்தான் சொல்லப்பட்டிருக் கின்றது. எப்போது அந்த ஆய்வு முடிந்து, அது பரீட்சார்த்தமாக வரும் என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ? இன்றைய நெருக்கடி யான நிலையில் இதிலே விரைவான நடவடிக்கை எடுத்தால், விவசாயி களுக்கு இது லாபகரமாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

@ ~~86—87~~ 373-374 ஆம் பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இது பற்றிய சோதனைகள் எல்லாம் முடிந்து விட்டன. இதிலே என்ஜின்கள் ஓடுகின்றன என்பதையும் பார்த்தாகிவிட்டது. நமது வேளாண்மைத்துறையில் உள்ள தொழிற்சாலையில் ஐந்து என்ஜின்கள் இருக்கின்றன. இதை உபயோகித்து அவற்றைக்கூட ஓட்டிப் பார்க்கலாம். ஆனால் இந்த எரி சாராயத்தை, வேளாண்மைத் துறையில் உள்ள பம்பு செட்டுக்களாகப் பயன்படுத்தக்கூடிய நிலையில் இல்லை. காரணம் எரி சாராயம் ப்ளாஸ்டிக் தொழிற்சாலைகளுக்கு மூலப் பொருளாகத் தேவைப்படுகின்றது. ஆகவே, பம்பு செட்டுக்களுக்கு டீசல் எண்ணெயையே உபயோகித்துக்கொண்டு, எரி சாராயத்தைத் தொழிற்சாலைகளுக்குப் பயன்படுத்த வேண்டியிருக்கின்றது.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா 199 ஒத்திவைக்கப்படுகிறது.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. ஒத்திவைப்புத் தீர்மானம்.

சென்னை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்டுள்ள கலகம் குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : "24—3—1975 இரவு முதல் 25—3—1975 மத்தியானம் வரையில் தொடர்ந்து சென்னையிலுள்ள சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் கலகம் ஏற்பட்டு சில வெளியாரிகளின் உதவியுடன் சில மாணவர்கள் உள்ளே சென்று பல மாணவர்களின் அறைகளிலுள்ள பூட்டுக்களையும் பெட்டிகளையும் உடைத்து சுமார் ஐம்பதாயிரம் ரூபாய் வரை பெறக்கூடிய சாமான்களையெல்லாம் கொள்ளையடித்துக்கொண்டு போய் விட்டார்கள். மாணவர்களிலும் சிலருக்கு இரத்த காயம் ஏற்பட்டு, சென்னை அரசாங்கப் பொது ஆஸ்பத்திரியிலும், வெளியிலும் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். போலீசுக்குத் தகவல் கொடுத்தும் சரியான நடவடிக்கை எதுவும் எடுக்காமல் மிகவும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் அதைப்பற்றி விவாதித்து மாணவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டிய தன் அவசியத்தைக் குறித்து விவாதிக்க சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டும்"

என்ற ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் திரு. கே. ராஜாராம் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள். இது எவ்வாறு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் கீழ் வரும் என்பதை அவர் சுருக்கமாக விளக்கிப் பேசும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1975 மார்ச் 27]

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, 24-ம் தேதியன்று இரவு சட்டக் கல்லூரி மாணவர்கள் தங்கியுள்ள விடுதியில், மாணவர்களிடையிலே கோஷ்டிப் பூசல்கள், சண்டைகள் ஏற்பட்டு, அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் ஒரு பயங்கரமான நிலைமை உருவாயிற்று. அதன் பேரிலே போலீஸுக்கு டெலிபோன் செய்து பின்னர் ஓர் உதவிக் கமிஷனரும், சில போலீஸ் அதிகாரிகளும், மற்றும் போலீஸ்காரர்களும் அங்கே வந்திருக்கின்றார்கள். இவர்கள் வந்திருந்தபோதே இந்தக் கோஷ்டிச் சண்டையில் ஒரு கோஷ்டியினர் வெளியிலிருந்து மாணவர்கள் அல்லாத ஒரு சிலரை அழைத்து வந்து, தங்களுக்கு விரோதமாக உள்ள கோஷ்டியைச் சார்ந்த மாணவர்களை அடிப்பதற்காக ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இவர்கள் தங்கள் கையில் கைக்குட்டைகளைக் கட்டிக் கொண்டு, தங்களை மட்டும் அடிக்காமல் கை குட்டை கட்டிக்கொள்ளாமல் யார் யார் இருந்தார்களோ அவர்களையெல்லாம் இசன்படி அடித்திருக்கின்றார்கள்.

மாணவர்களுக்குள் சண்டை சச்சரவு வருவதுபற்றி நாம் நிறைய அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. இன்று சண்டை போட்டுக்கொள்ளுவார்கள், நாளைக்குச் சேர்ந்துகொள்ளுவார்கள். அதைப் பெரிய காரியமாக எண்ணி நான் இந்த ஒத்திவைப்புப் பிரேரணையைக் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கவில்லை. ஆனால் போலீஸ் அதிகாரிகள் வாசலில் இருக்கும்போதே மாணவர்கள் அல்லாதவர்கள் வெளியிலிருந்து வந்து, உள்ளே ஒரு கோஷ்டி மாணவர்களை அடித்ததோடு அவர்களுடைய அறைகளிலிருந்து ட்ரான்ஸிஸ்டர் ரேடியோக்கள், கைக்கெடியாரங்கள், விலை உயர்ந்த பேண்டுகள், ஷர்ட்டுகள் எல்லாவற்றையும், சுமார் 40 அல்லது 50 ஆயிரம் ரூபாய் பெருமான பொருள்களை எடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். இப்படியெல்லாம் நடந்தும்கூட, போலீஸ் உள்ளே வந்து இதைத் தடுக்கவில்லை. உள்ளே வர மறுத்துவிட்டார்கள். இப்படியே போய்க்கொண்டிருந்தால், பிள்ளைகள் கதி என்ன என்று நான் பார்க்க வேண்டும். பி.ஏ. படித்துவிட்டு பி.எல். படிக்க வருகின்றார்கள் அந்தக் கல்லூரிக்கு. பெற்றோர்கள் வெளி ஊர்களிலே இருக்கின்றார்கள். அவர்கள் இதைப்பற்றித் தந்தி மூலம் அல்லது பத்திரிகைகள் மூலம் அறியும்போது அவர்களுடைய மனம் எப்படிப் பதைக்கும் என்று எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. வெளியிலிருந்து ஆட்களைக் கொண்டு வருவது, உள்ளே இருப்பவர்களை அடிப்பது இப்படிப்பட்ட நிலைமையில் உடனடியாக நடவடிக்கை எடுக்கத் தவறினால், மிகவும் ஆபத்தாக முடியும். இது இப்படியே போய்க்கொண்டிருந்தால், மாணவர்களுடைய சண்டை கல்லூரிகளுக்கு வெளியேயும் போய்விடக்கூடும். இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இந்த முக்கிய பிரச்சினைமீதுதான் விவாதம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்துகிறேன். சாதாரணமாக ஒத்திவைப்புப் பிரேரணை என்று கொண்டுவருவதில்லை. அவசியமானால் இதுபோன்ற விஷயங்களிலே கவன ஈர்ப்புத் தீர்மானம்தான் கொடுப்பது. தங்களுக்கு முன்பு திரு மாணிக்கவேலர் அவைத் தலைவராக இருந்த நேரத்தில் சட்ட சபை அங்கத்தினர் ஒருவர் அடிக்கப்பட்டுவிட்டார் என்று அப்போது ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக்கொண்டு வந்தோம். அப்போது இருந்த தலைவரும் அதை ஒப்புக்கொண்டு, ஒரு மணிநேரம்

விவாதத்தை அனுமதித்தார். அதை விவாதித்துப் பேசிய நேரத்தில் எல்லாக் கட்சியினரும் தங்கள் கருத்துக்களைச் சொல்ல வசதி ஏற்பட்டது. அந்த மாதிரி சபை முடிந்தபிறகு ஒரு மணிநேரம் இதை விவாதிப்பதற்கு அனுமதித்தால், இங்கே நடக்கும் விவாதத்தின்மூலம் வேறு கல்லூரி களில், சென்னையில் மட்டுமில்லை, வேறு எந்த ஊரிலும் இந்தமாதிரி தகராறு ஏற்படாமல் இருப்பதற்கான ஆலோசனைகளை, கருத்துக்களைத் தருவதற்கு உதவியாக இருக்கும் என்ற ஒரே காரணத்தினால் இந்த மாதிரிக் கொண்டுவந்திருக்கின்றேன். இதை அனுமதித்தால், அது அர சாங்கத்திற்கும் நல்லது, நமக்கும் நல்லது, நாட்டு மக்களுக்கும் நல்லது. எனவே இதை அரசாங்கம் அனுமதிக்கும் என்ற நம்பிக்கையோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சட்டக்கல்லூரி மாணவர்கள் விடுதியில் ஏற்பட்ட கலவரம் பற்றி விவாதிப்பதற்காக இந்த அவையின் நிகழ்ச்சிகளை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து, அதுபற்றித் தம் கருத்துக்களைக் கூறியிருக்கின்றார்கள். வருந்தத் தக்கதொரு நிகழ்ச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் நடைபெற் றிருக்கின்றது. அங்கே மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் அளவிற்கு மனமாச்சரியம் ஏற் பட்டிருப்பது உள்ளபடியே வருந்தத்தக்க ஒன்றாகும். வேறு பல சமயங் களில் கட்சி மாச்சரியங்கள் ஏற்படுவது உண்டு. ஆனால் இதில் கட்சி மாச்சரியம் இல்லாமல் வேறு வகையில் மாணவர்கள் இரண்டு பிரிவு களாகப் பிரிந்து நின்று ஒருவரையொருவர் தாக்கிக்கொள்ளும் நிலைமை ஏற்பட்டுவிட்டது.

இந்த மாணவர்கள் விடுதியில் ஏற்பட்ட இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில், பணியாளர்கள் இரண்டொரு மாணவர்களால் அடிக் கப்பட்டார்கள் என்ற காரணத்தினால், தாக்கப்பட்ட பணியாளர்கள் இரண்டு பேரும் அந்த விடுதி உதவிக் காப்பாளரிடம் வந்து புகார் மனு ஒன்றைக் கொடுத்தார்கள். அதன் பேரில் 23—3—1975 அன்று காலை உதவிக் காப்பாளர் அவர்கள் விசாரணை ஒன்றை ஏற்பாடு செய்து, அந்தப் பணி யாளர்களையும் மாணவர்கள் இருவரையும் விசாரித்தார். அந்த நேரத் தில் இரண்டு மாணவர்கள் மீது, லிங்கப்பா, முருகேசன் என்ற இரண்டு மாணவர்கள் மீது, புகார் மனுவைக் கொடுத்திருந்தார்கள். இதை விசாரித்துக்கொண்டிருந்தபோது அந்த மாணவர்கள் இதை மிகவும் ஆட்சேபித்தார்கள் என்பது மட்டுமல்லாமல், முரட்டுத்தனமாக நடந்து கொண்டார்கள். முரட்டுத்தனமாக நடந்துகொண்டார்கள் என்பது மட்டுமல்லா மல், அவரது கை உதவிக் காப்பாளர் முகத்தில் பட்டதாக மாணவர்கள் கூறுகின்றார்கள். வேண்டுமென்றே உதவிக் காப்பாளர் முகத்தில் அடித்த தாக மாணவர்கள் சிலர் கூறுகின்றார்கள். "தாம் கை நீட்டிப் பேசிய போது அவரது முகத்தில் தமது கை பட்டுவிட்டது" என்று அவர் கூறுகின்றார். ஆனாலும்கூட அந்தமாதிரி நிலைமை ஏற்பட்டிருக்கக் கூடாது, இந்த மாணவர்கள் இதற்காக உதவிக் காப்பாளரிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று அவர்கள் சொல்லி, முதலில் மறுத்த அந்த

மாணவர் பிறகு "என் கை அப்படிப்பட்டிருந்தால் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்" என்று சொல்லிவிட்டார். பிறகு நடந்தவற்றைப்பற்றி உதவிக் காப்பாளர் கல்லூரி முதல்வர் அவர்களிடம் எழுதிக்கொடுத்திருக்கின்றார். அதே நேரத்தில் வேறு ஒரு பிரிவைச் சார்ந்த மாணவர்கள், இந்த உதவிக் காப்பாளரை அடித்த மாணவருக்கு எதிராக இருப்பவர்கள் இந்த மாணவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும், அவரை "சஸ்பெண்டு" செய்ய வேண்டும் என்று முதல்வர் அவர்களிடம் சொல்லி யிருக்கின்றார்கள்.

(பிற்பகல் 4-20)

மற்றொரு குழுவினர் அவர் ஏற்கெனவே மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விட்டார், ஆகவே அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது, விட்டுவிட வேண்டும் என்று முதல்வரிடத்திலே சொல்லியிருக்கின்றார்கள். முதல்வர் அவர்களும், கல்லூரிப்பேராசிரியர்களும் என்ன செய்வது என்று கலந்து பேசி, இப்படி வார்டிலேயே அடிக்கின்ற ஒரு நிலைமை ஏற்பட்டதன் காரணமாக விசாரணை நடத்தி அதற்குத் தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றார்கள். பிறகு இந்த உதவிக் காப்பாளர் கல்லூரியை விட்டு 24-ம் தேதி காலை வெளியே வருகின்ற போது 50 பேர் சூழ்ந்துகொண்டு, "நீங்கள் அறிக்கை கொடுத்ததன் பேரிலேதானே அவர்கள் நடவடிக்கை எடுக்கின்றார்கள். ஆகவே நீங்கள் வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். இதற்குள்ளாக ஒரு செய்தி பரவிவிட்டது. அங்கே உதவிக் காப்பாளருக்கு எதுவும் நடக்கவில்லை, அப்படி இருக்கும்போதே அவர்கள் உதவிக் காப்பாளரை அடித்துவிட்டார்கள் என்ற வதந்தி பரவி, அடித்துவிட்டார்களே என்று ஒரு இடத்திலிருந்து ஒரு சாரார் கிளம்பி, வெளியே போனவர் திரும்பி வந்தால் வருகிற தாக்குதல்களை உள்ளே இருப்பவர்கள் சமாளிப்பதற்கு ஆயத்தமாக இருக்க, இப்படிப்பட்ட பதட்ட நிலை ஏற்பட்டிருந்தது. இதைக் கண்ட கூடுதல் உதவிக் காப்பாளர் அவர்கள் காவல் துறையினருக்கு செய்தி அனுப்பியிருக்கின்றார்கள். காவல் துறையினர் $7\frac{1}{2}$ மணிக்கு வெளியிலே பாதுகாப்புக்காக இருந்துகொண்டிருந்தார்கள். அதற்கு நீண்ட நேரத்திற்குப் பிறகு, வெளியிலிருப்பவர்களை உள்ளே நுழையவிடாமல் தடுக்க இவர்கள் பலாத்காரமாக உள்ளே போக, இரண்டு சாராருக்கும் இடையிலே கை கலப்பு ஏற்பட்டு, காயங்கள் ஏற்படுகின்ற அளவுக்கு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அங்கு இருந்த எல்லா மாணவர்களும் கூடுதல் உதவிக் காப்பாளர் அவர்களும் அவற்றைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகள் எடுத்திருக்கின்றார்கள். அந்த நேரத்தில்தான் பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டு ஜன்னல்கள், கதவுகள், கட்டில்கள், பீரோக்கள் இன்னும் மற்ற பொருள்கள் சேதப்பட்டன. இரண்டு தரப்பிலேயும் மாணவர்கள் அடிபடுகின்ற நிலைமைக்கு ஆளாகி 18 பேருக்கு மேல் வெளியிருப்பு நோயாளிகளாகவும், உள்ளிருப்பு நோயாளிகளாகிற அளவுக்கு ஒரு சிலர் கீழ்ப்பாக்கம் பெரிய மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார்கள். இந்த நிலையில் அங்கே பாதுகாப்பாக இருக்க முடியாது என்று பல மாணவர்கள் விடுதியை விட்டு வெளியேற முயன்றார்கள். அவர்களுக்கு அனுமதி அளித்து, மீதம் பேருக்கும் அனுமதி அளித்து அந்த விடுதியிலே பதட்ட நிலைமை இருப்பதன் காரணமாக

அத்தனை பேருக்கும் விடுமுறை கொடுத்து, "கால வரையறை இன்றி விடுதி மூடப்படுகிறது" என்ற அறிவிப்பை வெளியிட்டார்கள். அதற்குப் பிறகு கல்லூரியைத் திறந்தால் அங்கேயும் பதட்ட நிலைமை ஏற்படும் என்ற காரணமாக நேற்றைக்கு முன்னாள் விடுமுறை விடப்பட்டிருப்பதன் காரணமாகவும் நாளை, நாளைக்கு மறு நாளைக்கு மறுநாள் விடுமுறை இருப்பதன் காரணமாகவும், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, 31-ம் தேதி அன்று கல்லூரி திறந்தால் போதும் என்று முடிவெடுத்திருக்கின்றார்கள். இருசாராருக்கும் இப்படிப்பட்ட நிலைமைகளிலே கை கலப்பு வருகின்றபோது, அங்கே போலீசார் இருந்தாலும்கூட, முதல்வர் அவர்கள் அழைத்தாலொழிய போலீசார் உள்ளே போகக் கூடாது என்ற நிலைமை இருக்கிறது. போகின்றபோதெல்லாம் அத்து மீறி உள்ளே நுழையக்கூடாது என்பதனால் வாய்ச் சொல் மூலமாக அல்லது எழுத்தின் மூலமாக அவர்கள் அழைக்காததன் காரணமாக உள்ளே போலீசார் போகக்கூடிய நிலைமை ஏற்படவில்லை. அந்தச் சமயத்தில் காப்பாளர், சக மாணவர்கள் சொல்லிக் கேட்காதவர்களை போலீசார் போய் சமாதானப்படுத்துகின்ற சூழ்நிலை வராது. அப்படிப் போனாலும், அங்கே போய் ஒன்று கைது செய்ய வேண்டி வரும் அல்லது இவர்களோடு அவர்களுக்குக் கைகலப்பு ஏற்படும். வேறு பல விளைவுகள் ஏற்படும் என்று காப்பாளர்கள் பல விடுதிகளில் அனுபவம் பெற்றிருப்பதன் காரணமாக, உள்ளே அழைக்காது வைத்திருக்கின்றார்கள். இந்த அளவுக்குத்தான் செய்தி நமக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொல்கின்றபோது, கல்லூரித் தலைவரோ விடுதிக் காப்பாளரோ போலீசாரோ கொடுத்த குறிப்புகளில் மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து வெளியே சென்ற மாணவர்கள் தாக்கினார்கள் என்று இருக்கிறது. வெளியிலிருந்து ஆட்கள் வந்து தாக்கினார்கள் என்று குறிப்பில் இல்லை. மருத்துவமனையிலிருந்த மாணவர்கள் கொடுத்திருக்கின்ற வாக்குமூலத்தில் வெளியார் சிலரும் கலந்திருந்ததாகச் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்கள் நேற்று கொடுத்திருக்கின்ற ரிப்போர்ட்டிலே அம்மாதிரி வெளியாட்கள் வந்து தாக்கினார்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இப்போது இருக்கின்ற நிலைமையிலே போலீசார் முழுவதையும் விசாரணை செய்ய வேண்டுமென்று கட்டளையிட்டிருக்கின்றோம். போலீசார் தக்க பாதுகாப்பு நடவடிக்கை எடுத்து, பாதுகாப்பை வலிவுபடுத்தியிருப்பதோடு, கிரிமினல் வழக்கு 860/75, பிரிவுகள் 137, 138, 337, 426 பீனல் கோட் சட்டத்தின்கீழ் பதிவு செய்து அதற்கான புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கின்றார்கள். இந்த சேதாரங்கள் எவ்வளவு என்று ஆராயும்படி கேட்டிருக்கின்றோம். நம்முடைய ஜன்னல்கள், கதவுகள் உடைந்ததால் ஏற்பட்டிருக்கின்ற சேதாரங்களைத்தான் நாம் அறுதியிட்டு அந்த அளவுக்குக் கூற முடிந்தது. எவ்வளவு சேதாரம் இந்த வகையில் என்று கேட்டபோது ரூ. 5 ஆயிரம் அளவுக்குச் சேதம் இருக்கும் என்று சொன்னார்கள். கட்டில்கள் மற்ற பொருள்கள் சேர்த்து ரூ. 8 ஆயிரம். ஆக மொத்தம் ரூ. 13 ஆயிரம் அளவுக்கு சேதமாயிருக்கக்கூடும் என்று சொல்கின்றார்கள். ஆனால் உள்ளே இருக்கின்ற பொருள்களைக் களவாடியிருந்தால், அதுபற்றி புலன் விசாரணை மூலம் தான் முழு அளவுக்குத் தெரியும். அந்தக் கருத்தை நாம் விட்டு விடாமல், இந்த அறிக்கைகளில் அது வரவில்லை என்றாலும்கூட மாணாக்கர்

௧
1975 மார்ச் 27] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

கள் சொல்லியிருக்கும் புகார்கள் மீதும், மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுக் கேட்டிருப்பதனுலும், நாம் காவல்துறையினருக்கு அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று கூறியிருக்கின்ருேம். வெளியார் யாராவது தலையிட்டிருப்பார்களாஞல், அவர்களைக் கட்டாயமாகத் தண்டித்தால்தான், வேறு பல விடுதிகளிலே இப்படிப்பட்ட சிக்கல்கள் ஏற்படாமல் இருக்கும். சரியாகவோ தவருகவோ பல விடுதிகளிலே, கல்லூரிகளிலே மாணவர்கள் பிரிந்து பிரிந்து மனமாச்சரியங்களை, சச்சரவுகளை வளர்ப்பது எல்லோருக்கும் வருத்தத்தை தரக்கூடிய ஒன்ருகத்தான் இருக்கிறது. இதிலே கண்காணிப்பாக இருக்க வேண்டும் என்ற முறையிலே தான் கட்டளையிட்டிருக்கின்ருேம். அந்தப் புலன் விசாரணை நடத்த வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களும் காவல் துறை அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கின்ருர்கள். ஏனென்ருல், ஒரு விடுதியிலே ஏற்பட்டிருக்கும் நிலைமைகள் வேறு பல நிலைமைகளுக்கு இடம் தருமாஞல், அதன் மூலம் மாநிலத்தினுடைய அமைதியும் கெடும் என்ற காரணமாக, அதைக் கட்டாயம் கவனிக்க வேண்டுமென்று அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருக்கின்ருர்கள். இந்த விவரங்கள் எல்லாம் வந்தபிறகு தக்க நடவடிக்கைகள் இதன்மீது எடுக்கப்படும் என்பதையும் நான் இந்த வாய்ப்பிலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். வேறு மாணவர்கள் கொடுத்திருக்கின்ற புகார்மீதும் புலன் விசாரணை சேர்த்து எடுப்பது என்ற அளவில், அங்கு பாதுகாப்பு போடப்பட்டிருக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அதைத் தவிர முதல்வர் அவர்களும், பேராசிரியர் அவர்களும் இந்த 2, 3 நாட்களுக்குள்ளாக ஒரு சமரச முடிவினுடைய அடிப்படையிலே 31ம் தேதி கல்லூரியினைத் திறப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கின்ருர்கள். இதை விழிப்புணர்ச்சியோடு கண்காணிக்க கல்வித் துறையும், காவல்துறையும் என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை எடுக்கும். இதில் சட்டத்துறையும் ஈடுபட்டிருப்பதன் காரணமாக மேற்கொண்டு விவாதிப்பதற்கு அவசியமில்லை என்று கூறி, தக்க நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதனையும் இந்த வாய்ப்பிலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, இதிலே கொஞ்சம் துரிதமாக புலன் விசாரணை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புலன் விசாரணை பட்சபாதமற்ற முறையில் நடக்கும்படியான அளவில், ஒரு நியாயாதிபதியை அல்லது போலீஸ் இலாகாவாக இருந்தால் டி.ஐ.ஜி. கிரேடில் உயர்தர போலீஸ் அதிகாரியைப் போட்டு விசாரணை செய்ய வேண்டும். நியாயாதிபதியை வைத்து விசாரணை செய்தால் மிகவும் நலமாக இருக்கும். முந்தாநாள் இது நடந்தது. இன்றைய தினம் சிதம்பரத்தில் பையன்களுக்குள்ளே இதுமாதிரி கலவரம் இருப்பதாக சிறிதுமுன் தகவல் வந்திருக்கின்றது. இது பரவிக் கொண்டே போகாமல் இருக்க வேண்டுமென்று நான் மிகவும் விரும்புகிறேன். ஆகவே துரிதமாக விசாரணை நடக்கவேண்டும். இதில் நீதிபதி விசாரணை நடத்த முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதற்கு நீதிபதி விசாரணை தேவையில்லை என்பதே அரசின் கருத்து. எதிர்க்கட்சித் தலைவரவர்கள் கூறியதுபோல், காவல் துறையில் பெரிய அதிகாரிகளில் ஒருவரை வைத்து, அதைப்பற்றி விசாரணை செய்வதில் ஆட்சேபணை எதுவும் கிடையாது. இது பரவுவதாகச் சொன்னார்கள். இந்த மாணவர் கள் இரண்டாகப் பிரிந்து ஒருவரையொருவர் தாக்குகின்ற நேரத்தில், இதிலே வகுப்பு அடிப்படை, சாதி அடிப்படை என்ற அளவுக்கு வந்து சேர்ந்து விடுகிறது. இப்படிப்பட்ட சாதி அடிப்படைகள் எல்லாம் வராத அளவுக்கு அந்தந்த சமுயாயத்தைச் சேர்ந்த பெரியவர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கி றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர் கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு, இவ்வொத்தி வைப்புத் தீர்மானத் திற்கு என் இசைவை மறுக்கிறேன்.

3. அரசின தீர்மானம்.

மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவம், மக்கள் நல் வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் * பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்று கேட்டுக் கொள்கின்றேன். அந்தக் கொள்கைக் குறிப்புகளை நான் இங்கே படித்து அறிவித்ததாக அவைக் குறிப்பிலே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 4-30)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்:—

"சட்டமன்ற மேலவை முன் வைக்கப்பட்டுள்ள மருத்துவம், மக்கள் நல்வாழ்வு, நகர்ப்புற வளர்ச்சி குறித்த கொள்கைக் குறிப்புகள் பரி சீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

* THIRU S. NARAYANASWAMY : Hon. Chairman, I am grateful for this opportunity to speak on the Policy Note on Public Health and on Medical Services during 1975–76. Incidentally, the Performance Budget in regard to both these has just been circulated to us, not only to-day, but only just now. I had no time to study them in detail. It is not by way of a criticism about the delayed delivery of the Policy Notes or the Performance Budgets; but we are under some handicap in perusing them.

* ~~88—269~~ ஆம் பக்கங்களில் இணைப்பு II -ஆக அச்சிடப்பட்டுள்ளது.
374-555

In any case, I must congratulate the Hon. the Minister for Health on what I regard as a fairly detailed note both on Public Health and on Medical Administration and also on Urban Development. But what is important for me is the Policy Note on Public Health and Medical, because I am also associated in some manner as the Chairman of the Voluntary Health Services Hospital Committee with what is going on. Now, Sir, there have been one or two statements which are somewhat disturbing. There are frank admissions made by the administration of Public Health in regard to Malaria Control. It has been stated that the whole programme has been facing a very critical challenge due to some technical difficulty and the occurrence has increased considerably. In fact, while we have considerable satisfaction that the incidence of smallpox and plague has practically come to zero since 1964, it is somewhat disconcerting to note that malaria control has not been effective and that malaria incidence is on the increase. I do think Malaria is one of those diseases which since World War II

MR. CHAIRMAN : The hon. Member may bring the plank down and make himself convenient.

THIRU S. NARAYANASWAMY : Thank you, Mr. Chairman. I have taken the necessary precaution. I only wish to say that since malaria is susceptible to 100 per cent scientific control since research was undertaken after World War II, it should be possible with a little more effort to bring this under control. I have no doubt this will be done as we go along.

Now the other thing that has caused a great deal of disquiet is the large occurrence of filariasis. Filariasis control is a much more complex problem than is known. But since its incidence is largely dependent on mosquito-larvae proliferation in stagnant pools of water which tend to occur particularly in areas where there is no proper drainage and where there is no proper flow of water, I think it is necessary that the programme on this front should be intensified in a big way.

The third point on which I want to say something is the family planning programme. I wish to say that the Government of Tamil Nadu have taken a very constructive and enlightened view in regard to control of family sizes through a

very vigorous family planning compaign. But what I feel is this : There is an idea that we in Madras tend to take it seriously and as a result, our population is cut down and on that ground, the findings of the Delimitation Commission will be advantageous to other States and disadvantageous to us. But I want that this programme should be carried on and uncompromising and uninhibited efforts must be made in order to secure very speedy results. Despite all that we are doing all over India and even in those States where this programme has been taken seriously and implemented, results are, if I may say so, extremely perepheral, except, of course, at the highest social level. I think it is necessary, if necessary by diversion of funds to family planning programmes, to intensify them. It is not to say that good effort was not made in this State. Tamil Nadu is one of the few States where the Family Planning programme has been militantly carried out and particularly during the last few years, a great deal of attention is given to it. The medical profession which used to look down upon this as something which was inimical to its interests has to-day begun to exhibit a changed psychology to it.

Mr. CHAIRMAN : Hon. Members are requested to make short speeches, because there are many speakers to-day. Members may take not more than 15 minutes each.

Thiru S. NARAYANASWAMY : I am thankful to you, Mr. Chairman. I want to emphasise this particular point. I think it is very essential that the Family Planning programme should be implemented in a more militant and intensive manner.

(மாண்புமிகு மேலவைத் துணைத்தலைவர் தலைமை)

Now I will skip over the subject of adulteration and environmental hygiene on which I find a very revealing paragraph in the Policy Note. I have no doubt that it will be pursued relentlessly with the help of many Analysis Centres which have been started and I hope more of these Centres will come in in course of time. Some of them are being started in places like Salem, apart from the places where they are already there in Coimbatore and Madras.

Now in regard to environmental hygiene, with the increase in the number of industrial locations particularly in the new areas. it becomes a matter of paramount necessity to see that instead of taking action after the industry is started either for having polluted the air or for having polluted the ground, we should take steps to see that the industries themselves have such devices as modern industries have, even before they are allowed to start. I think we can make it a condition so that subsequently difficulties may not arise. I think this will be successful and I am sure the Government will pursue the matter in this way.

Now, Sir, there is a reference to the non-recognition of Tirunelveli and Chingleput Medical Colleges by the Indian Medical Council. I think much water has flowed under the bridge since this report was written and we are much nearer recognition because we have given the equipment they needed for the recognition. Efforts may be taken personally by the Minister to see that further time is not wasted in getting recognition for these two Colleges.

I welcome the steps taken to improve medical research. A sum of Rs. 1 lakh has been provided and I think it will be consistent with the financial constraints the Government are having. I would like medical research to be pursued in enough Centres. I think it is very essential that we do this.

(பி.ப. 4—40)

Sir, the most important point I want to say is this, with which I shall conclude. I am told that there are a number of speakers to follow me. I want that the bed-strength in the hospital should be increased. In four years the bed-strength has increased from 11,329 to 12,638. The increase is not satisfactory, and it is hardly adequate. Only recently a great demographer, writing in an international magazine, said that the rate of population proliferation is such that 10,000 hospital beds should be created everyday to meet the requirements. I would like the bed-strength to be increased considerably, though I am aware of the tremendous financial constraints under which the Ministry of Health and Medical Services functions. In the same way, many other Departments are functioning. I am fully aware of it. But I feel it essential to press on this Government the need for an

increase in the bed-strength so that the unsightly spectacle of people lying on the verandahs of various hospitals in the most insanitary and appalling conditions is avoided. Particularly, if it happens in a big hospital like the General Hospital, I think it must be more pathetic in the Headquarters Hospitals and I would like to see this rectified.

I am happy that some useful steps have been taken to improve Out-patient service which is one of the appalling things in our State. I think it is worse in some other States. It may be so but I think there is very little solace to seek in saying that some other State is even worse. The Out-patient services are far from satisfactory. There is a very beautiful and frank admission in this Report by the Hon. the Minister for Health that the doctors who admit in-patients are not there the following morning to follow the diagnosis that they have made and that steps have been taken to improve the situation at an expenditure of Rs. 5 or 8 lakhs. I hope that this appalling condition in which the patients who are admitted are neglected the following day will cease and the follow-up will be sensible and practical and I trust that the patients will feel that once they enter the hospital, they are being looked after. This is very, very important.

Sir, I do not think I will take too much time on Urban Services. I happen to function on the Madras Metropolitan Development Authority as a representative of this Council. I must say that we have made very considerable headway with the plans for urban development, for further improvement of living conditions, prevention and mitigation of urban pollution and transposition of several services to places other than those which are presently congested. All these are being considered. Again, it is a question of financial constraints that will finally handicap our implementing the various projects which have been lined very beautifully by the Madras Metropolitan Development Authority. It recently held a Seminar on this subject in which some extremely sensible solutions and suggestions were made. I hope we will get enough resources to implement these schemes as we go along.

I wish to congratulate the Hon. the Minister for Health on the generally satisfactory report he has produced on both Public Health and Urban Development and also on Medical

Services. I hope he will get the necessary financial support from the Government and psychological and technical support from the medical services in implementing the various beneficent schemes which have been initiated.

Thank you, Mr. Deputy Chairman.

* THIRU A. R. DAMODARAN : Hon. Deputy Chairman, Sir, it is always a pleasure for us to participate in the discussion on the Policy Note on Public Health and Medical Services and particularly so because this is probably one Department where we have had one Minister to deal with it for a number of years.

THIRU S. NARAYANASWAMY : Hear, hear.

THIRU A. R. DAMODARAN : We are very grateful for it because if there is one Minister, the policy is likely to be continuous and although we may be repetitive in some of our remarks, the Hon. Minister with his very sound knowledge of the working of the Department would be able to educate us with some of the difficulties that he faces in that particular Department.

May I, at the outset, express my very deep concern at the very cavalier and casual manner in which the Members of this House have been treated by the fact that one of the important documents of the Budget—the Performance Budget—which was placed last year has been distributed only just now ? In fact, when I came to participate in this debate, I had to refer to the Performance Budget for the year 1974-75 and only when I asked the Secretary of the Council this evening as to why we did not receive it was a query made to the Department as a result of which, as the hon. Member Thiru Narayanaswamy mentioned, the Performance Budget has been presented to the Members of this House. I only wish to state, Sir, that I hope all such documents will be circulated in future well before we take up the discussion. Although some exhaustive details on certain aspects of financial expenditure are furnished in the notes that have been given, I am afraid these notes do not mention in detail the expenditure to be incurred. For example, Sir, I asked my hon. Friend Thiru Swaminathan and I was also searching in the Policy Note on Medical Services to find out what would be the allotment for Medical Services according to the Budget. But we have not been able to find a single sentence

which says that so many crores of rupees have been presented in the Demand for Medical Services. I only wish to state that these detailed documents should also be given to us. Having mentioned this, I would like to pass on to the subject-matter of to-day's discussions.

Sir, the introduction of Prohibition has had tremendous impact on the financial outlay on very many developmental activities and it does not require a very detailed search of the Budget documents in so far as these two Policy Notes are concerned to find that the axe has fallen very heavily on the Departments of Public Health and Medicine. I am very sorry to mention this, Sir, but I think the public should also know about the implications of certain policies that are adopted by Government. Although a Budget of over Rs. 500 crores has been presented, it is very obvious that in both these very important departments very serious cuts in expenditure have been imposed. For example, in the building programme, against an allotment of Rs. 163 lakhs and odd for the year 1974–75, I find, Sir, that the allotment for the year 1975–76 is hardly Rs. 19 lakhs. All these cuts are likely to have a very telling effect on various items of expenditure and I would only like to say that we are deeply concerned at the very heavy cuts in expenditure imposed on these Departments which will in turn have a very serious effect on the standard of services that are being provided in our hospitals, dispensaries and other institutions. The total expenditure in 1972–73 on Public Health was Rs. 16.10 crores as against Rs. 16.25 crores in 1975–76. Therefore, it is obvious that the *per capita* expenditure on Public Health has diminished. I would, however, like to congratulate the Public Health Department on two outstanding achievements and they have mentioned it very properly in very broad types. Firstly, I would like to make mention regarding the eradication of smallpox in our State. Considering the fact that only last year the whole world was aghast with the news of an epidemic in Bihar, I think, Sir, we in this House must congratulate the Public Health authorities on their continuous action in seeing that as a result of the activities in the eradication campaign, there have been, I believe, only four deaths from smallpox in the State during the last year. It is indeed a very creditable achievement. Similarly, achievement has been made in regard to plague. As my hon. Friend

Thiru Narayanaswamy mentioned, I wish we can say the same thing about malaria and filaria. Especially I, coming from South Arcot, have considerable misgivings in this regard. I may not be correct and it is for the Hon. Minister to correct me if I am wrong. However, it seems to me as if our mosquitoes are developing greater resistance to the anti-malarial insecticides which are being used and we are getting bigger and stouter mosquitoes in spite of all our efforts. This need not necessarily result in more malaria or filaria, but there is an element of nervousness amongst the population whether this may not also induce a new outbreak of this disease from which South Arcot has been suffering very badly in the past.

THIRU S. T. ADITYAN : Is the hon. Member sure that they are mosquitoes?

THIRU A. R. DAMODARAN : Sir, obviously my hon. Friend is free of the mosquito menace in his district. Otherwise, one cannot mistake the mosquito in its drone when it comes near one's ear and disturbs one's sleep. Anyhow there is a sense of fear and I hope that this will be investigated by the Public Health Department and that we will see that South Arcot which was particularly affected by malaria about 25 to 30 years ago does not get a recrudescence of this illness which will cause untold agony to the population of that district.

(பிற்பகல் 4-50)

Sir, exhaustive details have been given of the work of Primary Health Centres in our State and it has also been pointed out that almost every Panchayat Union Block has one Primary Health Centre, the State thus having more than 381 Centres. At the same time, I was wondering, because mention has been made in this Policy Note that we are not going to have more Centres, whether, with the limitation in Plan finance, we had perhaps to remain content with what we had. I would, therefore, suggest to the Hon. Minister to see whether greater mobility of service could not be ensured in our Primary Health Centres, because at a time when building grants are not available, instead of spending one or one and a half lakhs of rupees or even more — I do not know what it actually costs, but it must cost anywhere between $2\frac{1}{2}$ to 3 lakhs of rupees, seeing the very nice buildings that have been put up in

cation in treatment of T.B. like T.D.D. may be posted to the Sengipatti Sanatorium. The people in Thanjavur district have great faith in that Sanatorium and they will not go to the R.M. Hospital, Thanjavur, where there is the District T.B. Officer and they prefer to go to the Sengipatti Sanatorium and the present staff there are not able to manage the people coming there. There is a separate theatre even for thoracic surgery at Sengipatti but that is not being used because there is no full-fledged Surgeon. A new building has been constructed but that has not been opened at all. Non-paying patients are finding it very difficult. The other day when I was starting for Madras, I heard that politics in that place had gone to such an extent that a doctor who took a person to task for swindling the money had been locked in his house for 3 days. I informed the Superintendent of Police over the phone that a particular doctor was inside his house being locked and it is not known what happened to him. The Superintendent of Police also said that he also got a complaint, since the person locked inside had somehow or other smuggled a note outside. He said that he would go and find out what had happened to him. That is the serious and anomalous situation in which the Sengipatti Sanatorium is functioning. I would request the Hon. Minister to look into the matter.

Another thing I wish to mention is regarding the divisional clinics in Thanjavur district. We have got five peculiar divisional clinics. They were started some years ago and honorary people are posted there. The divisional clinics are manned by them. Medicines are being given and subsidised X-rays are being taken there. But the doctors are not properly attending on the patients.

The Divisional Clinics are not very necessary in Thanjavur district. The T.B. work can very well be taken up and integrated with the adjoining hospitals and the Divisional Clinics closed down. In the alternative, we can appoint separate full-time doctors for T.B. work so that the T.B. Officer in the district may be able to have a control over their work. I congratulate the Minister on the efforts he has taken regarding Siddha System and the building of Arignar Anna Government Hospital Complex which has been very much improved. He is bringing the Central Research Institute Directorate and also the Srinivasamurthy Institute for research inside the Hospital Complex. A Pharmacy has

been opened in that hospital. I am told that a building complex at a cost of Rs. Five lakhs is going to come up. I want to offer one suggestion in this connection. We are going to have a full-fledged Pharmacy of medicine in Arignar Anna Hospital which is going to supply medicine not only to that hospital but also to the various hospitals in the State. Now the only Hospital that is now supplying medicine is IMPOOPS and it is finding it extremely difficult to supply medicine. The Pharmacy may be well equipped so that it may be able to supply medicine. When the Pharmacists are appointed, only B.I.M. Graduates are going to be appointed. This is what I learn. I wish that the people in the field should be appointed to an advisory committee. Thiru Kondal Rao and Thiru Narayanaswami Pillai and two or three people may be appointed, because the manufacture of those medicines cannot be learnt but it has to come by experience and it is a hereditary affair. So, I request that an advisory committee may be appointed. Regarding the Anna Hospital, one more point. There is no compound and encroachments are taking place.

Mr. CHAIRMAN : How many more points ? The hon. Member must finish his speech. There are four more to speak and the Hon. Minister has to reply.

Thiru G. SWAMINATHAN : Sir, I have only two more points. I will tell the points alone and finish my speech.

Regarding encroachment, if once the encroachment has taken place, it will become very difficult to evict the encroachers.

Regarding the printing and publication of books, the Palani Devasthanam has given Rs. 75,000 and it is giving another Rs. 1,25,000. I congratulate the Hon. Minister on having appointed a scholar like Kandasami Pillai for writing the history of Siddha Medicine. It is a very welcome move and he is appointing a person who is most competent to do the job. I only wish that the book is brought very early so that the people might be benefited by it. Regarding the Siddha Books, they are available only in a few places like Palayamcottai College and certain other places. The books should be made available in almost all the places like Higginbothams and Swadesamitran Bookstall and the Saiva Siddhanta Publishing House so that the village doctors and others may be able to purchase these books. This is another thing I wish to recommend to the Hon. Minister.

Regarding the Pharmacy Block in Palayamcottai College, that block has to be built immediately because it has become a Post-Graduate College now. This may be immediately attended to.

Regarding reimbursement, I agree with my esteemed Friend that reimbursement facilities for Siddha Medicine should be given. Now it is restricted to Arignar Anna Hospital and the Palayamcottai Hospital. It has to be given in all the District Headquarters Hospitals.

Regarding the problem at Thanjavur, the Deep X-ray therapy machine has not been functioning there for the last four months. I do not know the reason why the Government have not taken any action. I think there is some mechanical trouble. I request the Government to take immediate action in that regard.

In the Women and Children Hospital, an operation theatre was opened by the Hon. Minister and it is not functioning from that date onwards. A pucca operation theatre is there and I do not know why it is not functioning. There is only one operation theatre in R.M. Hospital and it is not sufficient. I wish that immediate action may be taken.

The Blood Bank is a serious problem in the R.M. Hospital. So many committees came and so many people had come. They have not solved the problem.

There is stagnation in the post of non-clinical Professors. Many of them are representing to me in various medical colleges that they are not able to get any practice. Clinical professors are getting thousands of rupees, sometimes running to Rs. 20,000 per month. Non-clinical professors are getting Rs. 1,100 for so many years. One gentleman was saying that from 1963 to 1972—till the Second Pay Commission—he was getting the same salary. From 1972 he is getting Rs. 1,100 which he will continue to get till his retirement. Though they are only a few in number, I think the Hon. Minister will kindly give them Selection Grade Scale of pay.

(பிற்பகல் 5-50)

Sir, the next point which I want to mention is about nurses and it is a pleasant point. It has been reported to me by nurses, of course, by male nurses, that the Uniform Allowance of Rs. 75 that is being given to them was fixed in the year 1944. They say that it is very necessary that they should appear in clean uniform

in the wards, so that the patients cheer up. Therefore, it is necessary that their Uniform Allowance is raised from Rs. 75 to Rs. 200. They also say that the amount which they are getting by way of risk allowance is only Rs. 30 which was fixed in the year 1926 and this also should be increased to Rs. 60 per month.

Thank you.

* THIRU G. VASANTHA PAI : Hon. Chairman, Sir, it is with great pleasure that we read through this Policy Note on Medical and Public Health. But one of the features which I found missing in this Policy Note was a scheme for making Health Insurance. Now that both Life Insurance and General Insurance have been nationalised, may I suggest for the consideration of this Government that a National Health Insurance Plan should be there for all types of people and all persons whatever their income may be? Sir, this is a tip that may be got from the National Health Scheme which is prevalent in English or more particularly in every district in the United States. Sir, just like the hon. Member Thiru Swaminathan who went to China and gave some tit-bits of what was happening in the Chinese hospitals, may I make an excursion of my visit to the two hospitals in the United States where I had been ? One is the Sunnybrook Hospital in Toronto and the other is the Children's Hospital in the same place. I had an exhaustive tour from the first to the 23rd floor in the Children's Hospital in Toronto as also the Sunnybrook Hospital which has got 1,000 beds. One of the main things that I found was that the cost for these hospitals was nearly 100 dollars per day in the first hospital and in the second hospital the cost was 126 dollars per day for a patient. Sir, it is too much of an expenditure in our country and much so in the United States also. But I am told the Health Insurance Scheme provides the funds; barring 10 per cent of the expenses, 90 per cent of the expenses are met by the Insurance organisations. Every family, every child new-born, every woman who is going to be an expectant mother, are all insured and they are booked sufficiently in advance in all these hospitals. The Insurance organisation pays 90 per cent of the expenditure, as against the 10 per cent which the patients have to meet from their salaries. The provisions that are made in these hospitals are of an enormous nature and virtually every known equipment for every known disease is available in these hospitals. Sir, I would like that Tamil Nadu, which has got an abundant measure of

intelligentsia working in Government as well as private hospitals should concentrate on getting the necessary equipment down to these hospitals and cost should not be a consideration in a Welfare State. I requested the Hon. Minister, when the Hon. Speaker of the Assembly as well as the Hon. Chairman entertained the Speaker of British Columbia at the Dasaprakash Hotel—that the Hon. Minister as well as a group of medical experts from this country should visit Toronto and Victoria and find out the facilities for themselves. Of course, the Hon. Minister then shook his head in assent but I still find him here and he has not made an excursion of those places and I do not think. . . .

THE HON. THIRU K. ANBAZHAGAN: Sir, the Minister finds it very difficult to find foreign exchange for such a travel.

THIRU G. VASANTHA PAI: Sir, I also realise that Elections are coming soon and he may not now be prepared to go on such an excursion. But I would say that it will benefit immensely if a team of medical experts goes from here and examines the condition in the hospitals in England, the United States and Canada and it would do much to better the condition that is prevailing here. I am sure that those ideas could be emulated here also. I am saying this from what I saw there when I went there as a layman. As the hon. Member Thiru Damodaran said, I do not know the difference between Carbon Monoxide and Sulphur Dioxide because I am not a student of Science but am a student of History. But, nevertheless, as a layman when I went into these hospitals, I found the atmosphere as well as the cleanliness there was very good. Sir, reference was made by the hon. Member Thiru Narayanaswamy to the number of persons who were in the corridors of our hospitals. Sir, we all know of the conditions here. We have got a teeming population and we cannot make improvements overnight as persons in Toronto or persons in New York or in other places could do. But, nevertheless, we can have some environmental hygiene. We can make our places look better. We can also see that better living conditions are made for the patients inside the hospitals and this does not require any Herculean task on the part of those in charge of these hospitals. In connection with the environmental hygiene also I wanted to bring to the notice of the Hon. Minister two facts which I feel, as a person in charge of Public Health, he can enforce. The first about persons who own cattle. Sir, some arrangement, some constant visit by

officials to the houses of such persons to see what they do with the cow-dung—whether they stack it to the inconvenience of the neighbour or whether they stack it to multiply the mosquitoes—must be resorted to by the Government and especially the Hon. the Minister for Public Health must have his immediate attention given to this. I find that in many households in places like Gandhinagar, Kasturba Nagar and several other posh localities people keep cattle inside their houses but they do not take care of what happens to cow-dung and how they dispose of it. They simply multiply and accumulate it and it grows into a mountain and those persons probably do not know the extent of mosquito menace that they are creating by this to their neighbour.

The second thing which I want to submit to the Hon. Minister is about the careless way in which the sanitary towels and napkins are thrown on the road by persons who use them. I am very sorry I have to bring this to notice. I saw some ghastly sight the other day of young school children picking these things, thinking that they are bits of cotton and trying to nurse their wounds which they sustain while they fall down on the roads during play. It was a terrific sight for me. I went there and I had it pulled out of their hands and told them not to do that. I find, to my amazement that in several posh localities, people just throw these things out with the rubbish. Sir, the Hon. Minister must see to it—I find several advertisements coming in the papers of matters for which there need be none—that some education is given to the public in this matter, and this habit must be stopped. Despite the fact that it appears to be so trivial it is such a matter of hygienic value that something must be done to educate the public, more especially the rich people who use these towels and napkins.

Sir. I come to the next point which is about the Women and Children's Hospitals. Sir, as I said earlier, the Women and Children's Hospitals should be the first concern of an Insurance organisation. First. the expectant mothers should be insured and child-birth should be insured and then, Sir. the expense in respect of that must be met from the Insurance Corporation and the persons concerned should have to incur only very little expenditure on bringing up the child. They should meet only very little expenditure from their own pocket. This is an aspect which is of

major concern in every Welfare State. The hon. member Thiru Swaminathan was referring to China. I had been to China in the year 1955 as a member of the Lawyers' delegation and I have seen hospitals and seen the creches in the factories. I have also seen the creches in most of the commercial establishments where persons who have just new-born babies leave their children in charge of the nurses who look after them from 8 a.m. to 5 p.m. in the factories. The children are well looked after and well-managed and there is no trouble at all. When the mother comes back, she puts the child back in the sack on her back and she walks away. That is how they carry children—they have got a Kangaroo type pouch on their back. This sort of thing could be put into practice with great efficacy in our country also. I do not see why factories here should not have creches. I do not see why nurseries should not be there for children from one year to five years onwards. Sir. I am not exaggerating. When I went to Madame Soong-Ching-Leng's nursery in Shanghai, I found children graded according to ages. They were up to 5 years; they were all of the same height. They were all so plumpy that it was impossible for a person like me to hold them for more than five minutes.

(பிற்பகல்-6·00)

Sir, they were all well looked after there. I always thought of grading of apples and mangoes and things like that. That also applies to the children in those countries. They are well looked after and these creches and those nurseries are doing great public service. I feel, Sir, that we miss a person of the eminence of Thirumathi Clubwala Jadhav here and she would have given all her time and energy for a thing of this sort. The Hon. Minister has been continuously in charge of Medical and Public Health all these years and I hope he will give this problem his most urgent and immediate attention.

Sir, many speakers before me have talked only on the Policy Notes on Public Health and Medical but none of them has talked about the Policy Note on Urban Development which has also been placed before the House. Therefore, I may take a few more minutes to speak on that. I am sure you will allow me that time.

Sir, we are fully aware that Madras was one of the three Cities where we had the trams and we got them off the road in 1950-s much to the chagrin of the discontented labour. I appeared for

some of the labourers before the Court when the entire Company was taken over and sold. At that time we thought that we could not have tramways on our roads because besides the noise it made, there was not enough space in our roads to cope with the traffic. So, we got rid of the tramways. Now, Sir, on the last page of this note, at page 6, I find that there is a move to have a Mass Rapid Transit System for Madras City. Sir, what I understand by Mass Rapid Transit System is electric railway which will go on top and our cars will go on the road beneath. Our Mount Road will have a rail system on top and cars will go beneath just like the Mass Rapid Transit System in Chicago. There will be big columns in the roads and on top of them the rail will run. You have got such things in Montreal, Tokyo and several other places, where this Mass Rapid Transit System has been introduced. But there the roads are very, very wide and they are at least treble the size of our Mount Road in breadth. In those places they have this system. By doing this we will be bringing back our old tramway car without having the space necessary for having this system. I must warn the Hon. Minister in charge about this and request him to have a look at this system in foreign countries when he goes abroad, along with an expert, and he should do so before he wishes to bring that scheme in our country.

Sir, the other difficulty is that it is to be run, as contemplated, from Ennore to the other end of Madras City. If it is to be underground, then it will have to be on the model of Metro in Paris or the underground sub-way in London or in other places. Then the Stations should be well spaced out and cannot be at an interval of one or one and a half miles, but they should be located at an interval of not less than 5 miles. There should not be any conflict between the bus and the rail transport. What is done in Montreal is this: If you have a 30 cents ticket, you can use the same ticket in the Bus, Tramway and the underground rail, provided you do not break your journey in the middle. If you break the journey and fail to catch the connecting train, then you cannot use it. We must have some system of having the road transport separate from the rail transport and not allowing them to overlap with each other. They should not be overlapping in the same area. They must cater to the different parts and one ticket should be available for going in one direction at a specific price.

1975 மார்ச் 27]

The HON THIRU K. ANBAZHAGAN : The hon. Member need not bother about ticket and other things now. The entire thing is only in blue-print and he could have a copy of it.

THIRU G. VASANTHA PAI : Sir, I am happy that it is in blue-print. When it becomes a reality, I suggest that my points might be kept in mind. I have given some of my suggestions on the subject.

Finally, I wish to congratulate the Hon. Minister on the very elegant way in which he has brought out these Policy Notes. I join with the other hon. Members in saying that the Performance Budgets could have been made available to us sufficiently in advance so that we could have seen not only the blue-print but could have had a realistic view of the performance behind that. Thank you, Sir.

THIRU S. T. ADITYAN : Sir, some of the hon. Members who spoke before me were giving nice ideas about what could be done this way or that way and what was being done in so many other countries which they have visited. Certainly it was very interesting to hear those things from them.

A lot of improvement has been done in our State. What we have to look into is our limitations. The primary and basic limitation is one of funds. Everywhere you get that blockade. In every kind of advancement, the final element that decides the whole thing is the funds for the project. Considering the amount of money that we can spend, I wish to challenge this way. Take any other country which is parallel to us in the matter of finance. Perhaps most countries are rich. Even the other Asian countries are rich. At least imagine a country which has the same financial resources as we have. Then the question arises : Has any such country advanced any better than we have, considering the finances we have got?

We must be proud of so many advances we have made, in spite of the advantages of finance and facilities. There is the Heart Clinic in the General Hospital. If I remember aright, the President or the Chairman of the Royal College of Physicians who, I am told, is one of the authorities on Medicine in England, was here. He got a heart attack and was admitted in our Heart Clinic. After recovery, he gave a Press Conference in which he paid the highest

encomium for the way in which he was treated and the capacity of our physicians. Sir, that is not the only thing of which we need be proud. We have got, for instance, the neurological department which is one of the best in this part of Asia. Not only that. We have been, for a long time, proud of our gynaecology department...

[பிற்பகல் 6-10)

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஒரு மணி நேரமாக ஆங்கிலத்திலே எல்லோரும் பேசுகிறார்கள். எனக்கு ஒன்றுமே புரிய மாட்டேன் என்கிறது. தமிழில் பேசினால் எங்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன். தமிழ் தெரிந்தவர்கள்கூட ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். தமிழ் தெரிந்தவர்களாவது தமிழில் பேசினால் நாங்கள் புரிந்து கொள்ள முடியும் என்பதை நான் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கி றேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: தமிழில் பேசுங்கள் என்று வற் புறுத்த முடியாது. சபை நடவடிக்கைகள் இரண்டிலும் நடக்கலாம்.

திரு. செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழில் பேசவேண்டு மென்று வேண்டுகோள் விடுத்து இருக்கிறோம். அவ்வளவுதான்.

*திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவர் அவர்களே, இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் ஆங்கிலத்திலேயே பேசியதால் நானும் ஆங்கிலத் திலே பேசினேன். தாய் சேய் நல சம்பந்தமான பொருள் பற்றிய மருத்துவ ஆராய்ச்சி நம்முடைய மாநிலத்தைப் போல் வேறு எங்கும் விசேஷமாக இருந்தது இல்லை. நம்முடைய மாநில ஒரு பெரிய டாக்டர் அவர்கள் அதுபற்றி எழுதின ஒரு பாடப் புத்தகத்தை இன்று வெளி நாடு களிலே அமெரிக்கா, ஐரோப்பா போன்ற இடங்களிலே மட்டுமல்ல, எந்த மொழி பேசுபவர்களானாலும் சரி, ஒரு முக்கிய பாடப்புத்தகமாக, விசேஷமான "கிளாசிக்ல்" என்று சொல்லக்கூடிய வகையிலே அத்தனை பேரும் படித்து வருகிறார்கள் என்பதை நாம் பார்க்கும்போது, அது நாம் பெருமை அடையத்தக்க விஷயமாக இருக்கிறது. எலும்பு சம்பந்த மான பிரிவு நம்முடைய பெரிய ஆஸ்பத்திரியிலே விசேஷமாக கவனிக்கப் பட்டு வருகிறது என்பது மாத்திரமல்ல. அது உலகப்புகழ் பெற்று வருகின்றது என்று சொல்ல வேண்டும். அதற்காக கூடிய சீக்கிரத்திலே ஒரு ஃபேகல்டி கூட ஆரம்பிக்க வேண்டும் என்பதாக ஒரு முயற்சி இருந்துகொண்டு வருகிறது. இதை கூடியசீக்கிரம் செய்துவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். காலரா வியாதி, மலேரியா வியாதி, பிளேக் வியாதி, பெரியம்மை வியாதி, இப்படிப் பட்ட வியாதிகளை நாம் எவ்வளவு ஒழிக்க முடியுமோ அத்தனையும் செய்து கொண்டு வருகிறோம். எனக்கே தெரியும். பல வருஷங்களுக்கு முன்னால் மழைக்காலம் வந்துவிட்டால் காலராவும் சேர்ந்து வந்துவிடும் என்று, ஆனால் சமீப காலத்திலே காலரா கிட்டத்தட்ட தடுக்கப்பட்டுவிட்டது. அதற்காக நாம் பயப்பட வேண்டிய தேவையில்லை. அமைச்சர் அவர்கள்

பெரியம்மை என்ற வியாதி ஒழிந்துபோய்விட்டது என்று சென்ற வருஷத்திலே கூட சொன்னார்கள். சில காலத்துக்கு முன்னாலே மலேயா போன்ற இடங்களிலே பெரியம்மை என்ற வியாதி ஒழிந்துபோனது தெரியும். நம்முடைய நாட்டிலே கூட பெரியம்மை என்ற வியாதி வேறு சில மாநிலங்களிலே அதிகமாக இருந்தபோதிலும், நம்முடைய மாநிலத்தில் ஒழிக்கப்பட்டுவிட்டது. அதே சமயத்தில் சிக்கன் பாக்ஸ் என்று சொல்லக்கூடிய வியாதிக்கு மருந்துகள் இல்லாமல் இருக்கிறது. அதற்கு ஏதாவது ஆராய்ச்சி செய்து மருந்துகளைக் கண்டுபிடித்து, அந்த வியாதி வராமலிருப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். ஒரு குழந்தைக்கு சிக்கன் பாக்ஸ் வந்துவிட்டால், அதன் தாய் "கண்ணிலே வந்துவிட்டால் என்ன செய்வது? கண்ணிலே பூ விழுந்துவிட்டால் என்ன செய்வது? கண் கெட்டுப் போய் விட்டால் என்ன செய்வது? விழி பிதுங்கி விட்டால் என்ன செய்வது?" என்று பயப்படக் கூடிய நிலைமை இன்று இருக்கிறது. கண் கெட்டுப் போனால் என்ன செய்வது என்ற பயம் ஏற்பட்டிருப்பதினாலே அந்த வியாதிக்கு ஒரு மருந்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மலேரியாவைப் பற்றிப் பல உறுப்பினர்கள் பேசி விட்டார்கள். இந்த நோய்க்கு, வட இந்தியாவிலே வெளிநாட்டு ஸ்தாபனத்தினுடைய கூட்டு முயற்சியினாலே அதற்கான ஆராய்ச்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. ஏராளமான ஆண் கொசுக்களை உற்பத்தி செய்து அவற்றை மலடாக்கி, அந்த ஆண் கொசுக்களை ஊருக்குள்ளே . .

திரு. கே. ராஜாராம்: தலைவர் அவர்களே, பசு என்று சொல்கிறார்கள். பசு என்று சொன்னாலே அது பெண்தான். ஆண் பசு என்று சொல்லுகின்றார்கள். அதன் அர்த்தம் என்ன என்று . .

திரு. எஸ். டி. ஆதித்தன் : கொசு என்று சொன்னேன். (சிரிப்பு) பசு என்று சொல்லவில்லை. சரி, நரி பரியாகவும் பரி நரியாகவும் ஆகுமானால் கொசுவும் பசுவாகலாம். பசுவும் கொசுவாகலாம். ஆகவே இந்த மலடான ஆண் கொசுக்களை ஊருக்குள்ளே தள்ளி விட்டால், அந்தக் கொசுக்கள் பெண் கொசுக்களைச் சேர்ந்து அதற்குப் பிந்திய சந்ததி இல்லாமல் செய்துவிடும் என்ற ஒரு ஐடியாவின் பேரிலே அந்நிய உதவியுடனே அது செய்யப்பட்டு வருகிறது. அந்தப் பரிட்சையை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி ஒரு வேளை அது வெற்றி பெரும் பட்சத்தில் நம்முடைய கொசுத் தொல்லையும் அதோடு சேர்ந்த மலேரியா தொல்லையும், ஃபைலேரியா தொல்லையும் ஒழிந்து விடும் என்று நினைப்பதற்கு இடம் இருக்கிறது. அதற்கிடையிலே இப்படிப்பட்ட கொஞ்சம் உஷ்ணமான, வெப்பமான இடத்திலே கொசுவை ஒழிப்பது என்றால் அது சாதாரண முயற்சி அல்ல.

மாண்புமிகு மேலவைத் தலைவர் ; (திரு. முத்துசாமியைப் பார்த்து) அவர்கள் ஆங்கிலத்தில் பேசியிருந்தால் சீக்கிரம் முடித்திருப்பார்கள். நீங்கள் செய்த வேலை. தமிழ் பேசுகிறபோது வெளியே போய் விடுகிறீர்கள். இங்கிலீஷ் பேசுகிறபோது உட்கார்ந்திருக்கிறீர்கள்.

திரு. செ. முத்துசாமி : நான் தண்ணீர் அருந்துவதற்குத்தான் போய்விட்டு வந்தேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : இங்கிலீஷில் பேசியிருந்தால், முடிந்திருக்கும்.

திரு. எஸ். டி. ஆதித்தன் : தலைவர் அவர்களே, சித்த வைத்தியத்தைப்பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு முடிக்கலாம் என்று நினைக்கிறேன். முக்கியமாக நம்முடைய நாட்டிலே சித்த வைத்தியத்திலே மூலிகைகளை உபயோகிக்கிறார்கள். மூலிகையினுடைய சத்தை மாத்திரம் உபயோகித்தால் போதும். ஆனால் சித்த வைத்தியரோ அந்த வேர் உட்பட பூராவையும் உபயோகிக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால் சித்த வைத்தியத்திற்கு உண்டான மருந்துகள் சரியானபடி பிரயோஜனப்பட வேண்டுமானால், அதற்காகச் செய்யப்படவேண்டியது இரண்டு விஷயம்.

ஒன்று மிகுந்த ஆராய்ச்சி வேண்டும். இரண்டாவது ஸ்டாண்டர்டைசேஷன் வேண்டும். ரிசர்ச் அண்ட் ஸ்டாண்டர்டைசேஷன் இல்லாதபடி சித்த வைத்தியத்தை மேலும் விருத்தி செய்யமுடியுமா என்பது சந்தேகமாக இருக்கிறது. சத்து எங்கு இருக்கிறதோ, அதை மாத்திரம் எடுத்து உபயோகிக்கிறபோது அப்படி உபயோகப்படுத்துவது சித்த வைத்தியம் ஆகாது என்றெல்லாம் சொல்லுகிறார்கள். அது என்னவாக இருந்தாலும் சரி, ரிசர்ச் செய்யவேண்டும் என்பது ஒன்று. ஸ்டாண்டர்டைசேஷன் வேண்டும் என்பது இரண்டு.

நம்முடைய நாட்டிலே நிறைய மூலிகைகள் இருக்கின்றன. உதாரணமாக ரவுல்பியா, செர்பண்டினா பற்றி சொன்னார்கள். அது மிகவும் விசேஷமாக இருந்தது. அப்படிப்பட்ட மூலிகைகளில் நண்பர் அவர்கள் குறிப்பிட்ட பிரகாரம், துளசி என்பது ஒன்று. இரண்டு வாரமாக பத்திரிகையிலே அடிபட்டுக் கொண்டிருக்கிற வல்லாரை என்பது இன்னொன்று. இப்படி எத்தனையோ மூலிகைகள் இருக்கின்றன. நந்தியாவட்டைப் பூவிலிருந்து ஒரு சொட்டு சாறு எடுத்து கண்ணிலே விட்டால் கண்ணிலே இருக்கக்கூடிய வியாதிகள் அத்தனையும் போய்விடும் என்று நாட்டிலே சொல்லுகிறார்கள். இந்த மூலிகைகளையெல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்து அவைகளிலே என்ன சத்து இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அந்த சத்துக்கு அளவுப் பிரகாரம் வேண்டிய உபயோகம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக நண்பர்கள் சொன்னது போல், அர்பன் டெவலப்மென்ட்டைப் பற்றி ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். அர்பன் டெவலப்மெண்ட் சம்பந்தப்பட்டமட்டிலே, சிகாகோ என்ற ஊரிலே ரோடு மூன்று தட்டாக இருக்கிறது. அடியிலே ஒரு ரோடு. அந்த பூமிக்கு அடியிலே ஆழத்திலே போகிறது. கட்டிடங்களைச் சுற்றிக் கொண்டும் போகிறது. ஆற்றுக்குக் கீழேயும் போகிறது. நாம் பார்த்திருக்கலாம். அல்லது கேள்விப்பட்டிருக்கலாம். நியூயார்க்குக்கும் மன்ஹாட்டனுக்கும் இடையிலே ஆற்றுக்குக் கீழே ரயில், மோட்டார் எல்லாம் ஓடுகின்றது. அதே பிரகாரம் சிகாகோவிலும் மூன்று தட்டாக

1975 மார்ச் 27] [திரு. எஸ். டி. ஆதித்தன்]

இருக்கிறது. கீழ் தட்டிலே மோட்டார் கார் போகலாம். மைய தட்டிலே சாதாரண மோட்டார் கார் போகலாம். மேல் தட்டிலே இரும்புத் தூணை நிறுத்தி வைத்து ரயில் ஓடுகிறது. வீட்டின் மாடிக்கு நேரே கை நீட்டினுல்கூட, அடிபடும் போல இருக்கிறது.

நான், முன் நாளிலே பார்த்த ஞாபகம். ரொம்ப நாள் ஆகிவிட்டது. அங்கு உள்ள ரோடுகள் எல்லாம் நம்முடைய ரோடுகளைப் போலகூட அகலமாக இல்லை. ஒடுங்கின ரோடுகளாகத்தான் இருக்கின்றன. இந்த மாதிரி இங்கேயும் ரயில்கள் போகக்கூடிய ரோடுகள் வரலாம். அப்படி எல்லாம் பிளான் செய்துகொண்டிருப்பதும் சரியே. நம்முடைய அரசு ஏற்று எடுத்துக் கொண்டு வருகிற முயற்சி மிகவும் பாராட்டக்கூடியது என்று சொல்லி விடைபெற்றுக் கொள்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 6-20)

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, மருத்துவ, மக்கள் நல்வாழ்வுத் துறை கொள்கைக் குறிப்பின் மீது நான் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்ளுகின்றேன். இன்றைக்கு மருத்துவத் துறையிலே பல்வேறு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளுக்கு பல்கலைக் கழகங்கள் தனியாக அமைத்து அவற்றிலே ஆராய்ச்சியிலே முன்னேறுகிறார்கள். அதைப் போலவே மருத்துவத் துறையிலே தனி பல்கலைக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி இந்தத் துறையை முன்னேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகின்றேன். இந்தக் கருத்தை நான் சொல்லும்பொழுது மருத்துவத் துறை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரவர்கள் இதற்கான நிதி எங்கே என்று சொல்லக்கூடும். இருந்தாலும் என்னுடைய கருத்தைச் சொல்ல வேண்டியது என் கடமை என்பதற்காக நான் இதைச் சொல்லுகின்றேன். அதற்கு அடுத்தபடியாக ஆசிரியர்களுக்கு, தனியார் உயர்நிலைப் பள்ளிகளிலே, தனியார் தொடக்கப் பள்ளிகளிலே இருக்கக் கூடியவர்களுக்கு எல்லாச் சலுகைகளும் வழங்கிவிட்டார்கள். அரசுத் துறையிலே இருப்பவர்களுக்கு உள்ளது போலவே எல்லாச் சலுகைகளையும் வழங்கி விட்டார்கள். ஆனால் இந்த "மெடிக்கல் ரிஇம்பர்ஸ்மண்ட்" அதாவது மருத்துவ மனைகளிலே சிகிச்சை பெறும்பொழுது, அந்த நோயாளிக்குத் தேவையான மருந்து அந்த மருத்துவமனையில் இல்லாவிட்டால், இல்லாத மருந்தை வெளியிலே கடையிலே வாங்கும்போது, அந்தக் காசைத் திரும்பப் பெறுவதற்கான சலுகை இன்னும் வழங்கப் படாமல் இருக்கின்றது. எல்லாச் சலுகைகளையும் இந்த ஆசிரியர் சமுதாயத்திற்கு வழங்கிவிட்ட இந்த அரசு இந்த ஒரே ஒரு சலுகையை மட்டும் இன்னும் வழங்காமலிருக்கிறது. இந்தச் சலுகையை அந்தச் சமுதாயத்திற்கு, உயர்நிலைப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் தொடக்கப் பள்ளிகளிலே பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் வழங்க வேண்டும். கல்லூரிகளிலே இருக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் இல்லை. ஒரு காலத்தில் கல்லூரியிலே பணியாற்றிய பேராசிரியர் தான் இன்றைக்கு இந்தத் துறையிலே பணியாற்றுகிறார். அவருடைய காலத்திலே கூட இந்தக் குறை இன்னும் போக்கப்படாமல் இருக்கிறது என்பதை நினைவில் கொண்டு வந்து, அவர்கள் அதை அவர்கள் காலத்திலேயே தீர்த்து

வைத்ததாகப் பெருமை கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். அவர்கள் பணியாற்றிய காலத்திலிருந்து இவைகள் எல்லாம் செய்யப்படாமல் இருக்கின்றன. அவர்கள் காலத்தில் இதையெல்லாம் செய்ய வேண்டும் என்று நான் மறுபடியும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இதை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்கள் கூட சொன்னார்கள். சேலத்திலே மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு மத்திய அரசு தயாராக இருக்கிறது. அதற்கான குறிப்புகள் எல்லாம் இருக்கின்றன என்பதைப் பற்றியெல்லாம் டி.டி.சி.யிலே சொன்னார்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கிலீஷிலே சொன்னர், எப்படித் தெரியும் உங்களுக்கு ?

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, ஆங்கிலப் பேச்சில் ஓரளவு தெரிந்துகொண்டதைத்தான் நான் குறிப்பிட்டேன். இங்கே மாண்புமிகு மேலவைத் தலைவரவர்கள் கூட அடிக்கடி ஆங்கிலத்தில் பேசுகிறார். நான் அவரையே கேட்டுக் கொள்கிறேன். இது தமிழ் நாட்டு அவை. அதனால் தமிழிலேயே பேச முயற்சி செய்யுமாறு நான் கேட்டுக்கொண்டது என்னுடைய வேண்டுகோள். "இல்லை, ஆங்கிலத்தில் தான் நாங்கள் பேசுவோம்" என்று சொன்னாலும் சொல்லலாம். தமிழிலே பேச வேண்டுமென்று நான் கேட்டதற்கே குறுக்கே குத்தலாக ஒரு கேள்வியை "சேர்மேனே" கேட்கிற மாதிரி இருக்கிறது. நான் தமிழ் நாட்டு சபையிலே தமிழிலே பேச வேண்டுமென்று வேண்டுகோள் விடுக்கிறேன். இதை ஏற்றுக்கொள்ளுங்கள் அல்லது ஏற்காமல் விட்டு விடுங்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: உறுப்பினரவர்கள் அதனை வலியுறுத்த முடியாது. ஏனென்று சொன்னால், அவை நடவடிக்கைகளை தமிழிலும் நடத்தலாம், ஆங்கிலத்திலும் நடத்தலாம். தமிழிலே தான் நடத்த வேண்டுமென்று அவைத் தலைவரை வற்புறுத்த முடியாது. (திரு. முத்துசாமி குறுக்கீடு). குறுக்கிடாதீர்கள். நான் சொல்லுவதைக் கேளுங்கள். சட்டமன்றமேலவை விதிகள் எப்படி இருக்கின்றனவோ அப்படித் தான் நடத்த வேண்டும். நீங்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆதித்தனை தமிழில் பேசச் சொல்லும்போது ஆங்கிலத்தில் பேசினால் புரியவில்லையென்று குறிப்பிட்டீர்கள். ஆனால் இப்போது கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தது என்கிறீர்கள். இதைத்தான் குறிப்பிட்டேனேயொழிய வேறொன்றுமில்லை. அதற்காக அவையை நடத்தக்கூடிய என்னுடைய உரிமையை நீங்கள் ஒன்றும் கட்டுப்படுத்த முடியாது.

திரு. செ. முத்துசாமி: தலைவரவர்களே, உங்களுடைய உரிமையை நான் கட்டுப்படுத்த விரும்பவில்லை.

1975 மார்ச் 27]

மாண்புமிகு மேலவைத் தலைவர் : தமிழ் நாட்டிலே ஆங்கிலத்தில் பேசக்கூடாதா ?

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, என்னுடைய உரிமையைத் தான் நான் சொன்னேன் என்பதை மாண்புமிகு தலைவரவர்களுக்கு மிகவும் பணிவோடு தெரிவித்துக் கொள்ளுகின்றேன். தமிழ் நாட்டு அவையிலே தமிழிலே பேச வேண்டுமென்று கேட்பதற்கு எனக்கு உரிமை இருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே பணிவோடு தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : அதேமாதிரி தலைவரவர்கள் ஆங்கிலத்தில் பேசுவதைத் தடுப்பதற்கும் உரிமை இல்லை என்பதையும் அங்கத்தினர் தெரிந்துகொள்ள வேண்டும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, நான் தெரிந்துகொண்டு தான் வேண்டுகோள் விட்டேன். அடுத்து, சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று நான் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நீண்ட நெடுங்காலமாக ரெயில்வேயிலிருந்து கிடைக்கக்கூடிய அந்த செஸ் நிதி இதற்காக ஒதுக்கப் பட்டு வந்திருக்கிறது. ஆதலால் சேலத்தின் கோரிக்கை நீண்ட நெடுநாள் கோரிக்கையாகும். கோயம்புத்தூரை விட்டால், வேலூரை விட்டால், சென்னையிலே, தஞ்சையிலே, திருநெல்வேலியிலே இருக்கிறது. சேலம் பகுதிக்கு நீங்கள் கொஞ்சம் சலுகை வழங்கி சேலத்திலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதன் மூலம் ஒரு முன்னேற்றத்தைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்பு கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக கிராமத்திலே பணியாற்றக்கூடிய டாக்டர் களுக்கு மற்ற டாக்டர்களை விட சம்பளம் கூடுதலாகத் தர வேண்டும். ஊக்க ஊதியமாக அவர்களுக்கு ஏதாவது தந்தால் தான் அவர்கள் செல்வார்கள். ஆனால் இன்றைக்கு வேலையில்லாத டாக்டர்கள் 1,200 பேர் இருக்கிறார்கள் என்று பட்டியல் போட்டுச் சொல்லும்பொழுது அப் படிச் செல்லாமலிருக்கிறார்களா என்று பார்க்கும்போது, சற்று சிரமமாகத் தான் இருக்கிறது. டாக்டர்கள் வேலையில்லாமல் இருந்தாலும் பரவா யில்லை என்று கிராமத்திலுள்ள சில மருத்துவ மனைகளுக்குச் செல்லு வதற்குத் தயாராக இல்லாமல் இருக்கிறார்கள். கிராமத்திற்குச் செல் வதை ஊக்கப்படுத்துவதற்காக ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டும்.

அடுத்து, வேலையில்லாமல் இருக்கக்கூடிய டாக்டர்கள் அத்தனை பேருக் கும் உடனடியாக வேலை தருவதற்குரிய முயற்சியில் ஈடுபட வேண்டு மென்று நான் என்னுடைய வேண்டுகோளாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு ஹவுஸ் சர்ஜன்களாக இருக்கக் கூடியவர்கள் தாங்கள் பெறக் கூடிய படி போதாது, இன்றைக்கு இருக்கக் கூடிய வாழ்க்கைச் செலவுக்குத் தக்கபடி கூடுதலாக வேண்டும், அதை

உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கை விடுத்தோ என்னவோ-காரணம் எனக்குச் சரியாகத் தெரியவில்லை-ஸ்ட்ரைக் செய்துகொண்டிருக்கிருர்கள். பல்வேறு ஸ்ட்ரைக்குகளை நல்லமுறையிலே முடிவிற்குக் கொண்டு வந்த நம்முடைய மருத்துவத் துறை அமைச்சரவர்கள் இதையும் நல்ல முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். இங்கே கொடுக்கக்கூடியவாறு நிதி நிலைமை இல்லாமல் இருந்தாலும் கூட, அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, இந்த அரசால் இயன்றதைத் தந்து அவர்களுடைய வேலை நிறுத்தத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்று நான் அமைச்சரவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதற்கு அடுத்தாற்போல் நர்சுகளுக்கு நீண்ட காலமாக, இரண்டு ஆண்டு காலம் இரண்டரை ஆண்டு காலம் வேலையில்லாமல் இருந்த பிறகு தான், வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கும் உடனடியாக வேலை தருவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இவர்கள் எல்லோருக்கும் நண்பர் திரு.முத்துசாமி அவர்கள் சொல்கிறதுபோல்ஊதியம் கொடுப்பதாக இருந்தால், கல்விக்காக ஒதுக்கியிருக்கிற மானியத்திலேயிருந்து ஒரு 5 கோடி ரூபாயை ஆசிரியர்களுக்குக் கொடுக்கிற சம்பளத்திலிருந்து நாவலர் அவர்கள் விட்டுத் தந்து, அதை திரு. முத்துசாமி அவர்கள் ஒத்துக்கொண்டால், நான் அத்தனையும் செய்யத் தயார்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, கல்விக்கு ஒதுக்கியது போதாது, இன்னும் கொஞ்சம் வேண்டுமென்று நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிருேம். ஆகவே மக்கள் நல்வாழ்வு அமைச்சரவர்கள் நிதியைத் தேடட்டும். எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. ஆனல் கல்வியிலே இருக்கக்கூடிய நிதியை இதற்குத் திருப்பிவிட்டு இவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுமென்று முத்துசாமி சொல்ல வேண்டுமென்ருல், அது என்னல் முடியாது. அது சரியும் அல்ல. நான் பிரதிநிதித்துவம் செய்வது..............

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அவ்வளவு அக்கறையாக ஆசிரியர்களைக் காப்பாற்றும் அங்கத்தினர் அவர்கள், ஹவுஸ் சர்ஜன்கள் விஷயத்திலே தலையிடாமல் இருக்கலாம் அல்லவா? இவ்வளவு பேர் பேசினர்கள். யாராவது அந்த ஸ்டிரைக்கைப் பற்றிப் பேசினர்களா? ஏனென்ருல் அது அவ்வளவு கட்டாயமாக செய்யப்பட வேண்டிய ஸ்டிரைக் அல்ல. மாணவர்களாக இருக்கிறபோது இப்பொழுது மாதமொன்றுக்கு 275 ரூபாய் வீதம் அந்த மாணவப் பருவம் முடிகிற வரை ஓராண்டு காலத்துக்குத் தரப்படுகிறது. ஸ்டிரைக் என்ருலே ஆதரிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே அங்கத்தினரவர்கள் பேசுகிருர்கள். மேலும் விவரம் தெரியாது என்று சொல்லிவிட்டு அவருடைய வேண்டுகோளை எப்படியாவது ஒத்துக்கொள்ளுங்கள் என்றும் சொல்லுகிருர்கள். பணம் இல்லை. நிதி என்ற பிரச்சினை அவ்வளவு எளிதாகத் தீர்க்கக்கூடிய பிரச்சினை அல்ல. நிதி இருக்குமானல், இன்னும் எவ்வளவோ வேண்டுமானலும் தரலாம். ஆகவே திரு. முத்துசாமி இவ்வாறு

பேசுவது, வெளியிலே மாணவர்களுக்கு எப்படித் தோன்றும்? திரு. முத்துசாமி ஒருவர் தான் தமக்குப் பாதுகாவலர், அமைச்சர் அவர்களிடம் நாங்கள் எவ்வளவு தான் பேசினுல் கூட அவர்களுக்கு அந்த ஊதிய உயர்வைத் தருவதிலே ஏனே அக்கறையில்லை என்பதுபோல் எண்ணிவிடக் கூடும். அரசிடம், நிதி இருக்குமானுல் அவர்களுக்கு தாராள மாகக் கொடுத்து விடலாம். ஆகவே அதைத் தவிர உறுப்பினரவர்கள் பொதுவாகப் பேசுவார்களேயானுல், அது எனக்கு உதவிகரமாக இருக்கும்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைக்கு நாட்டிலே நடந்துகொண்டிருப்பதைப் பத்திரிகையிலே படிக்கிறேன். படித்ததை அமைச்சரவர்களிடத்திலே சொல்லி அவர்களுடைய கவனத் திற்குக் கொண்டுவந்து, அதைத் தீர்ப்பதற்கான முயற்சியைச் செய்யுங்கள் என்று சொல்கிறேன். மற்ற உறுப்பினர்கள் சொல்லாமல் நான் சொல்லி ஏதோ புதிதாக அவர்களிடத்திலே ஆதரவு தேடுவதிலே எனக்கு எந்த விதமான இலாபமும் இல்லை. ஏனென்றால் நான் மறுபடியும் ஆசிரியர் கள் தொகுதியிலே நிற்க வேண்டியவனே தவிர, அவர்களிடத்திலே சென்று ஓட்டுப் பெற வேண்டியவனல்ல. இன்றைக்கு நாட்டிலே இருக்கக் கூடிய நிலைமையிலே அவர்களுடைய வேலை நிறுத்தத்தை நீடிக்க விட்டுவிட வேண்டாமென்று நான் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, உறுப்பின ரவர்கள் அந்த வேண்டுகோளை அவர்களுக்கு விடலாமல்லவா? அந்த மாணவர்கள் இதைப்பற்றி அதிகமாகப் பேசாமலேயே திடீரென்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தார்கள். மறுபடியும் நாங்கள் பேச ஆரம்பிப்பதற்கு முன்னுல் தொடர்ந்து வேலை நிறுத்தத்தை நடத்திக் கொண்டிருக்கிறுர்கள். வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு விடலாம் எனவும் அவர்களுடைய பயிற்சி கெட்டுப் போகாதபடி, படிப்பு கெட்டுப்போகாத வகையிலே, அரசாங்கத்தால் எந்தெந்த வகைகளில் உதவ முடியுமோ அந்தந்த வகையிலே உதவியைப் பெற்றுக்கொள்ள அனுவசியமான வேலை நிறுத்தம் தேவையில்லையென்று உறுப்பினர் அவர்கள் சொல்லுவார் களா?

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, வேண்டுகோள் விடுப்பதற்கு வாய்ப்பு இங்கே எனக்கிருக்கிறது. அமைச்சரவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுக்கிறேன். அமைச்சர் அவர்களிடத்திலே எல்லா சக்தி களும் இருக்கின்றன. அவர்களுக்கு நான் வேண்டுகோள் விடுவதை விட அமைச்சர் அவர்களே விட்டால் பிரச்சினை விரைவாகத் தீரும் என்பதற் காகத்தான் நான் அமைச்சர் அவர்களை வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நான் ஏற் கெனவே வேண்டுகோள் விட்டிருக்கிறேன். அதற்கு திரு. முத்துசாமி துணை வருவாரா என்று கேட்கிறேன்.

திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு தலைவரவர்களே, எந்த நல்ல காரியத்துக்கும் முத்துசாமி துணையாக இருப்பேன் என்பதை நான் தெரிவித்துக்கொண்டு இந்தப் பிரச்சினையிலே உடனடியாக தீர்வு காண்பதற்கான முயற்சியிலே ஈடுபட வேண்டுமென்றும், வேலையில்லாத நர்சுகளுக்கு உடனடியாக வேலை கொடுப்பதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்றும், டாக்டர்களுக்கு வேலை தருவதிலே விரைவாக நடவடிக்கை எடுப்பதற்காக மருத்துவ மனைகளை விரிவுபடுத்த வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டு, இதிலே பேச வாய்ப்பு நல்கியமைக்கு மாண்புமிகு தலைவரவர்களுக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன்.

* திரு. கே. ராஜாராம்: மாண்புமிகு தலைவரவர்களே, முதலில் பேசிய அங்கத்தினர்கள் பலரும் நமது "பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில்" மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை குறித்த குறிப்புகளுக்காக ஒரு நாள் ஒதுக்கியது தவறு, நேரம் போதாது என்று கடந்த இரண்டு மணி நேரமாகக் கூறினார்கள். அவர்களுக்கெல்லாம் நான் பதில் சொல்ல வேண்டிய கட்டத்தில் இருந்துகொண்டிருக்கின்றேன். முதலில் கல்விக்காக இரண்டு நாள் ஒதுக்கினோம். பொது சுகாதாரத்துக்கு இரண்டு நாள் ஒதுக்காதது இப்பொழுது தான் தவறு என்பதாகக் கருதுகிறேன். பல நண்பர்கள் என்னிடம் கோபித்துக் கொண்டு போய் விட்டார்கள், எங்களுக்கெல்லாம் பேசுவதற்கு முடியவில்லையே என்று. அவர்களுக்கெல்லாம் நான் சொல்லியிருக்கிறேன் "அப்ராபிரியேஷன் பில்" வரும்போது பேசலாமென்று. பல பேர் பேசுவதற்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று கோபமாகப் போய்விட்டார்கள்.

(பிற்பகல் 6-30)

இந்த வருஷத்தின் அனுபவத்தை வைத்துக் கொண்டு அடுத்த வருஷம் இது இரண்டு நாள் ஒதுக்க முற்படுவோம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: முன்னாலே ஒரு 6 உறுப்பினர்கள் பெயர் கொடுக்கிறார்கள். தொடங்கப் பேச ஆரம்பித்ததற்குப் பின்னாலே மேலும் ஒரு 4, 5 உறுப்பினர்கள் பெயர் கொடுக்கிறார்கள். நாம் என்ன செய்கிறோம்? 6, 7 பேர் தான் இருக்கிறார்கள் என்று ஒரு நேரத்தைக் கொடுத்து நடத்துகிறோம். பின்னாலே ஒரு 4 பேர் அதிகமாகச் சேருகிறபோது, சீக்கிரம் முடிக்க வேண்டியிருக்கிறது. இது சீக்கிரம் பேசிவிட்டுப் போகிறவர்களுக்கெல்லாம் இடைஞ்சலாகத்தான் இருக்கிறது. இதை நாம் உணருகிறோம். இரண்டு நாள் கொடுத்தால் தேவலை என்றுதான் நாம் நினைத்தோம். அப்புறம் ஒரு நாள் போதுமென்று சொன்னார்கள்.

திரு. எஸ். டி. ஆதித்தன்: நான் டில்லி சட்டசபையில் இருந்த போது அங்கு ஒரு வழக்கம் இருந்தது. கட்சி வாரியாக, காங்கிரசுக்கு இவ்வளவு நேரம், இன்ன கட்சிக்கு இவ்வளவு நேரம் என்று முன்னதாகவே பகிர்ந்துகொள்வார்கள். எங்கள் கட்சிக்கு 75 நிமிடம், இன்னொரு கட்சிக்கு 150 நிமிடம், இன்னொரு கட்சிக்கு 100 நிமிடம்

என்று பிரித்து விடுவார்கள். அந்தந்த "விப்" அந்தக் குறிப்பிட்ட நேரத்திலே பேசுவதற்கு ஏற்பாடு பண்ணுவார்கள். தன்னுடைய கட்சியிலே ஒருவரை 20 நிமிஷம் பேசவிட்டு, இன்னொருவரை 5 நிமிஷமும் பேசவிடுவது அவருடைய வழக்கம்.

திரு கே. ராஜாராம்: அந்த சிரமம் ஒன்றும் வராது. We will manage it. இது ஒரு "பாபுலர்" டிபார்ட்மெண்ட்டாக இருப்பதால் எல்லோரும் இதிலே பங்கு கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆளும் கட்சிக்காரர்களிலே பலபேர் பேச முடியவில்லை. எதிர் கட்சிக்காரர்களிலாவது இரண்டு மூன்று பேர் பேசிவிட்டோம். ஆளும் கட்சியில் ஒருவர்தான் பேசியிருக்கிறார். இதையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும். பேசவேண்டும் என்று விரும்பிய எத்தனையோ பேரையெல்லாம் நேரம் இல்லையென்று "கொரடா" அவர்கள் எப்படியோ சமாளித்து விட்டார்கள்.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 6 கோடியே 42 லட்சம்தான் செலவழிக்கப்பட்டிருக்கிறது. திட்டபூர்வமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 14 கோடியே 35 லட்சம் ஒதுக்கினார்கள். ரூ. 14 கோடியே 45 லட்சம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 21½ கோடி ஒதுக்கினார்கள். ரூ. 26 கோடி செலவழிக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 16 கோடி ஒதுக்கப்பட்டு ரூ. 15 கோடியே 33 லட்சம்தான் செலவாகியிருக்கிறது. வரப்போகிற, அதாவது, நடைமுறையில் இருக்கிற ஐந்தாவது திட்டத்தில் நமது நல்வாழ்வுத் துறைக்கு ரூ. 50 கோடி தோராயமாக ஒதுக்கியிருக்கிறார்கள். திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஆனால் எவ்வளவு பணம் கிடைக்கும், எவ்வளவு செலவு செய்வார்கள் என்பதை யாராலும் சொல்ல முடியாது. நமது தமிழ்நாடு மட்டுமல்ல, எந்த மாநில அரசும் சொல்ல முடியாத ஒரு நிலைமை இப்போது இந்தியாவில் இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால் திட்டமே வகுத்து முடியவில்லை. ஒவ்வொரு வருஷமும் அந்தந்த வருஷத்திற்கான வரவு எவ்வளவு, செலவு எவ்வளவு என்று பார்த்து, அதற்குத் தகுந்தபடி திட்டத்தை வகுத்துக்கொள்கிறார்கள். அடுத்த வருஷமும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு செலவழிக்க முடியும் என்பதை இந்த வருஷத்தில் சொல்ல முடியாது. அப்பேர்ப்பட்ட நிலைமையில் நம்முடைய தேவைகள் எவ்வளவு என்று வகுத்து அமைச்சரவர்கள் தன்னுடைய பாலிசி நோட்டில் ரூ. 50 கோடி குறைந்த பட்சம் தேவை இருக்குமென்று சொல்லியிருக்கிறார். ரூ. 50 கோடி போதாது. ஏனென்றால் முன்னே இருந்த நிலைமையையும் நாம் இப்போது செய்து வருகிற செலவினங்களையும் பார்க்கும்போது ரூ. 50 கோடி என்பது போதாது. மேலும் அதிகமாகச் செலவழிக்க வேண்டியிருக்கும். அடுத்தபடியாக, கல்வித்துறையில், மற்ற கல்லூரிகளைக் காட்டிலும் மருத்துவக் கல்லூரி மாணவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் மற்ற கலைக் கல்லூரிகளில் நடக்கும் "ஸ்ட்ரைக்குகள்" மாதிரி அடிக்கடி மருத்துவக் கல்லூரிகளில் நடக்காமல் கூடுமானவரையில் நல்ல முறையில் அதை நிர்வகிப்பவர்களும், நிர்வாகிகளும் அதாவது மருத்துவக்

கல்லூரிகளை நடத்துபவர்களும் மாணவர்களும் பொறுப்பு உணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள்; ஏதோ இரண்டொரு முறை நடந்ததே தவிர, கூடியவரையில் "ஸ்ட்ரைக்" இல்லாமல் நடந்து நல்ல முறையில் மாநிலத்தின் பெயரைக் காப்பாற்றி வருகிறார்கள். போன வருஷத்திலும் இதைத்தான் நான் சொன்னேன். அது மாணவர்களால் நன்றாகப் பாராட்டப் பட்டது. இப்போதும் நான் அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மாணவர்கள் நல்ல முறையில் தங்களுடைய படிப்பில் கவனத்தைச் செலுத்தி "ஸ்ட்ரைக்குகள்" கூடுமானவரையில் இல்லாமல் கொண்டுவருவது பற்றி நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். கல்லூரிகளை நிர்வகிக்கும் "பிரின்ஸ்பால்களும்" "டீன்களும்" நல்ல முறையில் நடத்துவதால்தான் இம்மாதிரி "ஸ்ட்ரைக்" இல்லாமல் நடைபெற்று வருகிறது. பதிலுக்கு டாக்டர்கள் "ஸ்ட்ரைக்" செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். அல்லது கடைசியில் "ஹவுஸ் சர்ஜன்கள்" ஸ்ட்ரைக் செய்ய ஆரம்பித்து விடுகிறார்கள். இது நல்வாழ்வுத்துறை. மற்றவர்களுக்கு வழி காட்டியாக இருக்க வேண்டும். கூடுமானவரையில் "ஸ்ட்ரைக்" இல்லாமல் நடைபெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் வைத்தியம் நடக்கும் இடங்களில், ஆஸ்பத்திரிகளில் ஸ்ட்ரைக் நடந்தால், அது எவ்வளவு பெரிய ஆபத்துகளை உண்டு பண்ணுகிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். முந்தாநாள் என்று நினைக்கிறேன். மதுரையிலே ஒரு நோயாளிக்கு "பெனிசிலின்" ஊசி போட்டிருக்கிறார்கள். "பெனிசிலின்" ஊசி போட்டவுடன் அதனுடைய "ரிஆக்ஷன்" ஏற்பட்டு, உயிர் போகக் கூடிய ஒரு நிலைமை இருந்திருக்கிறது. டாக்டர்கள் இல்லை. உடனே அந்த "ஸ்ட்ரைக்கில்" இருந்த மாணவர், "ஹவுஸ் சர்ஜனாக" இருந்த ஒருவர், ஸ்ட்ரைக் பண்ணிக்கொண்டிருந்தவர் தற்செயலாக அங்கு ஓடி வந்து அவரே அதற்கு மாற்று மருந்து ஊசியைப் போட்டு உயிர் போய்க்கொண்டிருந்த ஒரு நோயாளியைக் காப்பாற்றியதாக இன்று காலை பத்திரிகையில் படித்தேன். பழைய செய்தி அல்ல. ரொம்ப சுடச் சுட வந்த செய்தி. இன்று காலை ஹிந்து பத்திரிகையில் பார்த்தேன். எனக்கு மிகவும் மகிழ்ச்சியைக் கொடுத்தது. அவர்கள் எவ்வளவு தான் ஸ்ட்ரைக் பணணினாலும் கூட நேரத்தில் அதை மறந்து விட்டு இம்மாதிரி தன் தொழிலில் ஈடு பட்டதற்காக அந்தக் குறிப்பிட்ட மாணவரை, வைத்தியக் கல்லூரி மாணவரை, நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

மொத்தத்தில் 8 மருத்துவக் கல்லூரிகளிலே, செங்கற்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரிகள் இன்னும் இந்திய மருத்துவ மன்றத்தால் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் போதிய வசதிகள், அவசியமாக இருக்க வேண்டிய வசதிகள், இல்லாமல் இருப்பதுதான். அதனால் தான் அந்த இரண்டு கல்லூரிகளும் இன்னும் அங்கீகரிக்கப்படாமல் இருக்கின்றன. ஆகையினால் அதற்கு வேண்டிய முயற்சியை, ஏற்பாடுகளை முதலில் செய்ய வேண்டுமென்று அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதிக நேரம் நான் பேச விரும்பவில்லை. குறிப்பாக சில விஷயங்களை மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன். "ஆபரேஷன் தியேட்டர்கள்" அடிக்கடி மூடப்பட்டு விடுகின்றன. அது ரொம்பக் கொடுமையானது.

"டெடனஸ்" ஏற்படுகிறது, ஆகையினால்தான் அதை மூடிவிடுகிறார்கள் என்று சொன்னால் அது நம்முடைய "எபிஷியன்சி"க்கு எடுத்துக் காட்டாக அமையாது. பாதிக்கக் கூடிய விஷயம். பொதுவாக இந்தியாவிலேயே நல்ல பெயர் பெற்ற டாக்டர்களைக் கொண்டிருக்கக் கூடிய நகரம் சென்னை நகரம். இது மாதிரி "ஆபரேஷன் தியேட்டர்களை" மூடும்படியான ஒரு நிலைமைக்குக் கொண்டுபோய் விடுவதைப் பார்த்தால் அதைச் சரியானபடி கவனிக்காமல் விட்டு விட்டார்கள் என்று டாக்டர்களை நாம் குறை சொல்ல வேண்டியிருக்கிறதே தவிர, வேறு ஒன்றுமில்லை. இதை அவர்கள் சரியானபடி கவனிக்க வேண்டுமென்று அவர்களுக்கு வேண்டுகோள்தான் விடுக்க முடியும். இம்மாதிரியான நிலைமை வராதென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: திருச்சியிலே மாதக்கணக்கில் மூடப்பட்டிருக்கிறது.

திரு கே. ராஜாராம்: அடுத்தபடியாக, பெரிய நகரங்கள் மதுரை, கோவை, திருச்சி, சேலம், சென்னை போன்ற பெரிய நகரங்களில் இருக்கும் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளைப் படுக்க வைக்க இடம் இல்லாத அளவுக்கு பெரும் கூட்டம். யாராவது அமைச்சர்கள், உத்தியோகஸ்தர்கள் வருகிறார்கள் என்றால், எப்படியோ வெளியே வைத்து விட்டு இட வசதி இருப்பது போல காண்பிக்கிறார்களே ஒழிய, சாதாரண நாட்களில் எங்களைப் போன்றவர்கள் பார்க்கும்போது மிதித்துத் தாண்டிக் கொண்டுதான் போக வேண்டியிருக்கிறது. அதற்கு ஏதாவது நாம் வழி செய்ய வேண்டும். பெரிய கட்டடங்கள் கட்டித்தான் அவர்களை வைக்க வேண்டுமென்று இல்லாமல், தற்காலிகமாக "ஷெட்டு"களாவது போட்டு அவர்களுக்கு ஏதாவது ஏற்பாடு பண்ண இயலுமா என்று அமைச்சரவர்கள் யோசிக்க வேண்டும். பெரிய ஆஸ்பத்திரிகள் இருக்கும் பெரிய நகரங்களைச் சுற்றிலும் இருக்கக் கூடிய தாலுகா தலைநகர ஆஸ்பத்திரிகளில் எல்லா வசதிகளையும் நாம் செய்து கொடுத்து விட்டோமானால், ஜில்லா ஹெட்குவார்ட்டர்ஸ் ஆஸ்பத்திரிக்கும் சென்னையில் இருக்கும் ஜெனரல் ஆஸ்பத்திரி, ஸ்டான்லி ஹாஸ்பிடல், கீழ்ப்பாக்கம் ஹாஸ்பிடல், ராயப்பேட்டை ஹாஸ்பிடல் போன்றவற்றிற்கெல்லாம் அவ்வளவு அதிகமான கூட்டம் வராமல் தடுக்க இயலலாம். எக்ஸ்ரே மட்டும் போதாது. மற்ற எல்லா வசதிகளையும் அந்தத் தாலுகா, தலைநகர ஆஸ்பத்திரிகளுக்கும் பெரிய நகரைச் சுற்றியுள்ள ஆஸ்பத்திரிக்கும் செய்து கொடுக்க எவ்வளவு செலவாகும் என்பதைப் பார்த்து, அதற்கு ஒரு திட்டம் தீட்டி ஏற்பாடு செய்வது நலம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 6-40)

பொதுவாக இந்த அறிக்கையில் என் மனத்தை மிகவும் நோக வைத்த விஷயம், பள்ளிக்கூடம் செல்லும் சிறு பிள்ளைகளிடையிலே 1974-75ம் ஆண்டு சுமார் எட்டு லட்சம் குழந்தைகளைப் பரிசோதனை செய்தார்கள் என்றும் அதிலே 7,056 குழந்தைகளுக்குத் தொழுநோய்

இருப்பதற்கான அறிகுறிகள் இருந்ததாகவும் சொல்லப்பட்டிருப்பதுதான். மூன்று வரிகளில் தான் இது எழுதப்பட்டிருக்கின்றது. ஆனால் இது இன்னும் நாம் நம்முடைய மக்களை எவ்வளவு தூரம் ஆபத்தான நிலைமையில் வைத்திருக்கின்றோம் என்பதைத்தான் காட்டுகின்றது. சிறு பிள்ளைகள் விஷயத்தில் தொழு நோய் மிகச் சுலபமாகத் தொற்றிக் கொண்டு விடுகின்றது. நம்பிக்கையுடன் நமது வீட்டிலுள்ள குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறோம். ஆனால் ஸர்வேயில் இப்படி 7,056 பிள்ளைகளுக்குத் தொழுநோய் இருப்பதாகச் சொல்லப்படுவது, கிட்டத்தட்ட ஒரு சதவிகிதம் குழந்தைகளுக்கு இருப்பதானது மிகமிக ஆபத்தானதாகும். ஒரு சதவிகிதம் என்பது மிகப் பயங்கரமான தொகை. இதை லேசாக ஒதுக்கிவிட முடியாது. எப்படியாவது இந்தப் பிள்ளைகளுக்கு வேண்டிய சிகிச்சையைக் கொடுத்து, மேலும் குழந்தைகளுக்கு வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அடுத்து தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்—பிரைமரி ஹெல்த் ஸெண்டர்ஸ்-ல் போதிய மருந்துகள் இல்லை என்ற புகார் இருக்கின்றது. இதை நான் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. அமைச்சர் அவர்களுடைய பாலிஸி நோட்டிலே இது பற்றிக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். "போதிய மருந்துகள் இல்லை, இதற்காக நடப்பு நிதி ஆண்டில் அதிகமாகக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்திருக்கிறோம்" என்று சொல்லியிருக்கின்றார்கள். இதிலே முக்கியமாக மனிதனுடைய மனச்சாட்சிக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மருந்துகள் திருடு போகாமல் பார்த்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. மருத்துவ மனைகளிலே பெருமளவிற்கு இப்படித் திருட்டு நடப்பது என்று சொல்லுவது வேலியே பயிரை மேய்வது போலாகும். இதற்கு இடம் கொடுக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். யாராவது இதிலே பிடிக்கப்பட்டால் அவர்களுக்குக் கடுமையான தண்டனை கொடுத்து, இப்படித் திருடு போகாமல் பார்த்துக்கொள்ளுவது முக்கியமான கடமையாகும்.

அடுத்து, நமது நாட்டிலே மலேரியா என்பது அடியோடு ஒழிக்கப்பட்டு விட்ட ஒன்றாக இருந்தது. ஆறு ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் அந்த நிலையை அடைந்துவிட்டோம். ஆனாலும் இப்போது இங்கும் அங்குமாக மலேரியா ஜுரம் தலைதூக்குகிறதாகத் தெரிகிறது. இதை ஒழிக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

அடுத்தபடி, நரம்புச்சிலந்தி நோயால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்கள் பல இருக்கின்றன. காரணம் அந்தக் கிராம மக்கள் அங்கு தேங்கி நிற்கும் ஊருணித் தண்ணீரை உபயோகப்படுத்துவதுதான். கிணற்றுத் தண்ணீரை உபயோகித்தால் இது வருவதில்லை. ஆனால் தேங்கி இருக்கும் குளத்துத் தண்ணீரை உபயோகிக்கும் கிராமங்களிலே இது வருகிறது. மதுரை மாவட்டம் திருமங்கலம் பகுதி கள்ளிக்குடி கிராமத்தில் மேலும் அதைச் சுற்றியுள்ள மூன்று நான்கு கிராமங்களிலே இந்த நரம்புச் சிலந்தி நோயால் மக்கள் தொல்லைப் பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இப்போது நான்கைந்து வருஷமாக

அங்கிருந்த குளத்தில் மருந்தைக் கலப்பதனாலும், தண்ணீரைக் காய்ச்சிக் குடிப்பதாலும் அந்தத் தொல்லை இல்லை என்று சொல்லலாம். ஓரள விற்குக் கட்டுப் படுத்தப்பட்டிருக்கின்றது. இப்போது பல கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்கத் திட்டமிட்டிருக்கும் நேரத்திலே, இப்படி நரம்புச் சிலந்தியால் பாதிக்கப்பட்டுள்ள கிராமங்களுக்கு முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொண்டு முடித்துக் கொள்ளுகிறேன். தமிழ் நாட்டில் 58,595 கிராமங்கள், சிற்றூர்கள் இருக்கின்றன. அவற் றிலே கிட்டத்தட்ட 2·56 கோடி மக்கள் வாழ்கின்றார்கள். இவற்றிலே "0·38 கோடி மக்கள் வாழும் 4,916 கிராமங்கள்," சிற்றூர்கள் ஆகியவற்றில் நல்ல குடிநீர் வசதிகள் இல்லை என்று அரசே சொல்லும்படியான ஒரு நிலைமை இன்னும் 1975-ல் இருக்கின்றது என்று சொன்னால், நாம் எல்லோரும் வெட்கித் தலை குனிய வேண்டிய நிலைமையில் இருக்கிறோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

1968-ம் ஆண்டு என்று நினைக்கிறேன், "குடி நீர் வசதி இல்லாத கிராமமே இல்லை தமிழ் நாட்டில் என்று சொல்லத்தக்க அளவிற்கு எல்லா கிராமங்களுக்கும் குடி நீர் வசதி செய்து தரப்பட வேண்டும்" என்று அண்ணா அவர்கள் பட்ஜெட் கூட்டத் தொடரில் பேசியிருக்கி றார்கள். ஆனால் இன்னும் 4,916 கிராமங்களிலும் சிற்றூர்களிலும் குடிநீர் வசதிகள் இல்லை. 2,230 கிராமங்களிலும் சிற்றூர்களிலும் நரம்புச் சிலந்தி இருக்கிறது என்று சொல்லத்தக்க அளவிற்கு நிலைமை நீடித்தால், நாம் இதிலே போதிய கவனம் செலுத்தவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனவே இந்தக் கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதிகளை உடனடியாகச் செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பொதுவாக மருத்துவத் துறையில் நமது மாநிலத்தின் முன்னேற்றம் பற்றி யாரும் குறைத்துக்கூற முடியாது. எனக்கு முன்பு பேசிய அன்பர் கள் சொன்னதைப் போல், இதய நோய் சிகிச்சை, சிறு குழந்தை களுக்குச் சிகிச்சை இந்த இரண்டு வகையிலும் மற்ற மாநிலத்தவர்கள் இங்கே வந்து பார்த்துவிட்டுப் போகக்கூடிய வகையில் நவீன இயந்திரங் களையும் சாதனங்களையும் வைத்துக்கொண்டு நல்ல முறையில் வெற்றி கண்டிருக்கின்றார்கள் என்றால், அது பெருமைப்படக்கூடியது, பாராட்டக் கூடியதாகும். பெரியம்மை தடுப்பிலும் நாம் ஓரளவிற்கு வெற்றி கண்டிருக்கிறோம் இந்த மாநிலத்தில், என்று பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும். மேலும் இங்கேயிருந்து பிற மாநிலங்களுக்கு குறிப்பாக பீகார், உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு நமது டாக்டர்கள் அங்கே பெரியம்மை நோய் ஒழிப்பிற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்று பார்க்கும்போது பெருமைப்படுகிறோம். அந்த அளவிற்கு நமது சுகாதார இலாகா திறமையாகச் செயல்படுகின்றது என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். மேலும் நான் சொல்லிய குறைகளையெல்லாம் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்து, சீக்கிரம் அவற்றைத் தடுப்பதற்கு அல்லது தீர்ப்பதற்கு என்னென்ன செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: அமைச்சர் அவர்களுடைய உரை முடியும் வரையில் அவையின் காலம் நீட்டிக்கப்படுகிறது.

* மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கொள்கைக் குறிப்பின்மீது நடைபெற்ற விவாதத்திலே கலந்து கொண்டு எதிர்க் கட்சித் தலைவரவர்களும் பல்வேறு மதிப்பிற்குரிய உறுப்பினர்களும் இந்தத் துறை நடைபெற்று வருகிற முறையைச் சில காரணங்களுக்காகப் பாராட்டியும், சில வகைகளிலே சீர்திருத்தம் தேவை என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். அவர்களுடைய நல்ல நோக்கத்தோடு கூடிய பயனுள்ள அந்தக் கருத்துக்களை அந்தத் துறை அலுவலர்கள் நன்கு ஆராய்ந்து அவற்றைச் செயல்படுத்த முயற்சிப் பார்கள் என்ற உறுதியினை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மான்யக கோரிக்கையில்—இது, இங்கே மான்யக் கோரிக்கை என்று வரவில்லை, சட்ட மன்றத்தில் இது வைக்கப்பட்ட போது, அங்கே ஒவ்வொரு மானியமும் எவ்வளவு தொகை என்ற குறிப்போடுதான் இந்த விளக்கங்கள் அங்கே வழங்கப்பட்டன. சுகாதாரத் துறைக்காக ரூ. 16,25,76,000 என்ற அளவிற்கும் மருத்துவ மானியக் கோரிக்கைக்காக ரூ. 30,93,98,000 என்ற அளவிற்கும் சட்டப் பேரவையில் வைக்கப்பட்டன. மேலவைக்கு வரும்போது இது மானியக் கோரிக்கை அல்ல என்ற காரணத்தினால், மானியம் என்ற வரியை எடுத்துவிட்ட காரணத்தினால், இந்தக் கொள்கை விளக்க அறிக்கையில் தொகை பற்றிய விவரக் குறிப்பைக் காண இயலவில்லை. ஆனாலும் நடைமுறையில் என்னென்ன பயனுள்ள காரியங்கள் நிறைவேற்றப்பட இருக்கின்றன என்ற வகையில் அது பற்றிய விளக்கங்கள் இங்கே ஆராயப்பட்டிருக்கின்றன. நம்முடைய தமிழ் நாட்டிலே ஆண்டு தோறும் இந்தத் துறைக்காக அதிக கவனம் செலுத்தப்படுகின்றது என்று சொல்லத்தக்க விதத்தில் நிதி ஒதுக்கப்பட்டு வருகின்றது என்று சொன்னாலும், இந்த ஆண்டு தமிழ் நாடு முழுவதும் ஏற்பட்டிருக்கின்ற மிகப் பெரிய வறட்சியின் விளைவால் நாங்கள் எதிர்பார்த்த அளவிற்கு அதிகமான நிதி இதற்காக ஒதுக்கும் வாய்ப்பு கிடைக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 6–50)

வறட்சி நிவாரணத்திற்காக நிதி ஒதுக்குகிறபோது, "புதிய திட்டச் செலவுப் பணிகளாக", இந்தத் துறையினர் எடுத்துச் சொன்ன அத்தனையையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நிதி நிலைமை நிதித் துறைக்கு இல்லை. ஆனால் மிக இன்றியமையாததாக, உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டியதாக எவை இருந்ததோ அவற்றை நிறைவேற்றுவதற்குரியவற்றை அரசு ஏற்றுக்கொண்டிருக்கின்றது. மேலும் வாய்ப்பு கிடைக்கும் போது இந்தத் துறையினுடைய ஆலோசனையாகக் கிடைத்திருக்கின்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே பேசிய உயர்திரு சித்ரா நாராயணசாமி அவர்கள் பொதுவாக இந்தத் திட்டங்கள் செம்மையாக நடைபெறுகின்றன என்று குறிப்பிட்டாலும், மலேரியா கண்ட்ரோல் புரோகிராமைப் பொறுத்தவரையிலே, அதிக எண்ணிக்கையில் நோய்க்கு ஆளாகியிருக்கிறார்கள் என்று புள்ளி விவரம் கொடுப்பதன் காரணமாக அதைக் குறித்து, அதனுடைய (effectiveness) எபக்டிவ்னஸ் குறித்து, ஐயுறவைத் தெரிவித்திருக்கின்றார்கள். இந்த மலேரியா கண்ட்ரோல் என்பது பரவலாக நடத்தப்படுகின்ற ஒரு திட்டமாகும். பரவலாக நடத்தப்படுகிற திட்டமாக இது இருந்தாலும் கூட "இன்டென்சிவ்" (intensive) ஆக ஒரு குறுகிய வட்டாரத்திலே மிக நெருக்கமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இயலாத நிலையில் "அட்டாக் பேஸ், மெயின்டினன்ஸ் பேஸ், இன்டெக்ரேஷன் பேஸ்" என்று மூன்றாகப் பிரித்து, இது செயல்படுகிறது. இந்த முறையிலே "அட்டாக் பேஸில்" தீவிரமாகக் காரியம் ஆற்றி, மறுபடியும் "மெயின்டினன்ஸ் பேஸ்" என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர் தீவிரம் குறைந்துவிடுகிறது. இயற்கையிலேயே கொசுக்களை ஒரு முறை அழித்துவிட்ட காரணத்தாலேயே கொசு மறுபடியும் அங்கே உற்பத்தி ஆவதில்லை என்ற அளவுக்கு நமக்கும் கொசுவுக்கும் ஒப்பந்தம் இல்லை. மேலும், எவ்வளவுதான் அரசாங்கத் துறை காரியம் ஆற்றியிருந்தாலும் கூட, பொதுமக்கள் சுகாதாரத்தை மறந்துவிடுகின்றனர். இங்கே திரு. வசந்த பாய் அவர்கள் சொன்னது போல சாணமும், சாக்கடையும் மற்றவைகளும் பெருகுவதற்குப் பொதுமக்கள் காரணமாகிவிடுகிறபோது, கொசுக்கள் தோன்றுகிற நிலைமையும், பொதுவாக ஒரு திட்டம் ஆரம்பித்து சில ஆண்டுகள் ஆனால் அந்தத் திட்டத்திலே இருப்பவர்களின் ஆர்வம் சுணங்கிவிடுகிறது என்ற ஒரு நிலைமையும், காரணமாகலாம். புள்ளிவிவரம் எடுக்கின்ற முறையில், மலேரியா காய்ச்சல் யாருக்கு வந்திருக்கிறது என்று புள்ளி விவரம் எடுத்து, மெயின்டெனன்ஸ் பேஸ் என்று வந்ததற்குப் பின்னாலே மறுபடியும் புள்ளி விவரம் எடுக்கிறபோது, புள்ளிவிவரத்தில் அதிகமாகத் தெரிகிறதே தவிர, இந்தத் திட்டம் எல்லாம் வந்த பிறகு அதிகம் பேர் மலேரியாவால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று யாரும் கருத முடியாது. இப்போது புள்ளி விவரப்படி அதிகமாக இருக்கிறது என்று சொன்னால், அது "ஜீரோ" ஆகக் குறைந்திருக்க வேண்டும். எண்ணிக்கைப்படி "ஜீரோ" ஆகக் குறையவில்லையென்று தோன்றுகிறது. 19,000 என்று இப்போது வருகிறது என்றாலும், இந்தத் திட்டமே இல்லை என்று சொன்னால், 19,000 ஆக இருக்காது, 1,90,000 ஆக இருக்கும். ஆக 1,90,000 ஆக இல்லாது வெறும் 19,000 ஆக இருப்பதற்காக நாம் மகிழ்ச்சியடையவேண்டும். இருந்தாலும் மேலும் இந்தத் திட்டங்களைச் செம்மைப்படுத்த முயற்சி எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

ஃபைலேரியா திட்டங்களைப் பொறுத்தவரையில், யானைக்கால் வியாதித் தடுப்பு, நாடு முழுவதும் பரவலாக நடத்தப்படுவதல்ல. எந்தெந்த வட்டாரத்திலே 100க்கு 3 அல்லது 5 பேருக்கு யானைக்கால் வியாதி இருப்பதாக அதனுடைய அடையாளம் காணப்படுகிறதோ அந்த வட்டாரத்தில்தான் முயற்சிக்கப்படுகிறது. விழுப்புரம், திருவரங்கம், கும்பகோணம்,

புதுக்கோட்டை என்று இப்படிச் சில ஊர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. நகர தொடர்புடைய வட்டாரத்திலும் பஞ்சாயத்து ஆட்சியிலுள்ள வட்டாரத்திலும் தெரிந்தெடுக்கபட்டு அதற்குப் பின்னர் அங்கே ஃபைலேரியா நோய் ஒழிப்புக்குப் பணிகள் நடைபெறுகின்றன. அப்படி நடைபெறுகிற பணிகளும் குறைந்த கால அளவிலே முழு வெற்றி தராது. ஏனென்று கேட்டால் ஃபைலேரியா வியாதியினாலே பாதிக்கப்பட்ட மக்கள் இருக்கின்ற வட்டாரத்தில் அவர்களைக் கடிக்கிற கொசு, வியாதி இல்லாதவர்களைக் கடிக்கின்றபோது, அவர்களுக்கு அதன் மூலமாக அந்த நோய் ரத்தத்தில் மெல்ல மெல்ல பரவி 2,3 ஆண்டுகள் கழித்து வெளிப்படுகிறது என்ற காரணத்தால் பொது மக்களும் முழு அளவுக்கு ஒத்துழைத்தால்தான் (ஃபிலேரியா) யானைக்கால் வியாதியை அடியோடு தடுக்க முடியும். நண்பர் திரு. சுவாமிநாதன் போன்றவர்களுக்குத் தெரியும். ஒரு காலத்திலே கும்பகோணம் என்று சொன்னால் யானைக்கால் உள்ளவர்கள் ஊர் என்று சொல்வார்கள். இப்போது அப்படிச் சொல்வதில்லை. அப்போதெல்லாம் ஒரு மாமாங்கத்துக்குப் போனால் யானைக்காலிலே இடிபடுவதா அல்லது நல்ல உடம்பிலே இடிபடுவதா என்று தெரியாமல் இடிபடவேண்டி யிருக்கும். இப்போது அப்படி அல்ல. அது இப்போது குறைந்திருக்கிறது. அதே நேரத்திலே வேறு சில இடத்திலே இருப்பது கண்டுபிடிக்கப் பட்டிருக்கின்றது. ஏற்கெனவே நோய் பரவியிருப்பதைப் பற்றிக் கவலைப் படுவோர் இல்லை. ஆக இந்தப் பணி நாளடைவில் முறையாக சிறப்பாக நடைபெறுவதன் விளைவாக 10 அல்லது 15 ஆண்டுக் காலத்திலே தமிழ்நாட்டிலே பெருமளவுக்கு இந்த நோயை ஒழிக்க முடியும் என்ற நம்பிக்கையை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ஆர். தாமோதரன் அவர்கள் இங்கே பேசுகிறபோது, பிளேக், ஸ்மால்பாக்ஸ் ஆகியவைகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெரியம்மையை ஒழிப்பதிலேயும், பிளேக் போன்ற கடுமையான தொத்து நோயை ஒழிப்பதிலேயும் வெற்றி பெற்றிருக்கிறோம் என்று ஒப்புக்கொண்டு பாராட்டினார்கள். ஃபைலேரியா, மலேரியா போன்றவற்றிலே நாம் அதிகமாக வெற்றி பெறவில்லை என்பதை எடுத்துக் காட்டிப் பேசினார்கள். நான் இதற்குமுன் எடுத்துக் காட்டிய நிலைமைதான் இதற்குக் காரணமாகும். இந்தத் திட்டங்கள் 1958-லேதான் தொடங்கப்பட்டிருக்கின்றன. பெரியம்மை தடுப்புத் திட்டம் என்பது எப்போது தொடங்கப்பட்டது என்று பார்த்தால், பல ஆண்டுகட்கு முன்னர், நான் மாணவனாக இருக்கும்போதே பெரியம்மைக்குப் பால் குத்துகிற முறை வந்துவிட்டது. ஒவ்வொருவருக்கும் ஒரு முறைக்குப் பலமுறை அம்மைப்பால் குத்தும் நிலைமை—தடுப்புக்கு உதவியுள்ளது.

திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் பேசுகிறபோது, தொத்து நோய் அதிகமாக இருக்கிறது, காச நோய்க்கு பி.சி.ஜி. ஊசி போடுகிறார்கள், அதனாலே எங்கே குறைந்துபோய்விட்டது என்று கேட்டார்கள். 15 அல்லது 20 வயதுக்கு முன்னர் பி.சி.ஜி. ஊசி போட்ட பெரும்பாலோருக்கு அந்த நோய் வருகிறதில்லை. அதிலேயும் விதி விலக்கு இருக்கலாம்.

ஊசி மருந்து உடம்பிலே சென்று சேர வேண்டிய அளவிலே சேராமல் இருக்கலாம். அப்படி விதிவிலக்காக சிலர் இருக்கலாமே தவிர, பி.சி.ஜி. ஊசி 100க்கு 99 பேர்களுக்குப் பயன்தரத்தக்கதாக இருக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இன்னும் அந்த நம்பிக்கை இழப்பதற்குப் போதுமான காரணம் இல்லை. ஆனால் காச நோய் வந்தவர்கள் ஒரு காலத்திலே, 20 அல்லது 25 ஆண்டுகளுக்கு முன்னாலே, இருமிக் கொண்டும், துப்பிக் கொண்டும் அவரவர்கள் வீட்டிலே இருப்பார்களே தவிர மருத்துவ மனைக்கு வந்து கேட்கமாட்டார்கள். இப்போது மருத்துவமனை எங்கே என்று சட்ட சபை உறுப்பினர் அவர்களிடத்திலே கேட்டு, அந்த மருத்துவ மனைக்குக் கடிதம் கொடுங்கள் என்று கேட்டு, கொடுக்கவில்லை என்றால் கோபித்துக் கொள்வதுடன், அமைச்சர்கள் ஒரு 10 பேருக்குக் கடிதம் கொடுத்து, அங்கு இவர் 9வது ஆளாக இருந்து இடம் கிடைக்கவில்லை என்றால், அமைச்சர் கொடுத்த கடிதத்திற்குக் கூட மரியாதை இல்லை என்று கூட கோபித்துக் கொண்டு பேசுகிறார்கள். இப்போது இடம் கிடைப்பதிலேகூட கொஞ்சம் கஷ்டம் இருப்பது உண்மை. நம் நாட்டிலே எதிலேதான் இடம் கிடைப்பதிலே கஷ்டம் இல்லை. திருமண மார்க்கெட்டுத் தவிர, வேறு எல்லா மார்க்கெட்டிலேயும் இடம் கிடைப்பது என்பதில் கஷ்டமான நிலைமைதான் இருக்கிறது.

பள்ளிக்கூடம், கல்லூரி, பஸ்கள், ரெயில் இப்படிப் பலவற்றிலும் இடம் கிடைப்பது கஷ்டமாகத்தான் இருக்கிறது. அதுபோல மருத்துவ மனையில் படுக்கை வசதி கிடைப்பது கஷ்டமாக இருக்கலாம். காச நோயைப் பொறுத்தவரையிலே, 3 மாதம் அல்லது 6 மாதம் சில நேரத்திலே இன்னும் கூட அதிகமாக மருத்துவ மனையில் தங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுவிடுகிறது. ஏற்கெனவே சிகிச்சை பெற்றுக்கொண்டிருப்பவர்களை பாதியிலே அனுப்பிவிட முடியாது. அந்த இடத்தில் இன்னொருவரைப் படுக்க வைத்துவிடுவது பயன் உடையதல்ல. ஆகவே, சிகிச்சை என்பதே முழு சிகிச்சையாக இருக்க வேண்டும். ஆகவே சிகிச்சை அளிக்கப்படுபவரை நிறுத்த முடியாது. நம்முடைய பொருளாதார வசதிக்கு ஏற்ப இடங்களை அதிகப்படுத்தினாலே இன்றைக்கு மருத்துவ மனையில் வந்து சிகிச்சை பெறவேண்டும் என்னும் நிலை உள்ளவர்க்குக் கூடுமானவரையில் வசதிகளை அளிக்க முடியும். அந்த வகையிலே காச நோய்க் கழகம் 5–6 லட்சம் ரூபாய்க்கு மேலாக ஒவ்வொரு ஆண்டும் நிதி திரட்டி, அந்தந்த மாவட்டத்திலேயே எங்கே அதிகமாகத் திரட்டியிருந்தாலும், குறைவாகத் திரட்டி இருந்தாலும், அதிலே ஏறத்தாழ 100க்கு 90 பங்கு அந்தந்த மாவட்டக் கழகத்திற்குத் தரப்பட்டு, அங்கேயுள்ள தாலுக்கா மருத்துவ மனைகளிலும் மற்ற மருத்துவ மனைகளிலேயும் எக்ஸ்ரே போன்ற கருவிகளை அல்லது நுண்ணாடி (மைக்ராஸ்க்கோப்) போன்ற கருவிகளை வாங்கி வைப்பதற்கு வழி செய்யப்பட்டு பணி நடைபெற்று வருகின்றது.

தென் ஆற்காடு மாவட்டத்திலே மொபைல் வேன் ஒன்று காச நோய்ப் பணிக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அது இயங்குகின்றதா என்று திரு. தாமோதரன் அவர்கள் கேட்கக்கூடும். அது ஓரளவுக்குத் தான் இயங்கக்கூடும். அது பெரிய வேன். அது பள்ளிக்கூட மாணவர்

களுக்காக ஒரு குறிப்பிட்ட இடத்திற்குச் சென்று சோதனை நடத்தக்கூடிய நிலைமை இருக்கிறது. மேலும் நல்ல அளவுக்கு இயங்குவதற்கு முயற்சிக்கலாம். அப்படிப் பல காரியங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

அடுத்து, திரு. தாமோதரன் அவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களிலே கிடைக்கின்ற பணி வசதிகள் இன்னும் அதிகப்படுத்தப்பட வேண்டும் என்று சொன்னார்கள். அதிக டாக்டர்கள் இடம் பெற்று "மொபிலிடி ஆப் சர்வீஸ்" இருக்கவேண்டும் என்று சொன்னார்கள். பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ் என்று சொல்கின்றபோது, அதன் அடிப்படை நோக்கமே அங்கே உள்ளவர்கள் மொபைல் யூனிட்டு போல இயங்க வேண்டும் என்பதுதான். ஒரு ஒன்றியம் முழுவதற்கும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற முறையில் அதை உருவாக்கியபோது, சப்-சென்டர்களுக்கு வாரத்திற்கு ஒரு முறை குறிப்பிட்ட நாளிலே டாக்டர்கள் சென்று அந்த நிலையங்களிலே வந்திருக்கின்ற தாய்மார்களையும் குழந்தைகளையும் பரிசோதித்து அவர்களுக்குத் தரவேண்டிய மருந்துகளை அவர்களுக்கு மிக அடிப்படையான தேவையாகும் வைட்டமின் மாத்திரைகள் எந்த எந்தப் பெண்களுக்கு இன்னின்ன மாத்திரைகள் எத்தனை கொடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டு வந்தால், மகப்பேறு உதவியாளராக இருக்கின்ற அம்மையார் அவர்கள் அந்த மருந்துகளை அவர்களுக்குத் தேவையான அளவுக்கு வழங்குவார்கள். ஒரு வாரத்திலே ஒரு நாளைக்குப் போகிற டாக்டர்கள் 2 நாள் போனால் எவ்வளவோ வசதியாக இருக்கும். மொத்தம் ஒரு லட்சம் மக்கள் இருக்கின்ற இடத்திலே 9 கிளை நிலையங்கள் இருக்கின்றன. அந்த ஒன்பதுக்கும் போய் வந்தால் தான் டாக்டர்களின் கடமை. ஏழுக்காவது போயிருப்பார்கள் என்று நிச்சயமாக நம்புவேன். அந்த ஏழு இடங்களுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வந்தாலும், இந்த ஏழு இடங்களைத் தவிர இன்னும் ஏழு அல்லது எட்டு இடங்கள் தேவை என்று மக்கள் விரும்புகிறார்கள். அதை நிறைவேற்றுவதற்கு இப்போது பொருளாதார வசதி இல்லை. மத்திய அரசாங்கம் ஏற்கெனவே ஒப்புக் கொண்ட முறை பத்தாயிரம் பேருக்கு ஒரு கிளை நிலையம் ஏற்படுத்திக் கொள்ளலாம் என்பது. 5 ஆயிரம் பேருக்கு ஒரு கிளை நிலையம் கேட்கிறபோது அதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் டிரைபல் ஏரியாக்கள், ஹில் ஏரியாக்களில் மட்டும் 5 ஆயிரம் மக்களுக்கு ஒரு சப்-சென்டர் வீதம் வைத்துக் கொள்ளுங்கள் என்று மத்திய அரசினர் தெரிவித்திருக்கின்றார்கள். ஆனால் எதிர்காலத்திலே அவைகளை அதிகப் படுத்துவோமானால், மொபிலிடி ஆப் சர்வீஸ் (**Mobility of Service**) ஏற்பட்டு டாக்டர்களுடைய இயங்கும் சக்தியும் அதிகமாகப் பயன்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்திடமிருந்து இம்மாதிரி சுகாதாரத்தை மருத்துவத் துறை விஷயங்களிலே அதிக நிதி பெறுவதற்கு, பிற மாநிலங்களிலே உள்ளதுபோல், நமது மாநிலத்திலும் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சிறியதாக, இப்போது இருப்பதுபோல் ஒரு லட்சம் மக்கள் கொண்டதாக இல்லாமல், 50,000

1975 மார்ச் 27] [திரு. கே. ராஜாராம்]

அல்லது 60,000 மக்கள் கொண்டதாக ஆக்கினால், அந்த எண்ணிக்கை பேரில் அதிகமான தொகைகள் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று பல நண்பர்கள் கூறுகிறார்களே, அதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இது நல்ல ஆலோசனை. ஏற்கனவே இதைப்பற்றி ஆலோசிக்கப்பட்டபோது, இந்த ஒன்றியங்கள் மிகப் பெரியதாகவும், போக்குவரத்து வசதியற்றதாகவும் இருக்கின்றன, இவைகளை இயன்ற அளவு சிறிதாக்க வேண்டுமென்று கருதப்பட்டது. மாவட்டங்களிலேகூட தமிழ் நாட்டிலேதான் மிகப் பெரிய மாவட்டங்களாக 40 இலட்சம் பேர் கொண்ட மாவட்டங்களாக உள்ளன. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இப்படி இருக்காது. பத்து இலட்சம் பேர், பதினைந்து இலட்சம் பேர் அளவு மக்கள் தொகை தான் மற்ற மாநிலங்களில் பல மாவட்டங்களுக்கு (டிஸ்ட்டிரிக்ட்ஸ்) இருக்கின்றன. அந்த முறையிலே புதுக் கோட்டையை ஒரு புது மாவட்டமாக ஏற்படுத்தியவுடன் அங்கே ஒரு ஃபேமிலி பிளானிங் டிஸ்ட்டிரிக்ட் யூனிட் ஒன்று ஏற்படுத்தலாம் என்று விரும்புகிறோம். ஆனால் மத்திய அரசிடம் அதை ஏற்கவேண்டும் என்று கேட்டபோது, "இப்பொழுது அதை நிறைவேற்ற முடியாது, ஏனென்றால், நிதி ஒதுக்குவதற்கு வாய்ப்பில்லை" என்று அவர்கள் எழுதி விட்டார்கள். ஒரு தாய்க்குக் குழந்தை பிறக்கிற போது, அந்தக் குழந்தை பிறப்பதை கவனித்துக் கொள்ள வேண்டிய ஆயாவுக்கும், குழந்தை பிறக்கிற நெருக்கடி இருக்குமானால் எப்படியோ அப்படி இந்த மத்திய அரசுடைய நிலைமையும் உள்ளது. எங்களுக்கு நெருக்கடி என்று சொல்லி விட்டார்கள்.

(பிற்பகல் 7-00)

ஆகவே, ஏற்கெனவே உள்ள மாவட்டத்திலே உள்ள அத் துறைப் பணியினர்தான் அதையும் சேர்த்துக் கவனித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இன்னின்னவைகளுக்கு இவ்வளவு கிராண்டு என்று மத்திய அரசு ஒதுக்குகிற காரணத்தாலே, அவர்களை நாம் கேட்கின்ற மனப்பான்மை நமக்கு ஏற்படுகிறது. முழுவதும் நம்மிடத்திலேயே வருமானமும் இருந்து நாமே செய்து கொள்ளுகிற நிலைமை இருக்குமானால், அங்கே உள்ளவர்களைவிட இங்கே உள்ளவர்கள்—பொறுப்பை நிறைவேற்றுவதில் யாரும் மட்டமானவர்கள் அல்ல. ஆனால் அந்த வாய்ப்பு நமக்கு இல்லாமல் போவதற்கான முழுக் காரணம், பல திட்டங்களை இணைப்பு முறையில் ஏற்படுத்திவிடுவது. ஆரம்ப சுகாதார நிலையம் என்றால், அது குடும்ப நலத் திட்டத்தோடு இணைக்கப்பட்டிருக்கிறது. குடும்ப நலத் திட்டத்திற்காக ஆகிற செலவு, மருத்துவர்களுக்கான செலவு, செவிலியர்களுக்கான செலவு, மருந்துகளுக்கான செலவு, மெடர்னிடி அசிஸ்டெண்டுக்கு உள்ள செலவு, இவைகளுக்கு ஆகிற செலவை அவர்கள் ஏற்கிறார்கள். ஆகவே, அந்தப் பணமும் நம்முடைய மாநில அரசு செலவு செய்கிற பணமும் ஒன்றாகத்தான் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் செலவாகிற காரணத்தாலே, நாம் புதிதாக ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமானால்

மத்திய அரசைக் கேட்கவேண்டிய நிலைமை ஏற்படுகிறது. கேட்டதற்குப் பின்னாலே அவர்களுடைய இயலாமையைத் தெரிவிக்கிறபோது, நாங்களும் அதற்குமேல் அடியெடுத்து வைக்க முடியவில்லை.

அப்படி ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஆரம்ப சுகாதார நிலையம் இரண்டாவது ஒன்று தேவை, ஒரு இலட்சம் மக்களுக்குமேல் உள்ள இடத்திற்காவது உடனே தேவை, என்று மத்திய அரசிடம் கேட்டு, அதனை ஏற்றுக் கொள்ள இயலாது என்று அவர்கள் தெரிவித்ததற்குப் பின்னர் நம்முடைய அரசு ஒரு இலட்சம் மக்களுக்குமேல் இருக்கிற ஒன்றியங் களிலே ஆரம்ப சுகாதார நிலையங்களிலே எல்லாம் இப்போது ஒரு ஆண் டாக்டரும் ஒரு பெண் டாக்டரும் இருக்கிறார்கள். மூன்றாவதாக ஒரு டாக்டரைக் கொடுத்து, அவர்கள் மூலமாக அந்தப் பணியைச் சற்று விரிவாகக் கவனிக்கச் செய்ய வேண்டிய முறையில் 100 ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நியமிக்க இவ்வாண்டு வரவு—செலவுத் திட்டத்திலே தமிழக அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி மூன்றாவது டாக்டர் நியமிக்கப் படுகிற நிலைமை ஏற்பட்டதற்குப் பின்னர், ஆரம்ப சுகாதார நிலையம் என்ற பெயர் இல்லாவிட்டாலும் அதற்கான இரண்டாவது செண்டர் (Second Centre) என்ற முறையிலே ஒரு டிஸ்பென்சரி இடத்தை மேம் படுத்தி இரண்டு ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த எதிர்காலத்திலே இது பயன்படும். அதே சமயத்திலே, பள்ளிகளிலே படிக்கிற குழந்தை களுடைய உடல் நிலையைச் சோதிப்பது ஸ்கூல் மெடிகல் செக்கப் ஏற்கெனவே ஏறத்தாழ 18 ஒன்றியங்களிலே இருந்தது. இப்போது மேலும் 7 ஒன்றியங்களிலே அதிகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதற்கு மிக முக்கியமான காரணம் இந்த 18 இடங்களிலே ஒரு டாக்டர் அதிகமாகக் கொடுக்கிறோம். அது மட்டுமல்லாமல், அதற்காக ஒரு ஹெல்த் விசிட்டர் தருகிறோம். அவர்கள் அந்தப் பணியை ஒன்றியம் முழுவதும் நிறை வேற்ற ஓராண்டு, இரண்டாண்டுக் காலம் ஆகிறது. ஆகவே புதிய செலவு என்ற காரணத்தாலே ஏழு இடங்களிலேதான் ஏற்க முடிகிறது. இதே போல் அர்பன் ஸ்கூல் ஹெல்த் புரோகிராம் என்பது சில நகரங்களிலே தான் நடைபெறுகிறது. மருத்துவக் கல்வித் துறை மூலமாக சென்னை நகரத்திலே உள்ள குழந்தைகளுக்கு ஹெல்த் செக்கப் புரோகிராம் ஏற்பாடு செய்ததால், அது இரண்டு வருஷ காலத்திலே நூற்றுக்கு 25 பேருக்குத் தான் நடைபெற்றிருக்கிறது. அது வேகமாக நடைபெற முடியாது இருக்கிறதே என்ற வருத்தம் எனக்கும் இருக்கிறது. அதிலே ஈடுபட்டுள்ள வர்கள் எவ்வளவு உண்மையாக இருந்தாலும் செயலாற்றுகின்ற முறையிலே அதற்கு வேண்டிய வேகம் உருவாவது இல்லை. ஓராண்டுக் காலத்திலே சென்னை நகரத்திலே உள்ள மாணவர்களுக்கு ஹெல்த் செக்கப் செய்துவிட முடியுமா என்று கேட்டால், சென்னையிலுள்ள எல்லா டாக்டர்களும் மாதத்திற்கு நான்கு நாள் ஒதுக்கினால்தான் முடியும். அவ்வளவு குழந்தைகள், அத்தனை பள்ளிக்கூடங்களில் இருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட நிலையில் இதை ஓரளவுதான் நிறைவேற்ற முடிகிறது என்பதையும் நான் திரு. தாமோதரன் அவர்கள் தெரிவித்த கருத்தை ஒட்டி விளக்க விரும்புகிறேன். எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் பேசுகிற போது, நூற்றுக்கு ஒரு குழந்தைக்குத் தொழு நோய் இருக்கிறது என்றும் ஏறத்தாழ மாணவர்களைப் பரிசோதனை செய்து பார்த்ததிலே, இலட்சம்

பேருக்கு ஆயிரம் பேருக்கு வருகிறது என்றும் சொன்னார்கள். அது சென்னை நகரத்திலே இலட்சம் பேரிலே ஆயிரம் பேருக்கும் சில இடங்களிலே 1,500, 2,000 பேருக்கும் பெருகியிருக்கிறது. தென்னார்காடு, வட ஆர்க்காடு மாவட்டங்களிலே சில பகுதிகளிலே போய்ப் பார்த்தால், ஒரு கிராமத்திலே நூறு வீடுகள் இருக்குமானால், அந்த நூறு வீடுகளிலேயும் யாராவது ஒருவருக்கு இந்த நோய் இருப்பது காணப்படும். அப்படி குழந்தைகளுக்கு இருப்பது காணப்படுகிறபோது, உடனடியாக அந்தக் குழந்தைகளுக்கு சிகிச்சைக்கு மருந்துகள் தரப்படுமானால், அடையாளங்கள் காணப்படுகிற முதல் கட்டத்திலே, தோல்மீது சுரணை இல்லாமல், அல்லது படை போல ஏதாவது ஒரு வகையான அடையாளத்தைப் பார்த்தவுடன், அந்தக் குழந்தைகளுக்குச் சிகிச்சை தர ஆரம்பித்து ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுக்காலம் இன்னும் அதிகமானால் இரண்டாண்டுக் காலத்திற்குள்ளே அந்தத் தொழு நோயிலிருந்து அந்தக் குழந்தைகளுக்கு, அதாவது 10 வயது 12 வயதுப் பிள்ளைகளுக்கு, பாதுகாப்பு தந்துவிட முடியும். ஆனால் இதிலேகூட அந்தத் தொழு நோய்க்கு ஆளாகக் கூடிய குழந்தையை அதனுடைய பெற்றோர்களிடத்திலிருந்து பிரித்து வைக்க வேண்டுமே என்று கருதினால், அது அவசியம் இல்லை என்று மருத்துவத் துறையிலே உள்ள வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். மருந்தைச் சாப்பிடாமல் இருக்கிற ஒரு குழந்தை அல்லது சிறுவன் இருப்பானானால் அவனிடத்திலிருந்து மற்றவர்களுக்குத் தொத்துகிற வல்லமை நோய்க்கு ஏற்படுகிறதே தவிர, மருந்து உட்கொண்டால், தொத்துகிற ஆற்றல் போய் விடும். அந்த நோயைப் போக்குவதற்கு தொடர்ந்து மருந்து சாப்பிட வேண்டும். தொத்து நோய் என்ற முறையிலே அதனுடைய பரவுகிற தன்மை இன்னும் சரியாகக் கண்டுபிடிக்கப்பட முடியாத காரணத்தாலே, அது தொத்து நோய் என்று சொல்லப்படுகிறது. ஆனால் திட்டவட்டமாக, அது ஹெரிடிடரி வியாதி அல்ல, தலைமுறை தலைமுறையாக வருகிற வியாதி அல்ல, அல்ல கரும வியாதி என்று சொல்லுகின்ற அளவுக்கு அது பயங்கரமான வியாதி அல்ல, வந்தால் போகாது என்ற வியாதியும் அல்ல என்று கூறப்படுகிறது. ஏழ்மை, வறுமை, சுகாதாரம் மற்ற சூழ்நிலை இவைகளோடும் மற்றும் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற இடங்களிலும் தொத்துவதற்கு வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. வயது குறைந்தவர்களிடத்திலே அது தொத்துகிற ஆற்றல் அதிகமாக உடையது. அவர்களிடத்திலே சிலபல ஆண்டுகள் கழித்து அது வெளிப்படக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஒரு முப்பது நாற்பது வயதுக்கு மேலே தொத்து நோய் வருவது அதிகம் இல்லை. இவ்வளவு தெளிவாக அண்மைக் காலத்தில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. தமிழ் நாட்டிலே உள்ள எல்லா மாவட்டங்களிலும் தொழு நோய் பரவியிருக்கிற இடங்களிலே புதிதாக தொழுநோய் தடுப்பு சிகிச்சை யூனிட்டுகள் ஆங்காங்கே ஏற்படுத்துவதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டு, ஏறத்தாழ எல்லா வட்டாரத்திலும், ஒன்று அரசாங்கத் துறை மூலமாக அல்லது மிஷனரிகள் போன்ற தனியார் நடத்துகிற மருத்துவமனை மூலமாக சிகிச்சை வழங்கப்படுகிறது. தனியார் நடத்துகிற மருத்துவ மனைகள் நல்ல முறையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இயங்கிக் கொண்டு வருகின்றன. கிருஸ்துவ சகோதரிகள் நடத்துகிற மருத்துவ மனைகள் அல்லது ஜெர்மன் லெப்ரஸி எராடிகேஷன் புரோகிராம் என்ற அவர்களுடைய பெயராலே நடத்தப்

படுகிற மருத்துவமனைகளிலே தகுந்த சிகிச்சைக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறார்கள். சென்னையிலேகூட அவர்கள் நடத்துகிறார்கள். மக்கள் இன்னும் இதைப் பற்றிப் பரவலாக அறிந்துகொள்ளச் செய்யப்படுமானால், அவர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைகளை ஆண்டுக்கு ஒரு முறை சோதித்துப் பார்த்துக் கொள்ள ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ள முன் வருவார்களேயானால், எதிர்காலத் தலைமுறையை இந்தத் தொழு நோய் பாதிக்காத அளவிற்குக் கூட தடுக்க முடியும்.

(பிற்பகல் 7-10)

நம்முடைய நாட்டிலே அந்தத் தெளிவு குறைவாக இருக்கிறது. யாராவது ஒரு பிள்ளையைப் பார்த்து அந்தப் பிள்ளைக்கு என்ன தேமல் என்று கேட்ட பிறகு, தன்னுடைய பிள்ளையைப் பற்றிய ஒரு உணர்வு வருகிறதே தவிர, தானாக அந்த எண்ணம் வருவதில்லை. குழந்தைகளை மருத்துவ சோதனை செய்யும் ஒரு வழக்கம் இல்லாத காரணத்தினாலே, சமுதாயத்தினுடைய ஒரு சாபக் கேடாக இந்த நிலைமை இருக்கிறது. அதைப் போல திரு. தாமோதரன் அவர்கள் பேசுகிற பொழுது, நம்முடைய நாட்டிலே "இண்டஸ்ட்ரியல் எயர் பொலூசன்" (Industrial air pollution) அதிகமாக ஏற்படுகிறது என்று தெரிவித்தார்கள். இப்பொழுது எல்லா துறைகளிலேயும் "ஸ்டாண்டிங் அட் தி கிராஸ் ரோட்" என்று சொல்லுகிற முறையில் எந்தப் பக்கம் போவது என்று திரும்பிப் பார்த்து திகைக்கும் ஒரு கட்டத்திலே நம்முடைய நாடு இருக்கிறது. அரசியலிலும் அப்படித்தான், பொருளாதாரத் துறையிலும் அப்படித்தான், கல்வித் துறையிலும் அப்படித்தான், மக்களுடைய கருத்து ஒரு தெளிவான எண்ணத்தை பிரதிபலிக்கவில்லை. நமது மக்களுக்கு தொழிற்சாலை வேண்டுமென்ற ஆர்வம் இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் தங்கள் ஊருக்கு தொழிற்சாலை வேண்டுமென்று கேட்கிற வெறி உணர்ச்சிகூட இருக்கிறது. அது வந்ததற்குப் பின்னர் அதனால் ஏற்படும் தீமைகளைக் கட்டுப்படுத்துகிற சாதனங்கள் இல்லாமல், தொழிற்சாலைகள் வந்து விடுகின்றன. முதலிலே தொழிற்சாலைக்கு உரிமம் கொடுக்கிறபோது, அத்தனை பேரும் இதனால் குறை ஒன்றுமில்லாமல் பாதுகாக்கிறோம் என்று சொல்லி விட்டு தொழிற்சாலைக்கு உரிமம் பெறுகிறார்கள். தொழிற்சாலையை ஏற்படுத்திய பிறகு குறைபாடுகள் இருக்கின்றன. அதிகாரிகள் போய்க் கேட்கிற பொழுது, அவர்களுக்குச் சமாதானம் சொல்லுகிறார்கள். திரும்பத் திரும்ப ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லிக் கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே அப்படி ஒரு நெருக்கடியான நிலை இந்தத் துறையிலே இருக்கிறது. இங்கே எண்ணூர் பகுதியிலே இருக்கிற மிகப் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து கக்கப்படுகிற புகையினுடைய அளவும் அதனுடைய விஷத்தன்மையும் சாதாரணமானதல்ல. அதைப்போலவே பெரிய மின்சார உற்பத்தி செய்யும் நிலையத்திலிருந்து கிளம்பக் கூடிய புகையாக இருந்தாலும் சரி அல்லது கெமிக்கல் தொழிற்சாலைகளிலிருந்து வருவதாக இருந்தாலும் சரி அல்லது சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து வருகிற புகையாக இருந்தாலும் சரி, குறிப்பிட்ட வட்டாரத்தை நாளடைவில் பட்டுப் போகச்செய்து விடுகின்றன. அந்தப் புகைக் காற்று வீசுவதால் குறிப்பிட்ட பகுதியிலே இருக்கிற தாவரங்கள் கூட பட்டுப் போகிற அளவுக்கு,

அங்கே குடியிருக்கிற மக்களுக்குக் கேடு ஏற்படுகிற அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகையினால் "வாட்டர் பொலுாசன், ஏர் பொலுாசன்" இரண்டும் மக்களுக்குத் தீமை செய்கிறது என்ற காரணத்தினால், இவைகளைப் போக்குவதற்கு என்ன ஏற்பாடு செய்யலாம் என்பதற்காக "எக்ஸ்பெர்ட் கமிட்டி" ஒன்று நியமிக்கப்பட்டு அவர்களும் சில ஆலோசனைகளை, சென்னை மாநகரத்தைப் பொறுத்த வரையில், வழங்கியிருக்கிறார்கள். அவற்றை நிறைவேற்றும் வழிமுறை தொடர்ந்து பரிசீலிக்கப்படும். அதைப் போலவே திரு. தாமோதரன் அவர்கள் சொன்ன அந்தத் தொழிற்சாலையிலிருந்து வரும் நச்சுக் காற்று பற்றியும் அங்குள்ள மாவட்ட சுகாதார அதிகாரி மூலம் பரிசீலித்து, அவற்றைத் தூய்மைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்படிப்பட்ட பிரச்சினைகளைத் தொடர்ந்து பரிசீலிப்போம் என்று நான் இந்த சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, மருத்துவமனைகளை நிர்வாகம் பண்ணுவதுபற்றியும் திரு. தாமோதரன் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். நிர்வாகம் என்றாலே அதை "பெர்பெக்ட்" ஆகச் செய்வது என்பது மிகவும் கடினம். அரசாங்கத்தின் மூலமாக நிர்வாகம் நடக்கிறபொழுது, அங்கு ஒவ்வொரு படிக்கட்டிலேயும் பலர் பணியாற்றுவார்கள். அவர்களுக்கிடையே "கோ-ஆப்பரேசன் அண்ட் சின்சியர் எபர்ட்" இரண்டும் ஒன்று சேர்வதில்லை. இரண்டு பேர் நல்லவர்களாக தீவிரமாக பணியாற்றுவார்கள். இரண்டு பேர் நமக்கு என்ன என்று இருப்பார்கள். அவர்களை வைத்துக்கொண்டுதான் பணியாற்ற வேண்டும். இந்த நிலைமையிலே அவர்கள் மீது குற்றம் சாட்டவும் முடியாது. அந்தக் குறைகளுக்காக உடனே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவும் முடியாது. ஆகவே இந்தக் குறைபாடுகளை போக்குவதற்காக இப்பொழுது "ஹாஸ்பிட்டல் அட்மினிஸ்ட்டிரேசனை" எவ்வாறு சீராக்கலாம்—விரைவுபடுத்தலாம்—தாமதங்கள் தவிர்க்கப்படலாம் என்பதற்காக ஒரு குழு நம்முடைய நலத் துறைச் செயலாளராக இருக்கும் திரு. பத்மநாபன் அவர்களையே தலைவராகக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. அவர்களுடைய ஆலோசனைகளை விரைவில் வழங்குவார்கள். அதன் மூலமாக நிர்வாகத் துறையிலே என்னென்ன சீர்திருத்தம் செய்ய முடியும் என்பதையும் நாம் ஆராய முடியும். இப்பொழுது பெரிய மருத்துவமனைகளில் "லே செக்கரட்டரிகள்" இருக்கிறார்கள். லே செக்கரட்டரி என்று பெயர் எப்படி வைத்தார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் வரவு-செலவுக் கணக்கைப் பார்க்க, காண்டிராக்டர்களுக்குப் பணம் கொடுக்க, கணக்குகளை வைக்கத்தான் முடியுமே தவிர அட்மினிஸ்ட்டிரேசன் பார்க்க அவர்களால் முடியாது. ஆகவே அட்மினிஸ்ட்டிரேசன் பார்க்கிறவர்கள் மருத்துவத் துறையினராகத்தான் இருக்கிறார்கள். ஆகவே மருத்துவத் துறையிலே மருத்துவர்களுக்கு பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு நிருவகிக்கலாமென்று ஒரு ஆலோசனை கூறப்பட்டபோது, அதிலே பல்வேறு நுணுக்கங்கள் இருந்தாலும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அதிலே பயிற்சி பெற வைப்பது அவ்வளவு கஷ்டம் இல்லை என்றாலும், அதற்குரிய பயிற்சி பெற்று பயன்படும் நிலையில் அவர்களை

வேறு எங்காவது மாற்றிவிடும் நிலை ஏற்படும். ஆகவே அவர்களைப் பயிற்சி பெற வைத்து மாற்ற நேருவதை விட இத்துறையில் இருக்கிற வர்களை வைத்து நிருவாகத்தைத் திருத்தமாகச் செய்வதற்கு முயற்சிக் கலாமென்ற கருத்தைத்தான் நான் மேற்கொண்டிருக்கிறேன். ஆனால் பொதுவாக சிறந்த டாக்டர்களாக மருத்துவம் செய்யக் கூடியவர்களாக இருக்கிறவர்கள் எல்லோரும் சிறந்த நிர்வாகியாக இருப்பது கடினம். சிறந்த நிர்வாகியாக இருப்பவர்கள் சிறந்த மருத்துவராக இருப்பது கடினம். இரண்டும் சேர்ந்திருந்தால் அவர்கள் அரசாங்கத்திலே இருப்பது அதைவிட கடினம். (சிரிப்பு) ஆகவே ஏதோ ஒரு வகையிலே இத்துறையில் கிடைப்பவர்களை வைத்துத் தான் பணியாற்ற ஏற்பாடு செய்ய முடியும். அந்தப் பணி செம்மையாக நடைபெறுவதற்கு பல்வேறு வகையிலே முயற்சி எடுத்துக் கொள்கிறோம் என்பதைமட்டும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப் போலவே செங்கற்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி களை விரைவிலே இந்திய மருத்துவக் கழகம் அங்கீகாரம் செய்ய வேண்டு மென்று எடுத்துச் சொன்னார்கள். அதற்கான நடவடிக்கைகள் கடந்த ஈராண்டு காலமாக தீவிரமாக எடுக்கப்பட்டு வருகிறது. கடந்த மூன்று ஆண்டுகட்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட முடிவுப்படி, திருநெல்வேலிக் கும் செங்கற்பட்டுக்கும் இந்த இரு கல்லூரிகளுக்கும் குறைந்தது 30 இலட்சம், 35 இலட்சம் ரூபாய் செலவில் படுக்கை வசதிக்காக மருத்துவ மனைப் பகுதிகளை அதிகப்படுத்துவதற்காக நிதி ஒதுக்கி பல கட்டடங்களும் பிற தேவைகளையும் உருவாக்கியிருக்கிறோம். அதைப் போல அங்கே எந்தெந்த அளவுக்குப் பேராசிரியர்களோ, துறைத்தலைவர்களோ, துறை யினுடைய உதவியாளர்களோ இல்லையென்று தெரிவித்தார்களோ, அவர் களை அந்தக் கல்லூரிகளிலே நியமிப்பதற்கான ஏற்பாடு எல்லாம் மேற் கொண்டிருக்கிறோம். ஆகவே இன்னும் ஒரு ஆறு திங்களுக்குள்ளாகவே —இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக இந்திய மருத்துவக் கழகம் அந்தக் கல்லூரிகளையும் அங்கீகரித்துவிடும் என்று நான் எதிர்பார்க்கிறேன். அதைப் போலவே இங்கே பேசிய திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்கள் மருத்து வர்கள் "பிரைவேட்" ஆக மருத்துவம் செய்ய அனுமதிக்கக்கூடாது, அதனால் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்றெல்லாம் சொன்னார்கள். "பிரைவேட் பிராக்டிசை" அரசாங்கம் ஆதரித்து "என்கரேஜ்" செய்ய வில்லை. அதை ஆதரிக்கவில்லை. "கன்சல்ட்டேஷன் ரைட்" டாக்டர் களுக்கு இருக்கிறது. அந்த "கன்சல்ட்டேஷன் ரைட்" இருக்கும் டாக்டர்கள் சில இடங்களில் பிராக்டிஸ் செய்வார்களேயானால், இரண்டுக்கு மிடையே அதிக வேற்றுமை காண முடியாது. அதைப் போல சில இடங்களில் டாக்டர்களை தனிப்பட்டவர்கள் விரும்பிக் கூப்பிடுகிறபோது, அவர்கள் அந்த இடங்களுக்குச் சென்று சிகிச்சை வழங்கவில்லையென்று சொன்னால், அவர்களுக்கு மருத்துவர்களால் கிடைக்கக்கூடிய உதவி வேறு எந்த வழியிலும் கிடைக்காமல் போய்விடும். சில இடங்களில் சில டாக்டர்கள் சம்பாதிக்கிறார்களே என்று நாம் கண்டிப்பதில் பொருளில்லை.

டாக்டர்கள் சம்பாதிப்பதை நிறுத்துவதை நம்முடைய நோக்கமாகக் கொள்வதை விட அந்த சர்வீஸ் பரவலாக பொதுமக்களுக்குக் கிடைக்க வேறு வழி உண்டா என்பதையே நாம் பார்க்க வேண்டும். மருத்துவ மனைகளுக்கு வரக்கூடியவர்கள், மருத்துவ மனைக்கு வந்து காலை நேரத்திலே சிகிச்சை பெறுகிறவர்கள் 350 பேர், 400 பேர். டாக்டர்களை வீட்டிலே சந்திக்கக் கூடியவர்கள் 100 பேர் இருக்கிறார்கள் என்று சொன்னால், ஒரு பக்கம் டாக்டர்கள் சம்பாதிக்கிறார்கள் என்று கோபம் வந்தால் கூட, மருத்துவ மனைக்கு வருகிறவர்களில் 100 பேர் குறைந்தார்களே என்ற திருப்தியும் இன்னொரு பக்கம் எனக்கு வருகிறது. இன்றைய தினம் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் திரு. ராஜாராம் அவர்கள் பல மருத்துவமனைகளில் கால் வைக்க இடமில்லை என்று சொன்னார்கள். இந்நிலையில் பிரைவேட் பிராக்டிஸ் தடுக்கப்பட்டால், ஆஸ்பத்திரியில் என்ன நடக்கும்? எட்டிப் பார்க்கக்கூடிய இடம் இருக்காது. எனவே தான் அதனால் ஏற்படக்கூடிய நன்மை தீமை இரண்டையும் நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அதைப் போலவே ஆந்திராவில் பிரைவேட் பிராக்டிஸ் கூடாது என்று ஒரு ஆணை பிறப்பித்தார்கள். அதைச் செயல்படுத்தியபோது, அது முழுமையாக வெற்றி பெறவில்லை என்ற உணர்வு தான் அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆனால் சூழ்நிலை மாறுகிறபோது, அந்த நிலைமையும் மாறக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை வரலாம். சூழ்நிலை மாற வேண்டும். மேலும் தனிப் பட்ட பிராக்டிஸ் தடுக்கப்பட அரசாங்கத்திலே இருக்கக்கூடிய டாக்டர்களின் ஊதியம் உயர்த்தப்பட வேண்டும். இப்பொழுதுள்ள நிலைமை என்ன வென்றால், ஊதியத்தை உயர்த்திக் கொடுத்தாலும் கூட பிரைவேட் டாக அவர்கள் பிராக்டிஸ் செய்யக் கூடும். அதைச் சட்டப்படி தடுப்பது என்று சொன்னால், அது "பிரொபிஷன்" (Prohibition) மாதிரி ஓரளவுக்குத்தான் வெற்றி பெற முடியும். தவறு செய்கிறவன் தப்பி விடாதபடிக்கு இருக்கிற ஒரு சமுதாயமாக நாம் இருக்க வேண்டுமானால், முற்போக்கான திட்டம் என்ற பெயரால் கொண்டுவரக் கூடிய திட்டங்களைக் கூட கூடுமானவரை தகுந்த சூழ்நிலையைப் பார்த்துத்தான் நிறைவேற்ற வேண்டும். அந்தச் சூழ்நிலை இப்பொழுது வந்திருக்கிறது என்று எனக்குத் தோன்றாத காரணத்தினாலே நான் அதிலே அவ்வளவு தீவிரம் காட்டவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

அடுத்து, திரு. வெங்கடேஸ்வர தீக்ஷிதர் அவர்களும் மற்றவர்களும் பேசுகிறபொழுது, "டெட்டனஸ்" ஏற்படுகிறதன் காரணமாக அறுவை சிகிச்சை நிலையங்கள் (ஆப்பரேஷன் தியேட்டர்ஸ்) மூடி வைக்கப்படுகின்றன என்று சொன்னார்கள். பாதுகாப்பாக மூடி வைக்கப்படுகின்றன என்றும் குறிப்பிட்டார்கள். மூடி வைப்பதற்காக நான் உண்மையிலேயே வருத்தப் படுகிறேன். ஆனால் உண்மை நிலைமை என்னவென்று பார்த்தால், நம்முடைய சுற்றுப்புறச் சூழ்நிலையில் டெட்டனஸ், வீட்டிலே இருக்கக் கூடிய நோயாளிக்குக் கூட வந்து விடுகிறது. அறுவை சிகிச்சைக்கே போகவில்லை என்ற நிலைமையிலே கூட அண்மையிலே எனக்குத் தெரிந்த ஒரு நண்பருடைய துணைவியாருக்கு டெட்டனஸ் ஏற்பட்டது அவர் வீட்டிலே இருக்கிறபொழுது. ஆக அறுவைச் சிகிச்சை நிலையத்திலே ஏற்பட்டு விடுகிறது என்று சொன்னால் அங்கே விபத்தில் அடிபட்டவர்கட்கும் ஆப்பரேஷன் நடைபெறுகிற காரணத்தால்—இப்படி ஏற்பட ஏதுவாகிறது.

வெறி நாயினுடைய கடியால் மட்டுமின்றி அதனுடைய எச்சில் பட்டால் கூட அந்த வெறி நாயினுடைய பலன் வந்து விடக்கூடும் என்று சொல்லுவது மாதிரி, அந்த டெட்டனஸினுடைய ஆபத்து இருக்கிறது. ஒரு ஆப்பரேஷன் தியேட்டரிலே வந்து விட்டது என்று சொல்லி அது மூடி வைக்கப்படுமேயானால், அது மீண்டும் நிச்சயம் வராது என்ற நம்பிக்கை ஏற்பட்ட பிறகுதான், அதை மறுபடியும் திறக்க வேண்டி யிருக்கிறது. அந்த நம்பிக்கை ஏற்படுவதற்கு அதற்குச் செய்ய வேண்டிய எல்லாவிதமான பரிகாரங்களும் செய்யப்பட்டு மறுபடியும் அங்கே வருகிற வர்களுக்குச் சிகிச்சை அளிக்கிறபொழுது, நோயாளிக்கு எவ்வித ஆபத்தும் ஏற்பட இடமில்லை என்று உறுதி செய்தே திறக்கப்படுகிறது.

(பிற்பகல் 7–20)

அப்படிப்பட்ட எந்த இடத்தையும் பயன்படுத்துகிறபோது தீமை ஏற் படாது என்று திட்டவட்டமாகத் தெரிந்த பின்னுலேதான் பயன்படுத்த முடியுமே தவிர "ஆபரேஷன் சக்சஸ்புல், பேஷன்ட் டைடு", என்ற முறையிலே செயல்படுத்துவது வரவேற்கத்தக்கதல்ல. திரு. சுவாமி நாதன் அவர்கள் இங்கே பல்வேறு கருத்துக்களைச் சொல்லுகிறபோது **Bare - foot doctors** என்ற ஒரு நடை முறையை ஏற்படுத்துவது நாட்டுக்கு நல்லதல்ல என்றூர். அதற்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். அதே போல் நம்முடைய நாட்டிலே மருத்துவர்களை நியமிக்கிற இடங்கள், அது "ப்ரைமரி ஹெல்த் சென்டரோ", டிஸ்பென் சரியோ எதுவானுலும், கஷ்டமான இடங்களுக்குச் சென்று அவர்கள் பணியாற்ற வேண்டியிருக்குமானுல், அதற்காக அவர்களுக்குச் சில சலுகைகளைத் தர வேண்டுமென்று சொன்னூர்கள். அப்படிப்பட்ட டாக்டர்களுக்கு சலுகைகளைத் தருவது என்ற ஒரு பழக்கத்தை ஏற்றுலுங் கூட, அந்தச் சலுகைக்காக ரூபாய் 100, ரூபாய் 200 அளவு அடையாளத் தொகையாகத்தான் தர முடியும். இப்போதே ஆரம்ப சுகாதார நிலையத் திலே பணியாற்றுகிறவர்களுக்கு ஒரு சிறப்பு அலவன்ஸ் இருக்கிறது. அதாவது அவர்களுக்கு ரூரல் அலவன்ஸ் என்று வழங்கப்படுகிறது. அப்போதும் அவர்களிலே சிலருக்குத் திருப்தியில்லை. வேலை கிடைக்க வில்லை என்று சொல்லுகிறபோது, அந்த வேலை கிடைத்தால் போதும் என்கிறூர்கள். ஆனுல் அவர்கள் வேலை செய்ய வேண்டிய ப்ரைமரி ஹெல்த் சென்டர் அவர்களுக்குத் திருப்தியாக இல்லை என்று சொன்னுல், அங்கே தங்க மறுக்கிறூர்கள். தங்களுக்கு வசதியான சில இடங் களுக்குப் போகவே விரும்புகின்றனர். ஆனுல் தற்காலிகமாக டாக்டர்கள் வேலைக்குச் சேருகிறபோது, "டெம்பரரி ரெக்ரூட்மென்ட் பை தி டிபார்ட் மெண்ட்" அப்போது ஒரு தனி கேடராக (Cadre) பிரித்து காச நோய்ப் பணி, தொழு நோய்ப் பணி, டிபிகல்ட் டெரெய்ன் சர்வீஸ் என்ற முறையில் உள்ள பணிகளையெல்லாம் இணைத்து தனியாகக் குறிப்பிட்டு இவைகளில் ஒரு ஐந்தாண்டுக் காலம் பணியாற்றினுல், அவர்களுக்கு **Priority will be given in temporary recruitment** என்ற முறை வகுத்துச் செய்தால் அவர்கள் விரும்பி இந்தப் பணியை நிறைவேற்றுவர் என்பது என் கருத்து. தொழுநோய்ப் பணியோ, அல்லது காச நோய்ப் பணியோ அல்லது **Work in different terrain** இதை

எடுத்துக்கொள்கிறவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து வேலை தந்து விட்டால் அந்த அளவுக்கு அந்தப் பணியிலேயிருந்து அவர்கள் விலகிச் செல்ல முடியாது. விரும்புகிறவர்களை அவ்வாறு ஏற்றுக்கொள்ளலாமா என்று நாங்கள் ஆலோசித்துக்கொண்டிருக்கிறோம். ஆனால் மருத்துவர்கள் எந்த அளவுக்கு இதை ஏற்றுக்கொள்வர் என்பது நடைமுறையில் பார்த்தால் தான் தெரியும். அதே போல சேலத்திற்கு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்று சொன்னார்கள். திரு. முத்துசாமி அவர்களும் கேட்டார்கள். கொள்கை அடிப்படையிலே சேலத்திலே ஏற்படுத்த வேண்டுமென்பது என்னுடைய ஆசை. ஆனால் குறைந்தது முதலிலே ரூ. 1 கோடி நிதி தேவை. அதற்குப் பின்னாலே இரண்டு ஆண்டுகாலத்திலே மேலும் ரூ. $1\frac{1}{2}$ கோடியிலிருந்து ரூ. 2 கோடி தேவை. முதல் ஒரு கோடி இருந்தால் அங்கு தொடங்குவதற்கு தயாராக இருக்கிறேன். ரூ. 30 லட்சம், ரூ. 25 லட்சம் மட்டும் கிடைக்கும். அதை வைத்துக்கொண்டு தொடங்கி, திருநெல்வேலி கல்லூரியைப் போல, செங்கற்பட்டு கல்லூரியைப் போல 10 ஆண்டுகாலம் ரெகக்னிஷனுக்காக இந்திய மருத்துவ கழகத்தினிடத்திலே வாதாடிக்கொண்டிருப்பது என்பது இந்தக் கால நடைமுறைக்குப் பொருந்தாது. ஆகவே, ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்கு முன்னாலே, கல்வி நிலையங்களுக்கு மட்டும், கல்லூரிக் கல்வி கட்டிடப் பகுதிக்கு மட்டும் குறைந்தது ரூ. 1 கோடி தேவை. "லேபரடரி பெசிலிட்டிஸ்" முதலானவற்றிற்கு ரூ. 25 லட்சம் தேவை. மருத்துவ மனை படுக்கை வசதியோடு இருக்கக்கூடிய கட்டடங்களைக் கட்டுவதற்கு இன்னும் ஒரு கோடி ரூபாய் தேவை. ஆகவே, இந்த ரூ. 2 கோடி அளவுக்கு மூன்று ஆண்டு காலத்திலே, ஐந்தாண்டு காலத்திலே நிதி கிடைக்குமென்று நம்பிக்கை இருக்குமானால், நாம் அதிலே ஈடுபடலாம். ஆகவே, அதைத்தான் அடிப்படையாக வைத்துக் கருதிக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். திரு. வசந்த பாய் அவர்கள் மேல் நாட்டு நிலைமையை எல்லாம் ஒப்பிட்டுக் காட்டினார்கள். நாம் சினிமாவிலேதான் அதைப் பார்க்க முடியுமே தவிர அதைப் பார்த்து நாமும் மகிழ்ச்சியடையலாமே தவிர, நம்முடைய நாட்டிலே அதைப் பார்க்கவே முடியாது. நம்முடைய அறிவு, ஆற்றல் எல்லாம் வளர்ந்திருக்கலாம். அது வேறு, நம்முடைய நிபுணர்கள் மிகவும் திறமையான அறுவை சிகிச்சையில் "ஓபன் ஆர்ட் சர்ஜரியிலே" கூட வெற்றி பெறக்கூடிய தகுதிகளைப் பெற்றிருக்கலாம். புதுமைகளைக்கூட கண்டுபிடிக்கலாம். ஆனால் மேலை நாடுகளில் உள்ள வசதிக்குக் காரணம், ஒரு சதுர மைலுக்கு அமெரிக்காவிலே 58 பேர், 60 பேர் தான். இங்கே சதுர மைலுக்குக் கணக்குப் பார்த்தால் 400 பேர். சென்னை நகரத்திலே கணக்கெடுத்தால் ஒரு சதுர மைலுக்கு ஒரு லட்சம் பேருக்கு மேல் தேறுவார்கள். சராசரிக் கணக்கில் சதுர மைலுக்கு 400 பேர் கொண்ட நாடாக இருக்கிறபோது 58 பேர், 60 பேர் என்று இருக்கிற ஒரு சூழ்நிலையில் பொருளாதார வளர்ச்சியிலே அவர்களுக்கு இருக்கிற வாய்ப்பும், வசதிகளும் மிக அதிகம். அவர்கள் அமைக்கிற அந்தக் கட்டடங்களைக்கூட நாம் இங்கே காணமுடியாது.

Without air-condition nothing is going on there.
With air-condition nothing is going on here,

"ஏர் கண்டிஷன்" ஏற்படுத்திய இடத்திலேகூட "ஏர் கண்டிஷன்" தொடர்ந்து வேலை செய்யாது. இங்கே நம்முடைய நிலைமைக்கும் அவர்களுடைய நிலைமைக்கும் தலைகீழ் மாற்றம். அதை ஒப்பிடுவது நம்முடைய நிலைமைக்கு ஒத்துவராது. நம்முடைய நிலைமையிலேயிருந்து எப்படி எப்படி உயருவது என்பதற்கு, சில நேரத்திலே மேல் நாட்டைப் பார்த்து விட்டு நாம் நம்முடைய நிலைமைக்கேற்ப ஒரு மாற்றத்தை ஏற்றுக்கொள்கிற அளவுக்குத்தான் அது இருக்கும். நம்முடைய மேலவைத் தலைவருக்கு அது மிகப் பெரிய அனுபவம். ஆஸ்திரேலியாவுக்குப் போனபோது அங்கு அவருடைய உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்ட நேரத்திலே அவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். அதற்கு அவர்களுக்கு வாழ்த்து சொல்லுகிறேன். இவர்களுக்குச் சிகிச்சை செய்தவர்களுக்கும் நான் நன்றி சொல்லுகிறேன். இல்லையானால் ஒருவேளை நம்மாலே காப்பாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கும் என்பதிலே எனக்கு ஒன்றும் மறுப்பு கிடையாது. நம்மிடத்திலே இருக்கிற வசதி இந்த அளவுக்குதான் உள்ளது. ஏதோ இரண்டொரு இடத்திலே இரண்டொரு கருவிகள் சிறப்பாகக் கிடைத்தன. அந்தமருத்துவ மனையேகூட பாராட்டப்படுகின்றது. அந்த வகையிலே மருத்துவக் கருவிகள் எல்லா மருத்துவ மனைகளுக்கும் கிடைக்கிற அளவுக்கு வெளிநாட்டு செலாவணி நமக்கு இல்லை. கிடைக்கிற அளவுக்கு அதைப் பயன்படுத்திக் கொள்ளலாமென்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே சித்த மருத்துவத்தைப்பற்றி திரு. சுவாமிநாதன் அவர்களும் திரு. ஆதித்தன் அவர்களும் எடுத்துச்சொன்னார்கள். தமிழ் நாடு ஒன்றிலேதான் சித்த மருத்துவம் மூல பாடமாகக் கொண்டு இன்றைக்கும் நடைபெறுகிறது. தெற்கே உள்ள மாநிலங்களிலே மைசூர், ஆந்திரா, கேரளாவிலே சித்த மருத்துவம் என்ற பெயரைக்கூட மாற்றிக்கொண்டு சில பேர் ஆயுர்வேதம் என்று சொல்லிப் பயன்படுத்துவதும் சித்த மருத்துவம் தான். பெங்களூரிலே உள்ள "சித்தா மெடிகல் ட்ரீட்மெண்ட் செண்டரிலே" உள்ளவர்கள் கான்சரைப்பற்றி அதற்கு சில சித்த மருந்துகள் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும் அதைப் பற்றி ஆராய்ந்துபார்க்க வேண்டும். அதிலே அவர்கள் தந்துள்ள குறிப்பு இது.

"Siddhas were Dravidians in their origin and they were the greatest scholars of the ancient time. All the available texts after their names are in classical Tamil script and language. The science of medicine expounded by them is known as Siddha Vaidya or Siddha System of medicine which comprehends the entire system of Indian medicine."

திரு. ஜி. சுவாமிநாதன் : ஒன்று குறிப்பிட மறந்துவிட்டேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே இந்த போகர் வர்ம வைத்தியம் என்பதாக ஒன்று இருந்துகொண்டிருக்கிறது. சைனு நாட்டிலே இருப்பதைப்போல "அகுபஞ்சர்" என்று சொல்லுகிறார்களே அதைப்போல. அங்கே இருக்

கிறவர்கள் ஏதாவது அடி பட்டால் எலும்பு முறிந்தால் கையாலேயே தடவி அவர்களைத் தூங்கப் பண்ணுகிறார்கள். எலும்பைச் சேர்த்து விடுவதாகச் சொல்லுகிறார்கள். அதைக் கூட அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து ஏதாவது செய்ய முடியுமானால் அதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சித்த மருத்துவம் இப்படிப்பட்ட ஒரு தொன்மையுடையது மட்டுமல்ல, உயர்வுடையது என்றாலும் இன்றைக்கு அதனுடைய மூலங்கள் காப்பாற்றப்பட்டு அந்த நூலோடும் நூல் அறிவோடும் தொடர்பு படுத்தப்பட்டு அதிகமாக வழங்கப் படாத காரணத்தாலே சித்த மருத்துவத்தினுடைய சிறப்பு குன்றி கெடுகிறது என்பதைக் கண்டு நான் வேதனைப் படுகிறேன். இந்த நிலையை மாற்றுவதற்காக சில முயற்சிகளை நாம் எடுத்துக்கொண்டுள்ளோம். அதற்கு "மாடர்ன் சைன்டிபிக் அப்ரோச்" உள்ளவர்கள் சிலபேர் இதிலே ஈடுபட வேண்டுமென்று விரும்புகிறேன். ஒருவர், இருவர், டாக்டர் குருசாமி முதலியார் அவர்களைப்போல, இப்போதுள்ள டாக்டர் ரத்தினவேல் சுப்பிரமணியம் அவர்களைப்போல இதிலே உள்ள மருந்துகளுடைய தரங்களைப் பாராட்டி பல நேரத்திலே குறிப்பிடுகிறார்கள். இருந்தாலும் அது ஒரு பெரிய வளர்ச்சியடையவில்லை. அப்படியே பாராட்டினாலும், கடைசியாக என்ன ஆகிறது என்றால் ஒரு நாட்டிலே படையெடுத்துச் செல்லுகிறவர்கள் அந்த நாட்டிலே உள்ள ஆடவர்களை அழித்துவிட்டு, பெண்கள் இருப்பார்களேயானால், அவர்களை வேறுவிதமான உடையைப்போட்டு தங்கள் நாட்டுக்கு அழைத்து வந்து தங்கள் நாட்டுப் பெண்களாக ஆக்கிவிடுவார்கள் என்று கதையிலே கேட்கப்படுவதைப் போல் ஆகிவிடுகிறது. அதைப் போல சித்த மருந்துகளிலே உயர்ந்த மருந்து இருந்தால், அதை எடுத்து அலோபதியிலேயும் பயன்படுத்துகிறார்கள். அவ்வளவுதானே தவிர சித்த மருத்துவம் அதன் முறையின்படி வளர்ச்சியடைய உதவவில்லை.

Siddha as a system is not encouraged till to-day. ஆகவே அதற்குக் கிடைக்கவேண்டிய எல்லாவிதமான வளர்ச்சியும் ஒரு தனி மருத்துவ அடிப்படையிலே ஒரு தனித் தன்மையிலே நமக்குப் பயன்படுவதற்கு மட்டுமல்ல, உலகத்திற்கே "as a Science" பயன்பட வேண்டும் என்பது எனது அவா. பரத நாட்டியக் கலையைக் காப்பாற்ற வேண்டுமென்று நாம் உணருகிறோம். சிற்பக் கலையைக் காப்பாற்றுவதிலே நமக்கு அக்கறை இருக்கிறது. எப்போதோ புதைந்து போன நகரத்தினுடைய சின்னங்கள், அடையாளங்கள் அவைகளைத் தேடிக் காப்பாற்றுகிறோம். ஆனால் இன்னும் புதையாமல் இருக்கிற சித்த வைத்தியத்தைப் புதைந்துவிட நாம் விட்டுவிடுகிறோம் என்று சொன்னால், அது நம்முடைய அறியாமைச் சூழ்நிலையினாலே ஏற்பட்டுவிடுகின்றது. இந்த நிலையை மாற்றுவதற்கான பல்வேறு முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.கிடைத்த அளவுக்கு வெற்றி கிடைக்கட்டும். இல்லையானாலும் இந்த முயற்சி ஒரு நல்ல நோக்கத்திற்காக என்ற எண்ணத்திலே நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.

(பிற்பகல் 7-30)

இன்று திரு. சுவாமிநாதன் அவர்கள் கூறியதைப்போல, தமிழ்நாட்டில் வர்மக்கலை இன்றும் நடைபெற்று வருகிறது. வர்மம் என்பதே பின்னர் "மர்மம்" என்று திருந்தியது—மர்மம் என்ருல் "சீக்ரெட்" என்பது. உடல் கூற்றில் பல்வேறு பகுதியிலுள்ள நரம்புகளை எல்லாம் இயக்கும் ஆற்றலை ஒரு குறிப்பிட்ட பகுதி நரம்புகள் பெற்றிருக்கின்றன. நெற்றியிலே நடு மையத்திலே அடிபட்டால் அவனுக்கு மூளை கலங்கிவிடும். அல்லது காதுக்குப் பக்கத்தில் சற்று கீழே ஒரு குறிப்பிட்ட இடத்தில் அடி பட்டால் அவனுக்கு மயக்கம் வரும். அல்லது முழங்காலுக்குக் கீழே ஒரு பகுதியில் ஒரு நரம்பைச் சுண்டிவிட்டால் அவன் செயலற்றுப் போய் விடுவான். இதைப்போல ஒருவன் அடிபட்டு மயக்கமுற்றுக்கிடந்தால் எந்த நரம்பை நீவி விடுவதன் மூலம் மயக்கத்தைப் போக்கலாம் என்றெல்லாம் சொல்லும் கலை வர்மக்கலை. அது ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து தமிழ் நாட்டிலே மிகச் சிறப்பான தொடு கலையாக இருந்துவருகின்றது. அந்தக் கலையைத்தான் 1500 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டிற்கு யாத்திரீகர்களாக சீனர்கள் வந்த போது இங்கே வந்து பயின்று, மருத்துவக்கலையுடன் இது பற்றிய குறிப்புக்களையும் எடுத்துச்சென்று அதை முறைப்படுத்தியிருக்கின்ருர்கள். அது தான் இன்று அக்கு பஞ்சர் என்று அவர்களால் சொல்லப்படும் முறைக்கு அடிப்படை உண்மையாக இருந்துவருகின்றது. இன்றைக்கு அவர்கள் அக்கு பஞ்சர் முறையைத் தோற்றுவிக்கும்போது, சீன ஏடுகள் அவர்களுக்குக் காரணமாக இருக்கலாம். ஆனல் அதன் மூலம் தமிழ் நாட்டிலிருந்து தான் வந்தது என்பதை மறுப்பதற்கில்லை.

It is more Chinese basis that is adopted for acupuncture than Western basis. That basis is derived from Indian basis, that Indian basis is derived from Dravidian basis which is originally found in Tamil Siddha Literature.

ஆக தமிழிலிருந்து போனதுதான் இன்று அங்கே உருவாகியிருக்கின்றது. அந்தக் கலையை தமிழ் நாட்டிலே இன்றும் தொடர்ந்து திருநெல்வேலி மாவட்டத்திலும் கன்னியாகுமரி மாவட்டத்திலும் சிலர் தெரிந்து கைக்கொண்டு வருகின்ருர்கள். ஆனல் பிறருக்குச் சொல்லாவண்ணம் இரகசியமாக வைத்திருக்கின்ருர்கள். அதை இப்படி ரகசியமாக வைத்துக்கொண்டிருப்பதற்குக் காரணம், உயர்ந்த மனிதப் பண்போடு, விஞ்ஞான மனப்பான்மையோடு அதிலே மனத்தைச் செலுத்துவதற்குப் பதிலாக தீய மனமுள்ளவர்கள் தமது பகைவரைப் பழி வாங்குவதற்குப் பயன்படுத்திவிடுவார்களோ என்றும் அதை ஒருவருக்கொருவர் கெடுதல் செய்ய மனத்தில் ஏற்படும் வர்மத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக இந்த வர்மக் கலையைப் பயன்படுத்திவிடுவார்களோ என்றும் ஐயங்கொண்டே அதைப் பரவலாகப் பலருக்கும் சொல்லாமல் இரகசியமாகவே வைத்துக்கொண்டிருக்கின்ருர்கள். அதிலே ஒரு சிறிய நூலை 90 அல்லது 100 சூத்திரம் கொண்டதொரு நூலை நான்கு நாட்களுக்கு முன்பு தாராபுரத்தில் நடைபெற்ற சித்த வைத்திய மகாநாட்டில் வெளியிட்டேன். இன்னும் சில

நூல்கள் கிடைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். அவற்றை வெளியிட மருத்துவ நூல்களை வெளியிடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவிலுள்ள டாக்டர் தியாகராஜன், டாக்டர் வேணுகோபால், டாக்டர் ஆனந்தகுமார் ஆகியோர் ஆர்வமுடையவர்களாக இருக்கின்றார்கள். இவர்களைக் கொண்டு மேலும் வர்மக்கலை நூல்களை வெளியிடுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள இருக்கிறோம். அதே போல பழனி அறங்காவலர் குழு இப்படிப்பட்ட நூல்களை வெளியிடுவதற்கு உதவி செய்யும் முறையில் இரண்டு லட்சம் ரூபாயை ஒதுக்கி இதுவரையில் ரூ. 75 ஆயிரம் தந்திருக்கின்றார்கள். மிச்சமுள்ள தொகையையும் தர இருக்கின்றார்கள். அதைக் கொண்டு பல நூல்கள் வெளியிடப்படும். அதில் ஒன்று சித்த வைத்திய முறையில் அனுபவபூர்வமான மருந்துகள் பற்றி பழைய நூல்களிலுள்ள குறிப்புகளைக் கொண்டு சித்த மருத்துவரான அப்துல்லா என்ற பெரியவர் தொகுத்து எழுதியிருக்கின்றார். பத்துப் பகுதிகளாக எழுதியிருக்கின்றார். அதற்கு திறவுகோலாகவும், ஒரு நூலை எழுதியிருக்கின்றார். அவை 60 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிடப்பட்டு பின்னர் அச்சிடப்படாமல் இருக்கின்றன. இவை மீண்டும் இப்போது அச்சேற்றப்பட்டுள்ளன. இப்படி வெளி வராத நூல்கள் வெளி வந்தும் மீண்டும் அச்சடிக்கப்பட வேண்டிய நூல்கள், சுவடிகளிலிருந்து எழுதப்பட வேண்டிய நூல்கள், ஒப்பு நோக்கிப் பார்க்கப்பட வேண்டிய நூல்கள், பழுது பார்க்க வேண்டியவை, மேலும் நமது நண்பர் திரு. ஆதித்தன் அவர்கள் சொன்னதைப்போல, மறைந்து போன ஏடுகளை எல்லாம் கண்டெடுத்து தொகுக்கப்பட வேண்டியவை பல இருக்கின்றன. சித்த மருந்துகளை எல்லாம் தயாரிக்கும் முறையை விரிவாக ஒழுங்கு படுத்துவதற்கு இந்த நூல்கள் பயன்படும். அதேபோல மூலிகைத் தோட்டமொன்று ஏற்படுத்தி கிடைத்தற்கரிய மூலிகைகளைப் பயிரிடுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் நாம் எந்த முயற்சியை மேற்கொண்டாலும், இயற்கையானதொரு வளர்ச்சிச் சூழ்நிலை வரவில்லை. எல்லாம் தட்டுப்பட்டு தட்டுப்பட்டு சில இடையூறுகள் ஏற்பட்டு, ஊக்கமற்ற தன்மை ஏற்பட்டுவிடுகின்றது. இவற்றை மாற்றுவதற்காக முயற்சிக்கிறோம். கூடுமானவரையில், இன்னும் ஓராண்டு காலத்தில் ஏதாவதொரு வகையில் சித்த வைத்திய முறையை நிலை நிறுத்த முடியும் என்று நினைக்கிறேன்.

இங்கே பல ஆலோசனைகள் வழங்கப்பட்டன. அவற்றை நிச்சயமாக மனத்தில் கொள்ளுவேன். அதைப் போல இந்தத் துறையிலுள்ளவர்கள் இவற்றை எண்ணிப்பார்த்து அவற்றை நிறைவு செய்வதற்கு உரிய முறையில் செயலாற்றுவார்கள். அதன் மூலம் அங்கத்தினர்களின் மேலான எண்ணங்களும் விருப்பங்களும் நிறைவேறும் என்று தெரிவித்து மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது இந்தத் துறையினைப் பாராட்டிப் பேசியதற்காக எனது நன்றியினையும் வணக்கத்தையும் தெரிவித்து என் உரையினை முடித்துக்கொள்ளுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. அவை மீண்டும் 29—3—1975 சனிக்கிழமை மாலை 3 மணிக்குக் கூடும்.

பின்னர், அவை ஒத்திவைக்கப்பட்டது.

(பிற்பகல் 7–35)

4. அவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

150. Order issued with G.O. Ms. No. 236, Commercial Taxes and Religious Endowments, dated the 31st August 1974, exempting from liability to entertainments tax, show tax and additional surcharge, one benefit film show which may be conducted in the City of Madras and in the districts in connection with the National Teachers' Day Celebration on 5th September 1974. [*Laid on the table of the House under section*, 16 (4) *and* (3) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 *Tamil Nadu Act X of* 1939) *and the Tamil Nadu Local Authorities Finance Act*, 1961 (*Tamil Nadu Act* 52 *of* 1961)].

151. Order issued with G.O. R. No. 421, Commercial Taxes and Religious Endowments, dated the 30th December 1974, exempting from liability to entertainments tax, show tax, additional surcharge on entertainments tax and additional surcharge on show tax, one cinematograph film show proposed to be held by the Headmistress, Immaculate Heart of Mary's Girls' High School, Avadi, at the Meenakshi Theatre, Avadi, on 19th January 1975. [*Laid on the table of the House under section* 16(4) *of the Tamil Nadu Entertainments Tax Act*, 1939 (*Tamil Nadu Act X of* 1939)].

B. Reports, Notifications and Other Papers.

£ 89. Note on Agriculture Demands, 1975–76. (**English and Tamil**).

£ 90. Performance Budget on Agriculture, 1975-76.

£ 91. Commercial Budget on Agricultural Engineering Workshop, 1975–76.

£ Circulated to all M.L.Cs. on 24th March 1975.

இணைப்பு I.

(295 ஆம் பக்கத்தில் 198*ஆம் எண்ணுள்ள உடுக்குறியிட்ட வினாவின் விடையைக் காண்க.)

M.D. General Medicine	21	20	18	5
Obstetrics and Gynaecology ..	8	4	4	..
Pathology	4	..	2	..
Microbiology	6	..	2	..
Physiology	4	..	4	..
Paediatrics	17	..	3	..
Radio Diagnosis	4	..	..	..
Radio Therapy	4	..	..	..
Anaesthesiology	3	2	3	..
Venereology	4	..	..	..
Dermatology	4	..	..	..
Bio-Chemistry	4	..	..	..
General Surgery	21	20	18	3
Orthopaedics	4	..	2	..
Opthalmology	6	..	6	..
E.N.T.	6	..	5	..
Pharmacology	4	..	4	..
Forensic Medicine	..	..	2	..
M.D. Anatomy	2	4	2	..
M.S. Neuro Surgery	2	..	..	..
M.D. SPM	1	..	..	..

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1975 மார்ச் 27]

Diploma for April 1975.

Name of the Course.	Madras Medical College.	Stanley Medical College.	Madurai Medical College.
(1)	(2)	(3)	(4)
D.G.O.	18	6	8
D.C.H. April/Oct.	34	6	6
D.A.	4	4	6 per session.
D.M.R.D.	4	4	6 per session.
D.O.	6	..	6 per session.
D. Ortho	4	2	2 per session.
D.L.O.	4	..	6 per session.
D.P.M.	6+2	..	3 per session.
D.C.P.	4	..	..
D.V.	6+2	..	..
D.D.	6	..	..
D.M.R.T.	4	..	..
D.T.C.D.	12	..	..

Higher Specialities.

Name of the Course.	Number of seats available.
(1)	(2)
Madras Medical College.—	
1 Operative Dentistry	2
2 Oral Surgery	3
3 Periodontia	3
4 B.S.Sc., and IPH.	10
5 M.Ch. Paediatric Surgery	2
6 M.Ch. Plastic Surgery	2
7 M.Ch. Thoracic Surgery	2
8 M.Ch. Urinary Surgery	4
9 D.M. Neurology	2
10 D.M. Cardiology	2
Madurai Medical College—	
1 M.Ch. Paediatric Surgery	2
2 M. Ch. Neuro Surgery	2

STATEMENT II.

NUMBER OF BED STRENGTH OF THE HOSPITALS.

(1)	1971-72. (2)	1975-76. (3)
1 Government General Hospital, Madras	1,244	1,537
2 Government Stanley Hospital, Madras	931	1,011
3 Kilpauk Medical College Hospital, Madras	300	300
4 Government Royapettah Hospital, Madras	340	526
5 Government Ophthalmic Hospital, Madras ..	266	328
6 Government K.G. Hospital for Women and Children, Madras.	615	635
7 Institute of Obstetrics and Gynaecology and Government Hospital for Women and Children, Madras.	474	528
8 Raja Sir Ramaswamy Mudaliar's Lying in Hospital, Madras.	275	426
9 Institute of Child Health and Hospital for Children, Madras.	250	250
10 Government Tiruvotteeswarar Tuberculosis Hospital, Otteri, Madras.	222	222
11 Government Mental Hospital, Madras	1,800	1,800
12 Government Tuberculosis Sanatorium, Tambaram ..	618	726
13 Government Erskine Hospital, Madurai	1,310	1,394
14 Government Raja Mirasdar Hospital, Thanjavur ..	636	642
15 Thanjavur Medical College Hospital, Thanjavur ..	538	538
16 Chingleput Medical College Hospital, Chingleput ..	400	416
17 Coimbatore Medical College Hospital, Coimbatore ..	785	805
18 Tirunelveli Medical College Hospital, Tirunelveli ..	325	554
Total ..	11,329	12,638

STATEMENT III.

BUILDING PROGRAMME.

PRESENT SCHEME IN FULL RECENTY SANCTIONED.

Serial number and name of work.	*Estimated amount.*	*G.O. No. and date.*
(1)	(2)	(3)
	(RS. IN LAKHS).	
Madras Medical College, Madras.		
1 Construction of additional three floor over the canteen block.	4·00	G.O. Ms. No. 2511, Health, dated 12th November 1974.
2 Improvements to Common Hall	3·85	G.O. Ms. No. 2727, Health, dated 7th December 1974.
3 Construction of a clinical examination room.	1·60	G.O. Ms. No. 1731, Health, dated 26th July 1974.
4 Improvements to the Electrical Installation in the Institute of Physiology and Pharmacology.	0·20	G.O. Ms. No. 1391, Health, dated 17th June 1974.
Kilpauk Medical College, Madras.		
5 Construction of Buildings for accommodating Social and Preventive Medicine and Microbiology.	4·40	G.O. Ms. No. 1738, Health, dated 27th August 1974.
6 Construction of a pump room for well water supply.	0·21	G.O. Ms. No. 196, Health, dated 7th February 1975.
Chingleput Medical College Hospital, Chingleput.		
7 Construction of Pharmacy Block	7·50	G.O. Ms. No. 121, Health, dated 22nd January 1975.
8 Provision of centralised system of Oxygen and Manifold room.	2·35	G.O. Ms. No. 2725, Health, dated 13th December 1974.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of work.	Estimated amount.	G.O. No. and date.
(1)	(2)	(3)
	(Rs. IN LAKHS).	
Coimbatore Medical College and Hospital.		
9 Construction of accident ward with 30 beds.	3·00	G.O. Ms. No. 2031, Health, dated 10th September 1974.
10 Construction of Mortuary Block.. ..	1·60	G.O. Ms. No. 1016, Health, dated 27th April 1974.
Government General Hospital, Madras.		
11 Replacement of a lift	2·00	G.O. Ms. No. 2018, Health, dated 18th September 1974.
12 Improvements of water supply	0·62	G.O. Ms. No. 2575, Health, dated 20th November 1974.
13 Provision of underground cable from the surgical block, Transformer pillar box to Engine House.	0·44	G.O. Ms. No. 2789, Health, dated 18th December 1974.
14 Rectification of electrical defects pointed out by the Chief Electrical Inspector.	0·42	G.O. Ms. No. 2556, Health, dated 16th November 1974.
15 Provision of Boilers in Government General Hospital, Madras.	3·90	G.O. Ms. No. 2265, Health, dated 9th September 1974.
Government Stanley Hospital, Madras.		
16 Construction of 40 bedded block (construction of building on the lift side portion of ground floor and construction of first floor for the entire portion of 100 bedded ward).	4·50	G.O. Ms. No. 1654, Health, dated 19th July 1974.
17 Improvements of water supply	0·32	G.O. Ms. No. 2575, Health, dated 20th November 1974.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of work.	Estimated amount.	G. O. No. and date.
(1)	(2)	(3)
	(Rs. IN LAKHS).	
Government Royapettah Hospital, Madras.		
18 Construction of Cancer Block.	10.02	G. O. Ms. No. 1502, Health, dated, 12th July 1974.
Kilpauk Medical College Hospital, Madras.		
19 Improvements of supply of water	0.34	G. O. Ms. No. 2575, Health, dated, 20th November 1974.
Kasthurba Gandhi Hospital for Women and Children, Madras.		
20 Provision of air-conditioning the Main Operation theatre in the ground floor completely.	1.92	G.O. Ms. No. 1538, Health, dated 5th July 1974.
Government Hospital for Women and Children, Madras.		
21 Construction of a building to accommodate Janus Cobalt Unit.	2.14	G. O. Ms. No. 65, Health, dated 9th January 1975.
22 Construccion of a Twin Operation Theatre over Tubectomy ward.	1.85	G. O. Ms. No. 2026, Health, dated, 9th September 1974.
23 Improvements of water supply	0.60	G. O. Ms. No. 2575, Health, dated 20th November 1974.
24 Additional Amenities	0.16	G. O. Ms. No. 1499, Health, dated 29th June 1974.
Institute of Child Health and Hospital for Children, Madras.		
25 Rectification of certain defects in H.V. and M.V. installation.	0.10	G. O. Ms. No. 174, Health, dated 28th January 1974.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Serial number and name of work. (1)	Estimated amount. (2) (Rs. IN LAKHS).	G. O. No. and date. (3)
Government Mental Hospital, Madras.		
26 Improvements of supply of water ..	0.32	G. O. Ms. No. 2575, Health, dated 2[illegible] th November 1974.
Government Erskine Hospital, Madurai.		
27 Construction of a Government Hospital at Balarangapuram at South Madurai.	14.20	G. O. Ms. No. 848, Health, dated 20th Nevember 1974.
Peripheral Hospitals.		
28 Construction of 100 bedded Government Peripheral Hospital in Tondiarpet, Madras.	32.34	G. O. Ms. No. 2122, Health, dated 21st September 1974.
29 Construction of 100 bedded Government Peripheral Hospital in Anna Nagar.	28.02	G. O. Ms. No. 2122, Health, dated 21st September 1974.
30 Construction of 100 bedded Government Hospital at Kalaignar Karunanithi Nagar.	30.00	G. O. Ms. No. 1772, Health, dated 30th July 1974.

Total number of schemes.	*Cost.* (RS. IN LAKHS.)
30	163·12

STATEMENT—IV.

PROPOSED BUILDING SCHEMES FOR 1975-76.

Serial number and name of the Scheme.	*Total cost.*
(1)	(2)
	(RS. IN LAKHS.)
1 Construction of building to accommodate the Steam Laundry at the Institute of Child Health and Hospital for Children, Madras-8.	4·00
2 Construction of two storeyed building to accommodate 150 beds in the Institute of Obstetrics and Gynaecology and Government Hospital for Women and Children, Madras-8.	3·00
3 Construction of Blood Bank over Accident-*cum*-Resuscitation Ward in Government Erskine Hospital, Madurai.	2·60
4 Provision of alternate high tension supply cables to Madras Medical College and Government General Hospital, Madras.	1·60
5 Construction of Buildings for Electron Microscope Laboratory in Madras Medical College, Madras.	1·60
6 Development of Horse Farm and Animal Farm in King Institute, Guindy.	1·32
7 Provision of ramp for the old block in Government Royapettah Hospital, Madras.	1·00
8 Construction of Central Animal House for Tirunelveli Medical College, Tirunelveli.	0·80
9 Provision Store Shed in Government Royapettah Hospital, Madras.	0·30
10 Extension of Steam Laundry and construction of corridor in the Government Royapettah Hospital, Madras.	0·36
11 Conversion of cess pool type of latrines into septic tank in T.B. Sanatorium, Thoppur.	0·14
12 Provision of Lumber Room in Government R.S.R.M. Lying-in Hospital, Madras.	0·17
13 Improvements to existing Mortuary Block at Chingleput Medical College, Chingleput.	0·12
14 Provision of lift in the Obstetrics and Gynaecology Block at Government Erskine Hospital, Madurai.	1·20
15 Construction of First Floor over the Medical Stores in the Government R.S.R.M. Lying-in Hospital, Madras.	0·67
16 Air-conditioning of Bio-Chemistry Room and sensitivity room in the new Annexe in Government Chest Institute, Madras.	0·21
Total	19·09

STATEMENT V.

NUMBER OF DISPENSARIES OF INDIAN MEDICINE IN THE STATE.

	Siddha.	Ayurveda.	Unani.	Total.
(1)	(2)	(3)	(4)	(5)
Panchayat Union Rural Dispensaries.	285	63	9	357
Regular Dispensary	32	13	1	46
Run by Municipalities.	36	21	5	62
Government Dispensaries ..	5	5	..	10
Run by Temples	26	..	..	26
	384	102	15	501

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

STATEMENT VI.

LIST OF DISPENSARIES SO FAR ORDERED TO BE PROVINCIALISED.

District.	*Name of the dispensary.*	*Date of taking over.*
(1)	(2)	(3)
(a) Ex-district Board Dispensaries—		
Chingleput	1 Padirvedu Madarpakkam	30th December 1974.
	2 Selavakkam	1st June 1973.
	3 Tirupporur	13th December 1974.
	4 Walajabad	Under process.
Coimbatore	5 Kallipatti	10th January 1975.
	6 Paduppampatti ..	28th March 1973.
	7 Pongalur	Under process.
	8 E. Chettipalayam ..	Do
Dharmapuri	9 Karimangalam	1st February 1973.
	10 Royakottah	1st January 1975.
Madurai	11 Andipatti	1st January 1975.
	12 Idayakottai	1st November 1972.
	13 Saptur	Do.
	14 Sholavandan	Do.
	15 Keeranur	Under process.
Nilgiris	16 Kundah Bridge ..	1st November 1972.
	17 Melur Hosetty ..	Under process.
North Arcot	18 K. V. Kuppam	1st November 1972.
	19 Marattipalayam ..	Do.
	20 Melvisharam	1st November 1972.
	21 Desur	29th August 1973.
	22 Chetput	Under process.
	23 Pudupalayam	1st November 1972.
	24 Panapakkam	23rd January 1975.
Ramanathapuram, ...	25 Anandur	31st December 1974.
	26 Elayirampannai ..	1st November 1972.
	27 Kamuthi (Maty.) ..	Do.
	28 Manamadurai	Do.
	29 V. Pudur	1st November 1972.
	30 Kamuthi	Under process.
	31 Pamban	Under process.

District. (1)	Name of the dispensary. (2)	Date of taking over. (3)
Salem	32 Mallur	1st November 1972
	33 Peddanaickenpalayam.	1st February 1975.
South Arcot.	34 Pennadam	1st November 1973.
	35 Avalurpet	Do.
	36 Kattumannarkoil	Do.
	37 Sankarapuram	Do.
	38 Bhuvanagiri	Under process.
	39 Chinnasalem	Do.
	40 Gavarapattu	Do.
	41 Srimushnam	Do.
Thanjavur	42 Kollidam	1st November 1972.
	43 Peralam	1st November 1972.
	44 Enangudi	1st January 1975.
	45 Perumagalur	Under process.
	46 Sithamalli	Do.
	47 Madukkur	Do.
Tiruchirappalli	48 Thathiengarpet	31st December 1974.
	49 Thogaimalai	31st December 1974.
	50 Udayarpalayam	1st November 1972.
	51 Kattuputhur	Under process.
Tirunelveli	52 Kulasekarapattinam	1st November 1972.
	53 Vickramasingapuram.	Do.
	54 Sivagiri	Do.
	55 Alwarthirunagari	Under process.
	56 Kalugumalai	Do.
	57 Panagudi	Do.
	58 Vilathikulam	Do.
	59 Veeravanallur	Do.
	60 Veerakeralampudur	Do.
Pudukottai	61 Iluppur	Under process.
	62 Gandarvakottai	Do.
	63 Keeramangalam	Do.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

District. (1)	*Name of the dispensary.* (2)	*Date of taking over.* (3)
	(b) Panchayat Union Dispensaries.	
Chingleput	64 Pulicat	Under process.
	65 Villivakkam ..	Do.
Coimbatore	66 Kumaralingam ..	31st March 1974.
Dharmapuri	67 Mathur	1st November 1972.
	68 Papparapatti ..	Do.
	69 Denkanikottah ..	Under process.
	70 Uthangarai	Do.
North Arcot	71 Kalavai	Under process.
Ramanathapuram	72 Thondi	Under process.
	73 Singampuneri ..	Do.
	74 Thiruppuvanam ..	Do.
	75 Ilayankudi	Do.
Salem	76 Kuttapatti	1st February 1973.
	77 Valapadi	1st November 1972.
	78 Thammampatti ..	Under process.
South Arcot	79 Kandachipuram ..	1st November 1972.
Thanjavur	80 Kodikarai	30th March 1973.
	81 Podakudi	1st November 1972.
	82 Voimedu	Do.
	83 Kulikarai	Under process.
Tiruchirappalli	84 Musiri (Maternity) ..	6th June 1974.
	85 Somarasampettai ..	1st November 1972.
Tirunelveli	86 Eruvadi	1st November 1972.
	87 Arumuganeri	Do.
	88 Valliyoor	Under process.
	89 Radhapuram ..	Do.
Pudukkottai	90 Subramaniapuram ..	Under process
	91 Kottampatti	Do.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

District.	Name of the dispensary.	Date of taking over.
(1)	(2)	(3)
	(c) Rural Dispensaries.	
Chingleput	92 Sadras	Under process.
North Arcot	93 Pallikonda	9th January 1975.
	94 Pernamallur	Under process.
Nilgiris	95 Denal Sholurmattam	31st December 1974.
Madurai	96 Siddayankottai ..	Under process.
	(d) Municipal Dispensaries.	
North Arcot	97 Aroct	Under process.
Salem	98 Idapadi	Do.
Tiruchirappalli	99 Manapparai	Do.
Tirunelveli	100 Puliangudi	Do.
	District Board—cont.	
	Chatram Dispensary.	
Thanjavur	101 Minisal	1st November 1972.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
தமிழ்நாடு சட்டப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

STATEMENT VII.

The various medical facilities available in the mofussil is classified and distributed as follows :—

1	District Headquarters Hospitals	14
2	Taluk Headquarters Hospitals	97
3	Non-taluk Headquarters Hospitals	109
4	Dispensaries	112
5	E.S.I. Hospitals	3
6	*E.S.I. Dispensaries*—	
	Static	95
	Mobile	9
7	Utilisation Dispensaries	3
8	Primary Health Centres	381
9	Leprosy Control Units	37
10	Mobile Medical Units	13

	Additional Bed strength increased.	*Total.*
1973–74	152	10,385
1974–75	359	10,744
1975–76	218 (Target).	10,962

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1975 மார்ச் 27

மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

மேலவைத் தலைவர் அவர்களே, மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கை பற்றிய முக்கியக் கூறுகளை இந்த அவையின் முன் வைக்க விழைகிறேன்.

கொள்கை :

ஒரு நாடு உரிய வகையில் வளர்ச்சி பெறுவதற்கும் நலமுடன் திகழ்வதற்கும் மக்கள் சிறந்த உடல் நலம் உடையவர்களாய் இருக்க வேண்டியது இன்றியமையாதது ஆகும். எனவே, "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்னும் பழமொழிக்கிணங்க, மக்கள் உடல் நலனைப் பேணி வளர்த்து மேம்படுத்துவதற்கு இவ்வரசு பெரும் முக்கியத்துவம் அளித்து வருகின்றது. இக்குறிக்கோளினை எய்தற் பொருட்டு அரசு பல ஆண்டுகளாகவே பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வந்துள்ளது. இவற்றில் தாய்-சேய் நலன், மக்கள் ஊட்டச் சத்துத் தரத்தை மேம்படுத்தல், தொற்றுநோய்த் தடுப்பும் கட்டுப்பாடும், சுகாதாரம் பற்றிய அறிவை மக்களிடையே பரப்புதல், உணவுக் கலப்படத் தடுப்பு, சுற்றுப்புறத் தூய்மையை மேம்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

நகரமைப்புத் திட்டம், குடிநீர் வழங்கு-வடிகால் வாரியம் ஆகியவை குறித்த செலவுகளும் இந்த வரவு-செலவுத் திட்டக் கோரிக்கையில் அடங்கும்.

இனி, மக்கள் நல்வாழ்வுத் துறையினது நடவடிக்கைகளின் சிறப்பான கூறுகள் பற்றி இங்கு எடுத்துரைக்க விழைகின்றேன்.

தாய்-சேய் நலன்கள் உட்பட (சமுதாய) மக்கள் நல்வாழ்வை மேம்படுத்துதல்.

(a) **தொடக்க நல்வாழ்வு நிலையங்கள்.**—தொடக்க நல்வாழ்வு-நிலையம்—கிராம குடும்ப நலப் பிரிவு கிராமப் பகுதிகளில் முக்கியமான பயனுள்ள பணியாற்றி வருகின்ற அமைப்புகள் ஆகும். தற்போது நமது மாநிலத்தில் உள்ள 374 ஊராட்சி ஒன்றியங்களில் மொத்தம் 381 தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள்

[1975 மார்ச் 27

அறிவர். (1) துரிஞ்சாபுரம், (2) கீழ்ப்பெண்ணாத்தூர், (3) மொடக்குறிச்சி, (4) கொடுமுடி, (5) வெள்ளக் கோயில், (6) தூக்கநாயக்கன் பாளையம், (7) ஆத்தூர் ஆகிய ஏழு ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் உள்ளன. தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், தாய்-சேய் நலம், குடும்ப நலத் திட்டம், நோய்த் தடுப்பு, சத்தூட்டக் கல்வி, மருத்துவ சிகிச்சை முதலிய துறைகளில் தொடர்ந்து கிராம மக்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

மொத்தமுள்ள 381 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் 188 தொடக்க நிலையங்களுக்கு சொந்தக் கட்டிடங்கள் உள்ளன. 1973–74 ஆம் ஆண்டில் 31 தொடக்க நல்வாழ்வு நிலையங்கட்கும், 1974–75 ஆம் ஆண்டில் 42 தொடக்க நல்வாழ்வு நிலையங்கட்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது: அக் கட்டிடங்கள் கட்டும் பணி பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது. அண்மையில் நிதிப் பற்றுக்குறை காரணமாக இந்திய அரசு விதித்துள்ள தடையும், சிமிட்டி போன்ற கட்டிடம் கட்டுவதற்குரிய பொருள்கள் கிடைப்பதில் உள்ள இடையூறும் கட்டிடப் பணி முன்னேற்றத்தை ஓரளவு பாதித்துள்ளன. நிதிவசதி கிடைப்பதைக் கருத்திற்கொண்டு மற்ற தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் படிப்படியான திட்டத்தின் கீழ் கட்டிடங்கள் கட்டித் தரப்பட வேண்டும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்தின் கீழ் கீழ்க்காணும் பணிகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது :—

மருந்தகங்களுக்கும் பணியாளர் குடியிருப்புகளுக்கும் கட்டிடங்கள் கட்டுதல்.

(ii) தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்கும் துணை நிலையங்களுக்கும் மருந்துகள் வாங்க கூடுதல் நிதி ஒதுக்குதல்.

தொடக்க நல்வாழ்வு நிலையங்களுக்குப் போதுமான அளவிற்கு மருந்துகள் வழங்கப்படுவதில்லை என்று பொதுவாகக் கருத்து நிலவுகிறது. 1971–72 ஆம் ஆண்டில், ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும், மருந்துச் செலவு குறித்து விதிக்கப்பட்டிருந்த நிதி வரம்பான ரூ. 4,500 என்பதை 1974–75 ஆம்

[1975 மார்ச் 27

ஆண்டில் ரூ. 12,000 ஆக உயர்த்தியதன் மூலம் மேற்சொன்ன குறைபாடு பெருமளவில் தீர்க்கப்பட்டுள்ளது. இதுபோன்றே 1972–73-ல் ஒவ்வொரு துணை நிலையத்துக்கும் அனுமதிக்கப்பட்ட செலவு வரம்பான ரூ. 600 என்பது 1974–75 ஆம் ஆண்டில் ரூ. 800 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

முன்னரே குறிப்பிட்டவாறு இந்த தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் பயனுள்ள பணியாற்றி வந்துள்ளபோதிலும் கூட, அவை பெரும் பரப்பளவிலும், அதிக மக்கள் தொகையினருக்குப் பயன்படும் வகையில் பணிபுரிய வேண்டியுள்ளதால் அவை முழுமையான அளவில் செயல்பட இயலாமல் உள்ளன. தொடக்கத்தில் கொண்டிருந்த கருத்துப்படி தொடக்க நல்வாழ்வு நிலையம் ஒன்று சுமார் 40,000 முதல் 60,000 வரையிலான மக்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டும். ஆனால் நடைமுறையில் ஒவ்வொரு தொடக்க சுகாதார நிலையமும் 80,000-லிருந்து ஒரு இலட்சம் வரையுள்ள ஜனத் தொகையை கவனிக்க வேண்டியுள்ளது. முற்றிலும் இயலாத காரணத்தால் ஒரு தொடக்க நல்வாழ்வு நிலையம், தொலை தூரப் பகுதிகளில் பரவிக் கிடக்கின்ற பெருமளவு மக்களுக்குப் பணி புரிய இயலாதுள்ளது. இந்த நிலைமையின் கடுமையைத் தணிக்கும்பொருட்டு, அப்பகுதியில் வாழ்கின்ற பெருமளவு மக்கட் பிரிவினர்க்கு மருத்துவ-நல்வாழ்வு வசதிகள் கிடைப்பதற்காக (ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும்) கூடுதலாக இன்னொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்தை நிறுவுவதற்கு அனுமதியளிக்குமாறு மாநில அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு எழுதியுள்ளது. ஆனால், மத்திய அரசு மாநில அரசின் இந்த வேண்டுகோளை ஏற்க இயலாதென்று தெரிவித்துள்ளது. மற்றவற்றோடு ஒப்பிட, பெருமளவு மக்கள் தொகையும், மிகப் பின்தங்கிய பகுதிகளும் கொண்டுள்ள ஊராட்சி ஒன்றியங்களிலாகிலும் கூடுதலாக இன்னொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்தை நிறுவ வேண்டியது அவசியமென நாம் கருதுகிறோம்.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திலும் தற்போது இரண்டு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். மருத்துவ அதிகாரிகள் கிராமப் பகுதிகளை அடிக்கடி நேரில் சென்று பார்வையிடவும், கூடுதலாகின்ற பணிச் சுமையைச் சரிவாக் கவனிக்கவும் அவர்கட்கு வசதியளிக்கும் பொருட்டு, தொடக்க

[1975 மார்ச் 27

நல்வாழ்வு நிலையங்களில் மூன்றாவது மருத்துவ அதிகாரியை நியமிக்க அரசு கருதுகிறது. தொடக்கத்தில், மிக அதிக அளவு மக்கள் தொகையுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் 100-ல் இவர்கள் நியமிக்கப்படுவர்.

(b) **தாய்-சேய் நலப் பணிகள்.**—தாய்-சேய் நலப் பணிகளில் நல்ல உடல் நலன் பெற்ற தாய்க்கு உடல் நலன் பெற்ற குழந்தை பிறப்பதை உறுதிப்படுத்தவும், அதன்பின் தாய்-சேய் நலத்தைப் பேணிப் பாதுகாக்கவும் முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. தற்போது இதற்காக தாய்மார்களுக்கு பேறுகாலத்திற்கு முந்திய கவனிப்பு அளிக்கப்படுகிறது. இந்தப் பதிவுப் பணி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மகப்பேறு நிலையங்கள் ஆகியவற்றைச் சேர்ந்த மகப்பேறு உதவியாளர்கள்/துணைச் செவிலியர்-மருத்துவச்சியர்களால் செய்யப்படுகிறது.

பேறு காலத் தாய்மார் ஒவ்வொருவருக்கும், அவரிடத்தில் அல்லது கருப்பையில் சிசு வளர்ச்சி நிலையில் ஏதேனும் கோளாறு இருக்கிறதா என்று கண்டுபிடிப்பதற்காக மருத்துவச் சோதனை செய்யப்படுகிறது. பேறு காலத் தாய்மாரிடம் இரத்த சோகை, ரத்தத் திரிபு நோய், சத்துக் குறைவு உள்ளவர்கள் இருக்கின்றார்களா என்றறிவதற்குச் சிறப்பான முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இரத்த சோகை உள்ள தாய்மாருக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, அதைக் கட்டுப்படுத்த எடுத்துக் கொள்ள வேண்டிய உணவு குறித்து அவருக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. குழந்தைக்கு உணவளித்தல், நோய்த் தடுப்பின் பொருட்டு குறித்த காலங்களில் செய்ய வேண்டிய செயல்கள் குழந்தைப் பருவநோய்கள், குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் ஆகியவை குறித்தும் அவர்களுக்கு அறிவுரை அளிக்கப்படுகிறது. துணைச் செவிலியர்–மருத்துவச்சியர் வீடுகட்குச் சென்று பிறந்த பச்சிளங்குழவிகளின் நலனைக் கவனிக்கின்றனர். சுகாதாரப் பார்வையாளர், துணைச் செவிலியர்–மருத்துவச்சியர் பணியை மேற்பார்வையிடுவதோடு, குழந்தை நலன், பள்ளி செல்லும் வயதடையாச் சிறுர்கள் நலன் மற்றும் பள்ளிச் சுகாதார திட்டம் குடும்ப நலத் திட்டம் ஆகிய திட்டங்களுக்குப் பொறுப்பு வகித்து அவற்றைச் செயற்படுத்துகிறார்.

[1975 மார்ச் 27

தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி, மகப்பேறு நிலையங்களைத் திறந்து பேணி வருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். தற்போது மக்கள் தொகையில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் வீதம் மகப்பேறு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஊராட்சி ஒன்றியக் குழு வைத்து வரும் நிலையங்களில், தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மூன்று துணை நிலையங்கள் அவற்றுக்கு ஆகும் தொடரினச் செலவில் மூன்றிலிரு பாகம் மானியமாக அரசிடமிருந்து பெறுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களினால் நடத்தப்பட்டு வரும் பிற பேறு கால—குழந்தை நல நிலையங்கள், குடும்ப நலத் திட்டத்தின் கீழ் 100 சதவீத மத்திய உதவி பெறுகின்றன.

நகராட்சிகளில் உள்ள மகப்பேறு இல்லங்களும் மகப்பேறு நிலையங்களும் தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் 25 சதவீதத்தை அரசிடமிருந்து மானியமாகப் பெறுகின்றன.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நடத்தி வரும் மகப்பேறு நிலையங்களுடன், அரசு, மகப்பேறு—குழந்தை நல நிலையங்களை அமைத்துள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதிகளாக தொலை தூரத்தில் உள்ள 95 கிராமங்களில் 1—1—1974 ஆம் நாளன்றுள்ளவாறு மாநிலத்தில் மொத்தம் 3,858 மகப்பேறு நிலையங்கள் உள்ளன.

தொண்டைப்புண்-கக்குவான்-இசிவு நோய்த் தடுப்புத் திட்டம் குழந்தைகளின் நலனுக்காக தொடக்க உடல் நல நிலையங்கள் மூலமாக 1964 ஆம் ஆண்டில் தொடங்கி நீடிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 வயதுக்குக் குறைவாக உள்ள குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசி போடப்படுகிறது. 1964-ல் இத்திட்டம் 164 தொடக்க உடல்நல நிலையங்களில் கொண்டு வரப்பட்டது. தற்பொழுது, இத்திட்டம் தொடக்க உடல்நல நிலையங்கள் அனைத்திலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளின் நலனுக்காக நடப்பாண்டில் 20 தொடக்க உடல்நல நிலையங்களில் மூவகை நோய்த் தடுப்பு சிறப்புத் திட்டம் அண்மையில் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்துவதற்காக

20 தொடக்க உடல்நல நிலையங்கள் ஒவ்வொன்றிலும் சுகாதாரப் பார்வையாளர் ஒருவரும், மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 13 பொதுச் சுகாதார செவிலியர்களும் கூடுதலாக நியமிக்கப் பட்டுள்ளனர். 1975–76-ல் இத்திட்டத்தை மேலும் 20 தொடக்க உடல்நல நிலையங்களுக்கு நீட்டிக்கக் கருதப்பட்டுள்ளது.

II. சத்துணவு திட்டத்தில் காணப்படும் முன்னேற்றம்

சத்துக் குறைவும், அதன் காரணமாக நாட்டு மக்களது வாழ்க்கையும் வளர்ச்சியும் பாதிக்கப்படுவது பற்றி பல விவாதங்களும் உரையாடல்களும் உலக நாடுகளில் நடைபெறுவதை மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் அறிவீர்கள். உலகத்திலுள்ள சத்துணவு வல்லுநர்களும், திட்ட அமைப்பாளர் களும் இப்பிரச்சினை குறித்து ஆய்வு செய்து அதனைத் தீர்ப்பதற்கான வகைகளைக் கண்டறிவதில் மும்முரமாக ஈடுபட்டுள்ள அதே நேரத்தில், நாமும், இக்குறையைப் போக்குவதில் தொடர்ந்து முயன்று வருகிறோம்.

கிராம வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் ஒத்துழைப்புடன் செய்முறைச் சத்துணவுத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கான அடிப்படைப் புள்ளிவிவரங்களைக் கொடுப்பதற்காக, 1974–75 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிட்டுள்ள வளர்ச்சி வட்டாரங்களில் சத்துணவு—உணவு முறை ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன :—

மாவட்டம்	வளர்ச்சி வட்டாரம்	கிராமங்கள்
தருமபுரி	பாலக்கோடு (Palacode)	தத்தம்பட்டி
திருச்சி	திருவெறும்பூர்	நாவல்பட்டு
கன்னியாகுமரி	தக்கலை	கூத்தநல்லூர்

செங்கற்பட்டு மாவட்டம், வில்லிவாக்கம் வளர்ச்சி வட்டாரத்தில் உள்ள போரூர் கிராமத்தில் ஆண்டிற்கு இருமுறை ஆய்வுகள் நடத்தப்பட்டன. இதுவரை, இம்மாநிலத்தில் கன்னியாகுமரி, மதுரை, திருச்சிராப்பள்ளி, தருமபுரி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு வளர்ச்சி

வட்டாரங்களிலும் பிற மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு வளர்ச்சி வட்டாரத்திலும் ஆய்வு மேற்கொள்ளப் பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாண்டில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் 24 சுகாதார ஆய்வாளர்களும், 25 சுகாதாரப் பார்வையாளர்களும் மத்தியச் சத்துணவுக் கழகத்தில் நடத்தப்படும் அறிவியல் சத்துணவுத் துறையில் பணியிருப்புப் பயிற்சி பெற்றனர். விரிவுரைகள் வழங்கப்படுவதுடன், இப்பயிற்சியில் கட்புல விளக்கங்கள், இடங்களுக்கு நேரில் சென்று பார்த்தல், திரைப்படக் காட்சிகள் ஆகியவையும் அடங்கும். அடையாறு, சுகாதாரத் தொண்டு நிறுவனத்தில் உணவு முறைப் பயிற்சி பெற்று வரும் மாணவர்களுக்குச் சத்துணவுச் சிறப்பு வகுப்புகள் நடத்தப் பட்டன.

1975–76 ஆம் ஆண்டிலும் இதுபோன்ற பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.

கூடுதல் உணவளிப்புத் திட்டம்.—இத்திட்டம் 'யூனிசெஃப்' நிறுவன உதவியுடன் 1950-ல் தொடங்கப்பட்டது. பள்ளிச் செல்லும் பருவம் எடாத சிறார்கள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். 1970 ஆம் ஆண்டிலிருந்து இத்திட்டம் 'கேர்' நிறுவன உதவியுடன் செயற்படுத்தப்படுகிறது. இந்நிறுவனம் உணவுப் பொருட்களை நன்கொடையாக வழங்குகிறது. தொடக்கச் சுகாதார நிலையங்கள், நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றில் தற்போது 2,440 உணவளிப்பு நிலையங்கள் உள்ளன. நாள்தோறும் சுமார் 98,000 பேர் பயனடைந்து வருகின்றனர். நடப்பாண்டில் சுமார் ரூ. 78 லட்சம் மதிப்புள்ள 5,65,500 பவுண்டு உணவுப் பொருட்கள் பெறப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

1975–76 ஆம் ஆண்டிலும் அதனை அடுத்து வரும் ஆண்டுகளிலும் 'கேர்' நிறுவன உதவியை நாம் தொடர்ந்து பெறுவதற்கான அறிகுறிகள் உள்ளன.

[1975 மார்ச் 27

(III) தொற்று நோய்த் தடுப்பும் கட்டுப்பாடும்

(அ) காலரா.—இந்நாட்டில் காலரா தோன்றிப் பரவுகிற மாநிலங்களில் நமது மாநிலம் ஒன்று எனக் கருதப்படுகிறது. நமது மாநிலத்தில் கீழ்க்காணும் 4 மாவட்டங்கள் காலரா தோன்றிப் பரவுகின்ற மாவட்டங்களாகும்.—

(1) திருச்சிராப்பள்ளி.

(2) கோயம்புத்தூர்

(3) வட ஆர்க்காடு.

(4) தென்னார்க்காடு.

காலரா கட்டுப்பாட்டுத்திட்டத்தின்கீழ், கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டு இயல் ஊர்திப் பிரிவுகள் 7, கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுப்பிரிவுகள் 3, தஞ்சாவூர், வட ஆர்க்காடு, திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் காலரா ஒழிப்புக்குழு ஒன்று ஆகியன இயங்கி வருதல் அதன் சிறப்பியல்பு ஆகும். 1975-76 ஆம் ஆண்டில் தென்னார்க்காடு மாவட்டத்திற்கு கூடுதலாக காலரா ஒழிப்புக் குழு வொன்று அமைக்கப்படவிருக்கிறது. இவைதவிர, பாதிக்கப்பட்ட பகுதிகளில் சென்று பணிபுரியப் பயன்படுத்திக் கொள்வதற்காக நம்மிடம் 64 இன்ஸ்பெக்டர்கள் உள்ளனர். கொள்ளை நோய் தோன்றிப்பரவும் இந்த நான்கு மாவட்டங்களிலும் காலரா ஒழிப்புப்பணி சிறப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கொள்ளை நோய் குறித்த தகவலைச் சேகரிப்பதற்காகவும் குடிநீரில் குளோரினைக் கலப்பதற்காகவும், உயிரியல் ஆய்வின் பொருட்டு மாதிரிகள் எடுப்பதற்காகவும் இப் இணைந்த கொள்ளை நோயியல் பிரிவு ஒன்றும் உள்ளது அதனி பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தலைமையிடத்துடன் டம், இயல் ஆய்வுக்கூட ஊர்தியொன்றும் உள்ளது. கொள்ளை நோய் திடீரெனத் தோன்றிப் பரவும் காலங்களில் ஆய்வு—கட்டுப்பாட்டுப்பணியைச் செய்வதற்காக இந்த ஊர்தி பயன் படுத்தப்படுகிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் கொள்ளை நோய் குறித்த சிகிச்சைகள் அளிக்கவும், கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை விரிவுபடுத்தவுமென காலரா ஒழிப்புக் குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளன.

1975 மார்ச் 27]

இக்குழுவால் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டவர்கள் எண்ணிக்கை விவரம் வருமாறு:—

1972—14,69,731

1973—14,30,616

1974—17,25,434

1975— 65,221

(8-2-75 வரை)

(b) பெரியம்மை ஒழிப்புத்திட்டம்:

பெரியம்மை ஒழிப்புத்திட்டம் 1963-64 ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் தொடங்கப்பட்டது. பெரியம்மை பரவுவதைத் தடுப்பதே இத்திட்டத்தின் குறிக்கோளாகும். (a) குழந்தைகளுக்கு முறையான தொடக்க அம்மைப்பால் வைத்தும், மக்களுக்கு மறு அம்மைப்பால் வைத்தும், (இ) மக்கட் சமுதாயத்தில் பெரியம்மை கண்டுள்ளவர்களைத் தீவிரமாகவும், உரிய தருணத்திலும் கண்டுபிடித்துத் தனிமைப்படுத்தி நோய்பரவாமல் தடுப்பதற்குரிய பிற நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் பெரியம்மை பரவுவது தடுக்கப்படும். நிலைத்த, திறமையான பணியின் விளைவாக நமது மாநிலம் பெரியம்மை நோயினின்றும் விடுபட்ட மாநிலம் என்றறிவிக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, 1963 ஆம் ஆண்டில் 9,241 பேருக்குப் பெரியம்மை நோய் கண்டது, 2,559 பேர் அதனால் மாண்டனர், அதற்கெதிராக, 1974-75 ஆம் ஆண்டில் இங்கும் அங்குமாக 15 பேருக்குமட்டுமே பெரியம்மை நோய் கண்டது, 4 பேர் இந்நோயால் மாண்டனர் என்னும் புள்ளி விவரத்தைக் கொண்டுபார்த்தால் மேற்சொன்ன உண்மை புலப்படும். இந்த 15 பேருக்குப் பெரியம்மை நோய் கண்டது கூட, அந்நோய் பீகார் மாநிலத்திலிருந்து தொற்றி வந்ததே காரணமாகும். உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடனும் ஒத்துழைப்புடனும் 1973-74 ஆம் ஆண்டில், பெரியம்மை இங்கு பரவியுள்ளதா எனக் கண்டறியும் பொருட்டு, பெரியம்மை கண்டவர்கள் பற்றி முனைப்பான, சோதனை எல்லா மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனைகளின் விளைவாக இம்மாநிலம் பெரியம்மை நோயற்ற மாநிலம் என்று தெரிய வந்தது.

[1975 மார்ச் 27]

1975-76 ஆம் ஆண்டிலும்கூட, எல்லா மாவட்டங்களிலும் ஒவ்வொரு 2 மாதங்கட்கும் ஒருமுறை மும்முரச் சோதனைகள் நடத்தப்பெறும். உலக சுகாதார நிறுவனத்தின் உதவியுடன் பெரியம்மை ஆய்வுகுறித்த சிறப்புக்குழுவொன்றும் செயல்பட்டு வருகிறது. பெரியம்மை கண்டுள்ளது என ஐயுறும் தகவல்கள் கிடைக்கும் போதெல்லாம் இக்குழு மாவட்டங்களுக்கு விரைகின்றது. 1974-75 ஆம் ஆண்டில் (1974 நவம்பர் வரையில்) 11,36,265 குழந்தைகட்கு தொடக்க அம்மைப்பால் வைக்கப்பட்டது, 50,27,708 பேருக்கு மறு அம்மைப்பால் வைக்கப்பட்டது. இந்திய அரசு விடுத்த வேண்டுகோளின் பேரில், பீகாரிலும், உ.பி.-யிலும் பெரியம்மை ஒழிப்பு குறித்த நடவடிக்கைகளுக்காக பொது சுகாதாரம் குடும்பநலத்துறை உதவி இயக்குநர்கள் இருவர், சுகாதார அதிகாரி ஒருவர் ஆகியோர், கொள்ளை நோயியல் குறித்த சிறப்பு வல்லுநர்களாகச் சென்று பணிபுரிய முகமையில் அனுப்பப்பட்டனர்.

(c) பிளேக்:

கடந்த காலத்தில் இது ஒரு பெரிய பிரச்சினையாக இருந்தது. மும்முர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பயனாக, இம்மாநிலத்தில் 1964 ஆம் ஆண்டிற்குப் பிறகு பிளேக் நோய் அறவே ஒழிக்கப்பட்டது என்றே கூறலாம். எனினும், வட ஆற்காடு, கோயம்புத்தூர், தருமபுரி, நீலகிரி மாவட்டங்களில் நோய் பரவும் பகுதிகளில் வழக்கமான பிளேக் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(d) மலேரியா:

மாநிலத் தலைநகரான சென்னையில், மலேரியா நோய்கள், கொசுக்களால் பரவும் நோய்கள் கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும், கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்தும் பணியை இக்கழகம் கவனித்து வருகிறது. அங்கு பயிற்சி, ஆய்வு, கொள்ளை நோயியல் ஆய்வு வசதிகள் உள்ளன. தஞ்சாவூரிலும் கோயம்புத்தூரிலும் வட்டார நோய்க்கிருமி கட்டுப்பாட்டு அமைப்புகள் இரண்டு உள்ளன. இந்த அமைப்புகளில் பயிற்சி, ஆய்வு, சோதனை வசதிகள் உள்ளன.

[1975 மார்ச் 27

இம்மாநிலம் 1958-59 ஆம் ஆண்டிலிருந்து மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. இதற்காக இம் மாநிலம் 31.45 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. இத்திட்டம் நோய் பீடிக்கப்பட்ட நிலை, பராமரிப்பு நிலை, ஒருங்கிணைப்பு நிலை என்ற மூன்று நிலைகளில் செயல் படுத்தப்பட்டது. மலேரியா நோய் பீடிக்கப்பட்டவர்களைக் கண்டுபிடித்து அவர்களுக்கு முழு அளவில் சிகிச்சையளிக்கப்பட்டது. பராமரிப்பு நிலையில் 28.40 பிரிவுகளில் மலேரியா அறவே ஒழிக்கப்பட்டது. வெளியூர்களிலிருந்து இங்கு பரவிய அல்லது உள்ளூரிலேயே நிலவிய மலேரியா நோயைக் கண்டு பிடிக்க நுண்ணாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டன. மலேரியா நோய்க்கிருமியை ஒழிப்பதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தற்போது கடுமையான நிலையை கடந்து வருகிறது. தொழில் நுட்ப, நடைமுறைக் காரணங்களினால் மலேரியா நோய் கண்டுள்ளவர்களின் எண்ணிக்கை கணிசமான அளவுக்கு உயர்ந்துள்ளது. 1974 ஆம் ஆண்டில் இதுவரை சேலம், தருமபுரி, வட ஆற்காடு, இராமநாத புரம் மாவட்டங்களிலும், சேலம், ராசிபுரம், ஈரோடு, வேலூர், சென்னைமாநகரம் ஆகிய நகரங்களிலும் சுமார் 19,953 பேர் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட் டது. இவற்றில் பராமரிப்பு நிலையில் 17,948 பேர் நோய் கண்டிருப்பதாக பதிவு ஆகியிருந்தது. இவற்றில் பெரும்பகுதி இராமநாதபுரம், வட ஆர்க்காடு, தருமபுரி மாவட்டங்களில் நோய் பரவும் பிரச்சினை மிகுந்த பகுதிகளில் இருந்துதான் அதிக அளவில் நோய் கண்டிருந்தது. போதிய போக்குவரத்து வசதி யின்மை, நிலப்பகுதியின் தனித்தன்மை, வீடுகள் மிகவும் பரவ லாக அமைந்திருந்தல், மக்களின் நடமாட்டம் ஆகிய காரணங் களினால் இப்பகுதிகளில் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுப்பது மிகவும் சிக்கலாக உள்ளது. நோயைக் கட்டுப்படுத்த பணியாளர்களை நியமிப்பதன் மூலமும், மருந்துகள் தெளிப்பதன் மூலமும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இப்பிரச்சினை கள் குறித்து இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நமது அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தொழில் நுட்பப் பிரச்சினை கள் குறித்து ஆய்வுசெய்ய இந்திய அரசு தனது வல்லுநர்களை அனுப்ப உறுதியளித்துள்ளது.

ஒருங்கிணைப்பு நிலையின் கீழ் ஏற்றுக் கொண்ட செலவினம் போக மலேரியா ஒழிப்புத் திட்டப் பகுதிகளில் ஆகும் மொத்தச்

1975 மார்ச் 27]

செலவையும் இந்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. தலைமையிடத்திலும், மண்டல நிலையிலும் பணியாற்றும் மேற்பார்வை பணியாளர்களைப் பொறுத்தவரை, மொத்த செலவில் 25 சதவிதத்தை இந்திய அரசு ஏற்றுக்கொள்கிறது. எஞ்சிய 75 சதவிதத்தை மாநில அரசு ஏற்றுக்கொள்கிறது.

பராமரிப்பு நிலையின் கீழுள்ள பணிகளில் அடிப்படை உடல் நலப் பணிகள் 1-4-1969-லிருந்து ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதில் 353 ஊராட்சி ஒன்றியங்கள் வருகின்றன. அடிப்படை உடல்நலப் பணிகளில் உள்ள பணியாளர் அமைப்பு கீழே கொடுக்கப் பட்டுள்ளது:—

10,000 மக்கட் தொகைக்கு ஓர் அடிப்படை உடல்நலப் பணியாளர்.

ஒவ்வொரு 4 அடிப்படை உடல்நலப் பணியாளர்களுக்கும் ஓர் அடிப்படை உடல்நல ஆய்வாளர்.

ஒவ்வாரு ஆரம்ப சுகாதார நல்வாழ்வு நிலையத்திற்கும் ஓர் ஆய்வுக்கூட உதவியாளர்.

அடிப்படை உடல்நலப் பணியாளர்கள் பலநோக்குப் பணியாளர்களாவர். பராமரிப்பு நிலைப் பகுதியில் நிறைவேற்றப்பட்டு வரும் மலேரியா ஒழிப்பு, பெரியம்மை ஒழிப்புத் திட்டங்களுக்குரிய நுண்ணாய்வுப் பணிகளுக்கு உதவி புரிகின்றனர்.

அடிப்படை உடல்நலப் பணி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் மத்திய அரசால் தொடங்கப்பட்ட திட்டமாகும். ஆனால் ஐந்தாவது திட்டத்தில் இச்செலவை மாநில அரசு ஏற்க வேண்டும்.

3,199 அடிப்படை உடல் நல ஊழியர்களும், 738 அடிப்படை உடல்நல ஆய்வாளர்களும், மலேரியா நோய் ஆய்வாளர்களும், **353** ஆய்வுக்கூட உதவியாளர்களும் அடிப்படை உடல்நலப் பணியின் கீழ் பணியாற்றுகின்றனர்.

நகர்ப்புற மலேரியாத் திட்டம்:

1972-73-ல் ஒப்புதல் வழங்கப்பெற்ற இந்திய அரசு நகர்ப்புற மலேரியாத் திட்டத்தை சேலம் ராசிபுரம், தூத்துக்குடி, சென்னை ஆகிய நான்கு உள்ளாட்சி மன்றங்கள் நிறைவேற்றி வருகின்றன.

இளம்பிள்ளை பேரூராட்சிக்கான இத்திட்டம் துறைத் திட்டமாக நிறைவேற்ற எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் ஐந்தாவது திட்டக் காலத்திலும் தொடர்ந்து நிறைவேற்றப்படும்.

சென்னை மாநகர் நீங்கலாக, ஏற்றுக்கொண்ட செலவு போக நடைமுறைச் செலவுகளைப் பொறுத்தவரை இத்திட்டத்தைச் செயல்படுத்துகின்ற உள்ளாட்சி மன்றங்கள் ஏற்கும் செலவு முழுவதையும் இந்திய அரசு ஈடு செய்யும்.

சென்னை மாநகரம் பலதிறப்பட்ட மக்கள் வாழும் நகரமாயிருப்பதால், இந்திய அரசு பொருள் உதவியை மட்டும் அளிக்கிறது. இத்திட்டங்களுக்குத் தேவைப்படும் கருவிகளும், சாதனங்களும் இந்திய அரசால் இலவசமாக வழங்கப்படும்.

(f) யானைக்கால் நோய்:

நமது மாநிலத்தில் யானைக்கால் நோய் கண்டுள்ள பகுதிகளில் 1.3 கோடி மக்கள் வசித்து வருகிறார்கள்.

செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், வடார்க்காடு மாவட்டங்களில் யானைக்கால் நோய் ஒழிப்பு தேசியப் பிரிவுகள் நான்குடன் 1957-58-ல் தொடங்கப்பட்ட யானைக்கால் நோய் ஒழிப்பு தேசியத் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு பிரிவிலும் யானைக்கால் நோய் ஒழிப்பு அதிகாரி ஒருவர், கிருமியியல் உதவியாளர் ஒருவர், உடல்நல ஆய்வாளர்கள் அறுவர், களப்பணி உதவியாளர்கள் அறுவர், ஆய்வுக்கூட உதவியாளர்கள் நால்வர், 60 மஸ்தூர்கள் ஆகியோர் உள்ளனர். இப்பிரிவு, கூட்டுப் புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இப்பிரிவுகளுக்கு கூட்டுப்புழு எண்ணெய் மத்திய அரசு உதவியாக வழங்கப்படுகிறது. அவற்றிற்கான நடைமுறைச் செலவு மாநில அரசு நிதிகளிலிருந்து செய்யப்படுகிறது

மேலும் பல பகுதிகளை இத்திட்டத்தின்கீழ்க் கொண்டு வருவதற்காக இத்திட்டத்தைச் சீரமைக்கும் பொருட்டு, தற்போதுள்ள நான்கு பிரிவுகளை விரிவுபடுத்துவதுடன் நான்காவது திட்டக் காலத்தில் புதியதாக எட்டுப் பிரிவுகள் தொடங்கப்பட்டன. இத்திட்டத்தின்கீழ் 4.5 மில்லியன் மக்கள் பயனடைகிறார்கள்.

1975 மார்ச் 27]

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், திருத்தி அமைக்கப் பட்ட பிரிவுகளுக்கான நடைமுறைச் செலவுக்கும், கருவிகள், சாதனங்களுக்கும் முழு மத்திய நிதி உதவி அளிக்கப்பட்டது. ஆனால், ஐந்தாவது திட்டக் காலத்தில் கருவிகளுக்கும் சாதனங்களுக்கும் மட்டுமே மத்திய நிதி உதவி கிடைக்கும். நடைமுறைச் செலவை மாநில அரசு நிதிகளிலிருந்து செலவிட வேண்டும்.

மேற்சொன்ன 12 கட்டுப்பாட்டுப் பிரிவுகளுடன், ஆய்வுப் பிரிவு ஒன்று, கட்டுப்பாட்டுப் பிரிவுகள் நான்கு, யானைக்கால் நோய் ஒழிப்பு மருந்தகங்கள் 81 ஆகியவற்றை ஐந்தாவது திட்டக் காலத்தில் படிப்படியாக ஏற்படுத்த இந்திய அரசு கருதுகிறது இது குறித்து இறுதி அனுமதி இந்திய அரசிடமிருந்து எதிர் பார்க்கப்படுகிறது.

கட்டுப்பாட்டு பிரிவுகளுக்கும் நகராட்சிகள் போன்ற அமைப்பு களுக்குமிடையே ஏற்படும் தடைகளை நீக்கி, பணி செவ்வையாக நடைபெற இயலும் பொருட்டு கடலூர், சிதம்பரம், விழுப்புரம் கும்பகோணம், நாகபட்டிணம், தஞ்சாவூர், மன்னார்குடி, திருவாரூர், புதுக்கோட்டை ஆகிய இடங்களில் ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்கள் காலாண்டுக்கு ஒரு முறை கூடி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும்.

(g) **உதவி மானியத் திட்டங்கள்**

யானைக்கால் நோய்த் தடுப்புத் தேசியத் திட்டம் மக்கள் நல் வாழ்வுத் துறையினால் செயற்படுத்தப்பட்டு வருகிறது. யானைக் கால் ஒழிப்பு, மலேரியா ஒழிப்புத் திட்டங்களுக்கு உள்ளாட்சி மன்றங்களும் பொறுப்பு ஏற்றுள்ளன. இத்திட்டங்களுக்காகும் செலவில் ஒரு பகுதியை மாநில அரசு கொடுக்கிறது. இதுவரையில் 171 உள்ளாட்சி மன்றங்கள் இத்திட்டத்தைச் செயற் படுத்தி வருகின்றன. 1975-76-ல் இன்னும் பல உள்ளாட்சி மன்றங்கள் இத்திட்டத்தைச் செயற்படுத்தும் பணியை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூரிலும் கோயம்புத் தூரிலும் அமைந்துள்ள இரு வட்டார அமைப்புகள் இத்திட்டங்கள் செயற்படுத்தப்படுவது குறித்துப் பார்வையிட்டு இதில் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து மதிப்பிட்டு வருகின்றன.

[1975 மார்ச் 27

(h) சரும நோய் (Yaws)

இந்நோய் "ட்ரபோனிமா பெர்ட்டினுயு" (Treponema Pertenue) என்னும் ஒருவகை நுண் கிருமியினால் ஏற்படுகிற மேக நோயல்லாத ஒருவகைக் கடுமையான தொற்று நோயாகும். இக்கிருமிகள் மேகநோய் உண்டாக்கும் கிருமிகளை போன்றவை யாகும். மேகநோயைப் போல் அல்லாமல், இச்சருமநோய், உடலுறவு அல்லாத பிறவகை தொடர்பால் பரவுகிறது. இந்நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு நேரடியாகவும் ஈக்களின் மூலமும் பரவுகிறது. ஒருவருக்குக் காயத்தினால் ஏற்பட்டுள்ள இரணம், அல்லது பரு, சிழ்க்கட்டி, கொப்புளம் போன்று சருமத்தில் ஏற்படும் சிறு குறைபாடுகள் இக்கிருமிகள் வளர்வதற்கு இடமளிக்கின்றன.. இவற்றின் மூலம் இதுவரையில் சரும நோய் கண்டிராதவருக்கு புண் ஏற்பட்டிருக்கிறது. சுற்றுப்புறத் துப்புரவின்மை, உடல் ஆரோக்கிய மின்மை ஆகியவையும் இச் சரும நோய் பரவுவதற்குக் காரணமாக உள்ளன. இச் சரும நோய், சமூகப் பொருளாதார வகையில் பிற்பட்ட மக்களிடையே பெரிதும் பரவலாகக் காணப்பட்டது. 1956 ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் மாவட்டம் அவனாசி வட்டத்தில் அரிசன மக்கள் வாழும் இடங்களில் இச் சருமநோய் பரவியிருந்தது பற்றிய ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இதனால், அவனாசி வட்டத்தில் 1959-ல் நோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம் தொடங்கப்பட்டது. இச் சருமநோய் ஒழிப்பு பிரிவு ஊத்துக்குழியில் ஒன்றும் பெருந்துறையில் ஒன்றுமாக இரு பிரிவுகளில், 1960 ஆம் ஆண்டு இடைப் பகுதியிலிருந்து 1961 மே வரையில் இச் சருமநோய் ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்நோயை ஒழிப்பதற்கு ரூ. 8 லட்சம் செலவிலான ஒரு திட்டத்திற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. கோயம்புத்தூர், பெருந்துறை, பொள்ளாச்சி, கோபிசெட்டிப்பாளையம், சத்திய மங்கலம், பவானி, உடுமலைப்பேட்டை, தாராபுரம் ஆகிய இடங்களைத் தலைமையிடமாகக் கொண்ட எட்டு பிரிவுகளில் 1-6-61 லிருந்து சரும நோய் ஒழிப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மேற்சொன்ன பிரிவுகள் கண்டுபிடித்த சருமநோயாளிகள் ஆங்காங்கே உடனுக்குடன் சிகிச்சை பெற்றனர். 1967 ஆம் ஆண்டின் இடையில் கோயம்புத்தூர் மாவட்டத்தில் பணி முடிக்கப்பட்டது. எனவே, இப்பிரிவுகளின் எண்ணிக்கை மூன்றாகக் குறைக்கப்பட்டு அனித்தேயுள்ள மதுரை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களுக்கு மாற்றப்பட்டது.

1975 மார்ச் 27]

பெரியகுளம், பழனி, கரூர் ஆகிய இடங்களில் 1966 ஆம் ஆண்டி லிருந்து செயல் பட்டுவரும் மூன்று பிரிவுகள், திண்டுக்கல்லில் உள்ள தனிச் சுகாதார அதிகாரியின் கட்டளைப்படி மூன்று சுகாதார ஆய்வாளர்களால் நடத்தப் பட்டுவந்தன. தருமபுரியில் 1971 ஆம் ஆண்டில் புதிய பிரிவு ஒன்று தொடங்கப்பட்டது. சேலம், தென் ஆர்க்காடு மாவட்டங்களில் செய்த ஆய்வின் மூலம் இச் சருமநோய் அங்கு பாவியிருப்பது தெரிய வந்தது. இந் நோயைக் கட்டுப்படுத்த மேலும் இரு பிரிவுகள் ஏற்படுத்தப் பட்டன. இப்பிரிவுகள் கடலூரிலும், கொல்லி மலையிலும் 1974 சூன் முதற்கொண்டு செயல்பட்டு வருகின்றன. 1974, டிசம்பர் வரையில் 764 கிராமங்களில் ஆய்வு செய்யப்பட்டது, 220 பேர் களுக்கு நோய் காணப்பட்டதாகப் பதிவு செய்யப்பட்டது. 90 பேருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது.

(i) நரம்புச் சிலந்தி நோய் (Guinea worm)

இம்மாநிலத்தில் இந்நோய் நடைக் கிணறு, குளங்கள் முதலிய வற்றிலிருந்து, பரவுகிறது. இந் நோய் வராமல் கட்டுப்படுத்து வதற்கு நரம்புச் சிலந்தி ஒழிப்புத் திட்டம் செயற்பட்டு, கன்னியா குமரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாக ஏனைய மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. நரம்பு சிலந்தி நோய் பரவிய பகுதிகள் ஆறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவும் பூச்சி இயல் உதவியாளர், சுகாதார ஆய்வாளர், களப்பணி உதவி யாளர்கள் ஏனைய துணைப் பணியாளர் ஆகியோரைக் கொண்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், நரம்புச் சிலந்தி கிராமங்களிலுள்ள குடிநீர் வாயில்களில் "சைக்லாப்ஸ்" நீர்க் நோயினை அறவே ஒழிப்பதாகும். அதாவது நோய் கண்டுள்ள கிருமிகளை அழிப்பதாகும். பத்து லட்சம் பாகம் நீரில் 5 பகுதி D.D.T. மருந்து என்ற அளவில். 50 சதவீதம் டி.டி.டி (D. P. T.). கரைச்சல், நீர் நிலைகளில் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு செய் தால் அந்நோய்க் கிருமிகள் முழுவதும் அழிக்கப்படுகின்றன அல்லது குறைந்த அளவு இருக்குமாறு செய்யப் படுகின்றன. இதனால் தொற்று நோய் பரவுவது தடுக்கப்படுகிறது. இதைத் தவிர, நரம்புச் சிலந்தி நோய் தாக்குண்ட நோயாளிகளுக்கு, 4 சதவீதம் கார்பாலிக் நீர்மத்தில் தோய்த்த பஞ்சினால், நோயினால் பாதிக்கப்பட்ட உடல் பகுதி சுத்தம் செய்யப்பட்டு துணியால் கட்டப்படுகின்றது. வலி தெரியாமல் இருப்பதற்காக,

'ஏபிசி' மாத்திரைகள் (A. P .C. Tablets) அவர்களுக்கு கொடுக்கப்படுகின்றன. நோய் மீண்டும் தொற்றுவதைத் தடுப்பதற்காக 'சல்பாடயசின்' மாத்திரைகள் (Sulphadiazine (Tablets கொடுக்கப்படுகின்றன.

நரம்புச் சிலந்தி நோய் ஒழிப்புத் திட்ட பணியாளர் மூலம் கிராமங்களில் சுகாதாரக் கல்வி அளிக்கப்பட்டு வருகின்றது. 1974ஆம் ஆண்டில், 148 நேர்வுகள் கண்டுபிடிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்பட்டது. 1975-76ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

(i) கருங்காய்ச்சல் (Kala-azar)

இந்நோய், தொடக்கத்தில் மாநிலத்திற்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்துவந்தது. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தை நிறைவேற்றும்போது டி.டி.டி. (DD. T.) மருந்து தெளிக்கப்பட்டமையால், மணல் ஈக்களின் அளவு வெகுவாகக் குறைக்கப்பட்டு, இந் நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் கட்டுப்படுத்திய நிலைக்கு வந்தபோது, டி.டி.டி. மருந்து தெளிப்பது நிறுத்தப்பட்டது. இதன் விளைவாக, கருங்காய்ச்சல் நோய் மீண்டும் பரவத் தொடங்கியது. கருங்காய்ச்சல் நோய் கட்டுப்பாட்டுத் திட்டம் இராமநாதபுரத்தில் ஒரு பிரிவோடு இயங்கி வருகிறது. இந்தப் பிரிவில் பூச்சி இயல் உதவியாளர் ஒருவர், சுகாதார ஆய்வாளர் மூவர், களப்பணி உதவியாளர் 15 பேர் ஆகியோர் அடங்கியுள்ளனர். இந்த பிரிவு இராமநாதபுரத்தில் நோய் கண்டுள்ள பகுதிகளில் ஆய்வு நடத்தி, கருங்காய்ச்சல் நோய் இருப்பதைக் கண்டுபிடித்து சிகிச்சை நடவடிக்கையை மேற்கொள்கின்றது. நோய் இருப்பதைக் கண்ணுற்றதன் பேரில் அந்நோயாளிகள் ஆரம்பச் சுகாதார நிலையம் அல்லது அருகேயுள்ள அரசு மருத்துவமனை ஆகியவற்றிற்கு அனுப்பப்படுகின்றனர். 1974ஆம் ஆண்டு டிசம்பர் வரையில் 2,478 கிராமங்கள் ஆய்வு செய்யப்பட்டன. நோயுற்றோர் 6 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர். 4,080 மணல் ஈக்கிருமிகள் சேகரிக்கப்பட்டன.

IV பிறப்பு, இறப்பு புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

பிறப்பு, இறப்பு பற்றிய புள்ளி விவரங்கள் சமுதாய நல்வாழ்வு நிலையைக் காட்டும் அடிப்படை அறிகுறிகளாகும். நீண்ட காலத்

திற்கு திட்டமிடப்படுவதற்கும், திட்டங்களை நிறைவேற்று வதற்கும், திட்டங்களின் முன்னேற்றங்களை மதிப்பிடுவதற்கும், முறையாகவும், உரிய நேரத்திலும் பிறப்பு இறப்புப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, ஒப்பிட்டுப் பார்ப்பது ஆகியவை அவசியமானதாகும். திட்ட வளர்ச்சிக்கு பிறப்பு இறப்பு பற்றிய சரியான புள்ளி விவரங்கள் இன்றியமையாதவையாகும். இவற்றை நோக்கங்களாகக் கொண்டு, நிர்வாகமும், கல்வியும் சம்பந்தப் பட்ட நடவடிக்கைகள் இம்மாநிலத்தில் மேற்கொள்ளப்பட் டுள்ளன. அத்தகைய முக்கிய நடவடிக்கைகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

(a) மாநிலத் தலைமையிடத்தில் இயந்திரம் மூலம் அட்டவணைப் படுத்தும் பிரிவை அமைத்தல்;

வட்டார நிலை அமைப்புகளை வலுப்படுத்தல்;

1961-ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்குப்படி ஒரு லட்சம் மக்கட் தொகைக்கு மேலுள்ள தற்போதைய மதுரை மாநகராட்சி உட்பட சென்னை மாநகராட்சியிலும், 8 பெரிய நகராட்சிகளிலும் பிறப்பு இறப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் அமைப்புகளை வலுப்படுத்தல்;

(b) மாதிரிகள் (sample) பதிவுத் திட்டத்தைச் செயல் படுத்தல்.

(c) மாதிரிப் (Model) பதிவுத் திட்டத்தைச் செயல் படுத்தல். மாதிரிகள் பதிவுத் திட்டம் பிறப்பு இறப்பு வீதத்தையும் மக்கட் தொகை பெருக்க வீதத்தையும் மதிப்பிடுவதற்கு உதவியாக உள்ளது. இறப்புகள் ஏற்பட்டதற்கான சந்தர்ப் பங்களையும் விவரங்களையும் அறிவதற்கு சவப் பரிசோதனை செய்வதன் மூலம் கிராமப் பகுதிகளில் இறப்பு வீத வகையைக் கண்டறிவதே மாதிரிப் பதிவுத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

நம் மாநிலத்தில் 1973 ஆம் ஆண்டின் இடையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்பு வீதம் தொகையில் 2,000-க்கு 234 ஆகவும், இறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 8.2 ஆகவும் இருந்தது. குழந்தை இறப்பு வீதம் உயிருடன் பிறந்த 1,000 குழந்தைகளுக்கு இறப்பு வீதம் 49.4 ஆக இருந்தது.

[1975 மார்ச் 27

V. பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு

(1) **வெளியூர்.**—பள்ளிக் குழந்தைகளை மருந்துவச் சோதனை செய்யும் திட்டம் ஒன்று 18 தொடக்கச் சுகாதார நிலையங்களில் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்படி தெரிவிக்கப்பட்ட இந்தத் தொடக்கச் சுகாதார நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 6—11 வயதுத் தொகுதியுள்ள பள்ளிக் குழந்தைகள் 2,000 பேரைச் சோதனை செய்கின்றனர். நோயுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த மருத்துவ அதிகாரிகள் மருந்துகளையும், தேவையான சத்து உணவையும் வழங்குகின்றனர். சிறப்பாகச் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிற குழந்தைகள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

கோயம்பத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் இரண்டு நகர்ப்புற மருத்துவப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு மருத்துவ அதிகாரியும் ஆண்டுதோறும் 10,000 குழந்தைகளைச் சோதனை செய்கின்றார். பிறகாப்பு நடவடிக்கைகளையும் அவர் எடுத்துக்கொள்கிறார்.

1973-74-ஆம் ஆண்டில், 56,670 குழந்தைகளுக்கு சோதனைகள் நடத்தப்பட்டன. 1974-75 ஆம் ஆண்டில் (30-9-1974 வரை) 35,274 பள்ளிக் குழந்தைகளுக்குச் சோதனைகள் நடத்தப்பட்டன.

1974-75-ஆம் ஆண்டில் இத்திட்டம் மேலும் 3 நகரங்களில் அதாவது காஞ்சிபுரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலும், 20 தொடக்கச் சுகாதார நிலையங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

1975-76-ஆம் ஆண்டில் இத்திட்டத்தை மேலும் 5 தொடக்கச் சுகாதார நிலையங்களில் விரிவுபடுத்த நாம் எண்ணியுள்ளோம்.

(2) **சென்னை மாநகர்.**—சென்னை மாநகரில் பள்ளி குழந்தைகளுக்கு பொது உடல் நலச் சோதனை நடத்தும் திட்டம் 1972 ஆகஸ்ட் முதல் நிறைவேற்றப்படுகிறது. இது ஒரு முன்னோடித் திட்டமாகும். இத்திட்டத்தின் கீழ் சென்னை மாநகரிலுள்ள 6 இலட்சம் பள்ளிக் குழந்தைகளில் I ஆவது VI ஆவது வகுப்பு

1975 மார்ச் 27]

படிக்கும் 1.2 இலட்சம் குழந்தைகளுக்கு உடல் நலச் சோதனை செய்யப்பட்டுள்ளது. இம் மாநகர் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவும் குழந்தை நோய் மருத்துவ உதவி பேராசிரியரைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவின் பொறுப்பில் உள்ளது. இவ்வாண்டில் 320 மாநகராட்சிப் பள்ளிகளில் பயிலும் சுமார் 27,000 பள்ளிக் குழந்தைகளுக்கு உடல் நல மருத்துவச் சோதனை செய்யப்பட்டுள்ளது. அடுத்த கல்வி ஆண்டில், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிக் குழந்தைகளுக்கு மருத்துவச் சோதனை அளிக்கப்படும்.

(3) **உடல் நலக் கல்விக் கழகம்.**—மாநில உடல்நலக் கல்விக் கழகம் 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கழகம் சீராக வளர்ந்து வந்துள்ளது. இந்திய அரசு பரிவுரை செய்த ஐந்து பிரிவுகளைத் தற்போது இக்கழகம் கொண்டுள்ளது.

1. நிர்வாக—ஆய்வுப் பிரிவு.

2. பிரச்சார சாதனப் பிரிவு.

3. நேரிட ஆய்வு—கட்புல விளக்கப் பிரிவு.

4. மாணவர் உடல்நலக் கல்விப் பிரிவு.

5. உடல்நலக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.

தங்களுடைய நடவடிக்கை, முயற்சிகள் வாயிலாக சிறந்த ஆரோக்கியமுள்ள வாழ்க்கை நிலைகளை அடைய மக்களுக்கு உதவி செய்வது உடல்நலக் கல்விக் கழகத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இது தவிர, ஆரோக்கிய வாழ்வுக்குரிய பொறுப்பை ஏற்க மக்களுக்கு அறிவூட்டுவது இதன் குறிக்கோளாகும். இந்த குறிக்கோளினை எய்துவதற்கு, இம் மாநிலத்தின் நல்வாழ்வுத் திட்டங்கள், கொள்கைகள் இவற்றில் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் ஒருசேரப் பெறும் நோக்கத்துடன், உடல் நலக் கல்விக் கழகம், பல்வேறு பயிற்சியையும் கல்வி நடவடிக்கைகளையும் திட்டமிட்டு நிறைவேற்றுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்

மாநில உடல் நலக் கல்விக்கழகம், தொடக்கச் சுகாதார நிலையப் பணியாளர்களுக்குப் பணியிருப்புப் பயிற்சிகளை நடத்திவருகிறது. இதுவரை, 32 தொகுதிகளாக நடத்திய பயிற்சித் திட்டங்களின் மூலமாக எல்லா மாவட்டங்களுக்கும் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளது. 1974-75-ல், மூன்று தொகுதி பயிற்சியாளர்கள் பயிற்சி முடித்துள்ளனர்.

(a) **நிர்வாகம்—ஆய்வுப் பிரிவு.**—தொடக்கச் சுகாதார நிலையத்திற்குச் சிகிச்சைக்காக வருகைதருவோர் பற்றிய ஆய்வில் இப்பிரிவு தற்போது முழு நாட்டத்தையும் செலுத்தி வருகிறது. ஐம்பத்தைந்து தொடக்கச் சுகாதார நிலையங்களிலிருந்து புள்ளி விவரங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவை, பகுப்பாய்வு செய்யப் பட்டு வருகின்றன.

